# மத்திய வணிகம்

## பவள விழா

1920



1995

## சிறப்பு மலர்

## 75 th ANNIVERSARY

LIBRARY
STACKS

2007
2011

# மத்திய வணிகம்

373 JAF
S



## வர்த்தக மாணவ மன்றம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

STACKS
UNIVERSITY OF JAFFNA LIBRARY



**1994 - 1995**

S.கமலக்கண்ணன்

T.ராஜ்குமார்

N.A - II



கலைப் புலவர்

க. நவரத்தினம்



திரு. க. கந்தசாமி

# சமர்ப்பணம்

வர்த்தக மாணவ மன்றம்

இவர்களுடன்..................................

மண்ணிற்காக உயிர் நீத்த

அத்தனை பேருக்கும்------

st1/sou/18

☞ 1


1. கல்லூரிக்கீதம்

2. அதிபரின் ஆசிச்செய்தி

3. யாழ்ப்பாணக் கல்விப்பணிப்பாளரின் ஆசிச்செய்தி

4. வ.க. பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆசிச்செய்தி

5. கலாநிதி.என். எதிர்வீரசிங்கம் அவர்களின்ஆசிச்செய்தி

6. திரு. க. ஜெயரட்ணம் அவர்களின் ஆசிச்செய்தி

7. மன்றக்காப்பாளரின் ஆசிச்செய்தி

8. இதழாசிரியர் இதயத்திலிருந்து.

9. நடப்பாண்டு செயற்குழு

10. எமது கல்லூரியில் வர்த்தகத்துறையின் ஓர்கண்ணோட்டம்.

11. வர்த்தகத்துறை முன்னோடி

12. இலட்சனையின் இலட்சியம்.

13. மத்தியம் எற்றிய வர்த்தகத் தீபம்.

11

அ. வர்த்தகம்

1. பண்டங்கள் சேவைகள்வரி
2. இலங்கையில் பங்குச்சந்தை
3. மக்கள் மயப்படுத்தலும் இலங்கை அரசாங்கமும்.
4. யாழ்ப்பாணத்தில் வங்கியியல் வரலாறு.
5. வர்த்தகத்தின் தொடர்பாடலின் இனைப்பு
6. பொதிகட்டல்

ஆ. கணக்கியல்

1. வாடகைக் கொள்வனவு.
2. நிதிப்பகுப்பாய்வில் சில விகிதங்கள்
3. கணக்கியல் எண்ணக்கருக்கள்

இ. பொருளியல்

1. பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் தலையீடு
2. திறந்த பொருளாதாரக் கொள்கையும் இலங்கையும்.

ஈ. அளவையியல்

1. வெண்வரைபடம்
2. தூய அறுதி நியாயத்தொடை விதிகள்
3. உடன் அனுமானம்

உ. இந்து நாகரீகம்

1. பகவத் கீதையும் அது வலியுறுத்தும் முக்கியமான மூன்று யோகங்களும்

ஊ. புவியியல்

111

1. தமிழ்த் தட்டெழுத்தச்சின் தந்தை.

2. பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர்.

3. அன்பளிப்பாளர்கள்.

4. நன்றிகள் ஆயிரம் உங்களுக்கே!

# கல்லூரிக் கீதம்

ஈரம் திடலில் எதிர்க்கும் காற்று
நேரம் மணித்துளி பத்தினும் ஆட ;
ஆர்வம் குறையா தாடிடு மத்தி
ஓர்மம் நேற்றுள வெற்றியில் ஊட்டு.
வந்தது நேரம் ஒன்றிய செயற்கு ;
பந்தினை மாறு ஆளுக்கு ஆளாய் ;
என்றுமே சுயநலம் பிரிவினை நீக்கு
நன்றிது ஆட்டம் முன்தொடர் சான்று

இணைந்து பாடல்

மத்தியம் நித்தியம் கலையகம் காக்க
ஒத்திசை வாகக் களத்தினைக் கொள்ளு ;
மெத்தென உறுதி சுத்தமாய்ப் பேணு
மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்

வாழ்வெறும் தளத்தில் தளம்பிடும் போது,
ஆழ்கநின் கீர்த்தி அகமெய் ஒளிர்க,
ஆடிடு மத்தி அறுதினம் முயல்க.
கூடிடு கருணை குவிசுடர் கனிய ;
உன்னவர் தோழர் உள்ளனர் முன்னால்
அன்னவர் அகலப் பரந்துள போதும்;
உன்னது பள்ளி அன்னவள் அரும்புகள்,
எண்ணிறில் தொண்டில் இன்பம் ஏகாந்தம்!

இணைந்து பாடல்

தமிழாக்கம்: நயினை கவிஞர்.நா.க.சண்முகநாதபிள்ளை.



எங்கள் அதிபர்

திரு. நா. க. சண்முகநாதபிள்ளை

*B.Sc, Dip. Ed..SLEAS Cl. ii, Teacher Counsellor*

# மேன்மையுற வாழியவே!

கவிஞர். திரு. நாக. க. சண்முகநாத பிள்ளை
அதிபர்
யாழ் மத்திய கல்லூரி.

வர்த்தகம் பொருளியல் தட்டச்சுச் சுருக்கெழுத்து
"மத்தியில்" தொடங்கி ஆண்டெழுபத் தைந்தாச்சு
உத்தமர் உயர்கலைப் புலவர்நவ ரெத்தினத்தார்
வைத்ததோர் கால்கோள் வளர்ந்தெழுந்து ஆல்போல
இத்தனை நாளாய் இனிய நிழல் பரப்பிவர
எத்தனை துயரிலும் இதன் கீழே இருந்துயர்ந்தோம்
சித்தம் அழகியராய் மாணவர்தம் திறன்களெலாம்
மெத்தச் சிறப்புற்று மேன்மையுற வாழியவே!
முன்னாள் அதிபர் பலபேரின் செயற்பாடும்
இன்னாள் எழுச்சி ஏற்றமுற ஊக்குகவே!



மன்ற காப்பாளர்

திரு. சு. நடராஜா (B.Com(Hons), B.A. Dip-in-Ed)



கலை வர்த்தக ஆசிரியர்கள்

(பெயர்கள் மறுபுறத்தில்)

# கலை வர்த்தக ஆசிரியர்கள்

1. செல்வி. பொன். செல்லையா
2. திருமதி. இ. பாலசுந்தரம்பிள்ளை
3. திரு. க. நாகேந்திரம்
4. திரு. சு. நடராஜா
5. செல்வி. த. இராமலிங்கம்
6. திரு. ஆ. சௌந்தரலிங்கம்
7. திரு. ஐ. புவனேந்திரன்
8. திரு. ப. திருஞானசம்பந்தன்
9. செல்வி. வி. குமாரசாமி
10. திருமதி. சா. மனோகரதாஸ்
11. திருமதி. சா. விஜியரட்ணம்
12. திரு. செ. பத்மநாதன்
13. திரு. ம. மரியதாஸ்
14. செல்வி. பெ. யூக்கிறிஸ்ரின்
15. திருமதி. பெ. அம்புறோஸ்

# யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கல்வித் திணைக்களம்
வலயம் - 1
யாழ்ப்பாணம்.
21.03.1995.

செல்வி. தி. பெரியதம்பி
கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் 1.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் வர்த்தகக் கல்வி புகட்டலின் பவள விழாவைக் கொண்டாடும் மத்திய கல்லூரி வர்த்தக மாணவர் மன்றம் வெளியிடவுள்ள பவள விழா மலருக்கு வாழ்த்துச் செய்தியனுப்புவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்லூரிப் பாடத்திட்டத்தில் வர்த்தகக் கல்வி முக்கிய இடத்தைப் பெற்றிராத - நாடுவாரற்றிருந்த இந்நூற்றான்டின் முற்பகுதியில் - 1920 ஆம் ஆண்டில் வர்த்தகக் கல்வியைத் துணிந்து புகுத்தி, கட்டிவளர்த்த பெருமை கல்வி, விளையாட்டுத்துறைளில் பல விடயங்களின் முன்னோடியாகத் திகளும் யாழ் மத்திய கல்லூரியையும் வர்த்தகக் கல்வியின் தந்தையாகிய அமரர் கலைப்புலவர் திரு. கே. நவரத்தினம் அவர்களையுமே சாரும். யாழ் மத்திய கல்லூரியின் அடிச்சுவட்டில் இன்று பல பள்ளிகளில் வர்த்தகப் பாடங்கள் புகட்டப்படுகின்றன.

அரச, மற்றும் தனியார் துறைகளுக்கு வேண்டிய அலுவலர்களைப் புறந்தருதலே நோக்கமாக அமைந்த கல்வித் திட்டத்தில் புதுமை புகுத்தி தொழிற் கல்வியை அறிமுகப்படுத்திய மத்திய கல்லூரியில் தொழிற் கல்வியாகிய வர்த்தகக் கல்வியைப் பயின்ற பலர் பல துறைகளிலும் புகழ்பெற்று விளங்குவது கண்கூடாகும்.

வர்த்தகக் கல்வித்துறைக்கு ஈடு இணையற்ற சேவையாற்றிய யாழ் மத்திய கல்லூரி, வர்த்தகக் கல்வியூட்டலின் பவள விழாவை இவ்வாண்டு கொண்டாடுவது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

வர்த்தகக் கல்வியின் கலங்கரை விளக்கமான இக்கல்லூரியின் பணி இடையூறின்றித் தொடர அருளுமாறு இறைவனை இறைஞ்சுகின்றேன். கலைப்புலவர் அமரர் திரு. க. நவரத்தினம் ஐயா அவர்களின் வழிகாட்டலை இவ்வேளை நினைவுகூர்வதுடன் அவர்தம் அடிச்சுவட்டில் இப்பணி நடைபெறுவதற்கு வேண்டிய வழிகாட்டலை வழங்கும் கல்லூரி அதிபரையும் வர்த்தக ஆசிரியர்களையும் உளமாரப் பாராட்டுகின்றேன்.

இம் மலர், பவளவிழா மலருடன் நின்று விடாது, ஆண்டாண்டு தோறும் மலர்ந்து வணிக மாணாக்கருக்குத் தொடர்ந்து அறிவொளி பரப்ப வாழ்த்துகின்றேன்.

# திரு.வ.க. பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆசிச் செய்தி

*கல்வித் திணைக்களம்*
*யாழ்ப்பாணம்*
*16.04.1995*

*திரு.வ.க. பாலசுப்பிரமணியம்*
*சிறப்பலுவலர் (வணிகவியல்)*

வணிகவியற் கல்வி தமிழ் மொழி மூலம் எம் மண்ணில் வித்திடப்பட்டு இவ்வாண்டுடன் 75 ஆண்டுகளாகின்றன. யாழ். மத்திய கல்லூரி நிகழ்த்திய இச் சரித்திரச் சாதனையை நினைவு கூர்ந்து பவள விழா மலரை வெளியிட முனைந்துள்ள வர்த்தக மாணவ மன்றத்தினரின் பணிக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பதினான்கு ஆண்டுகாலமாக வணிகவியல் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு நல்ல தொரு களமாக இக் கல்லூரி அமைந்து கற்றல் - கற்பித்தல் அனுபவத்தையும், ஆளுமையையும் நல்கி என்னை வளர்த்த கலைக் கோவிலாகும். தட்டச்சுக் கூடம், பாடசாலை வங்கி, பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம், வணிகவாய்வு கூடம், வர்த்தகக் கல்வியின் பொன்விழா மலர், மத்திய வணிகச் சஞ்சிகைகள் என்பன கல்லூரி நிர்வாகம் வணிகக் கல்வி வளர்ச்சிக்காக அயராது உழைத்த உழைப்பின் நினைவுச் சின்னங்களாகும். மென்மேலும் இப்பணி தொடர்ந்து நம் தமிழ் சமுதாயத்திற்கு நற்பயன் நல்குமென எதிர்பார்க்கின்றேன்.

காலத்ததின் தேவையை உணர்ந்து, பயனுறுதி மிக்க ஆக்கங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் இம்மலர் வணிகத்துறை மாணவர்களுக்கும், கல்வியாளர்களுக்கும் பெரும் பயன் அளிக்குமென்பதில் ஐயமில்லை. மேலும் இத்தகு அரிய பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்றுமுள இனிய தமிழின் காலச் சுவடுகளில் இப்பவளவிழா மலர் தடம்பதித்துச் சென்று மணம் வீசி, புகழ் பரப்ப வாழ்த்தி எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சுகின்றேன்.

# 75 th Anniversary Message

**Dr. N. Ethirveerasingam**
*Visiting lecturer*
*Faculty of agriculture*
*University of Jaffna*

I thank those who 75 years ago had the foresight and strength of conviction to offer to students, instruction in Bookkeeping, typing and other commercial skills. Unfortunately such instruction is not given even today at higher grades to all students. Skills in commerce is a fundamental requirement to all heads of families and all individuals in their daily life.

In Sri Lanka Secondary schools function as a nursery for universities. As a nursery they are having only two percent success rate. If schools were business enterprises they would have been bankrupt long time ago. It is important for students, parents, teachers, administrators and governments to joint together and improve the efficiency of each school so that each student has one or more employable skills.

I wish the commerce department of J.C.C all the best for it to improve and expand to serve the students and the nation.

# தொழில் நுட்பக் கல்லூரி அதிபரின்
# மனம் நிறைந்த ஆசிகள்

*திரு. க. ஜெயரெட்ணம்*
*அதிபர்*
*யாழ் தொழில்நுட்பக் கல்லூரி*
*யாழ்ப்பாணம்*

யாழ் மத்திய கல்லூரி வணிக மன்றம் அதனின் பவள விழாவினை கொண்டாடும் முகமாக வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியினை கொடுப்பதில் நான் பெருமையும் பெருமிதமும் கொள்கின்றேன். வணிகக் கல்வி இன்று இலங்கையில் மட்டுமல்லாது உலகம் பூராவும் மதிப்பும் சிறப்பும் பெற்று வருகின்றது. அநேக உலகப் பல்கலைக் கழகங்களில் வணிக முகாமைத் துறைகளும் பீடங்களும் தனியாக அமைக்கப்பட்டு நிர்வகிக்கப் படுகின்றது.

யாழ் நகரை பொறுத்த மட்டில் யாழ் மத்திய கல்லூரியும் வர்த்தக் கல்வியின் முன்னோடிகளில் ஒன்றாகும். குறிப்பாக கலைப்புலவர் திரு. க. நவரட்ணம் அவர்களின் ஆரம்ப பங்களிப்பினை நினைவு கூர நாம் கடமைப்பட்டுள்ளோம். யாழ் மத்திய கல்லூரியில் வணிகக் கல்வி பயின்று வெளியேறிய மாணவர்கள் இன்று வர்த்தகப் பொறுப்புக்களிலும் சிறந்து விளங்குவதனை நாம் இன்று காணக்கூடியதாக உள்ளது. வணிகக் கல்வியினுடைய நோக்கம் தேர்வில் மாணவர்களை அதிகபுள்ளிகள் பெறச் செய்வதும், பல்கலைக் கழகம் செல்ல வைப்பது மட்டுமல்லாது எந்தத் துறையில் செயற்பட்டாலும் பல்கலைக் கழகம் செல்லாமல் மற்ற துறையிகளில் செயற்பட்டாலும் அம்மாணவர்கள் செயற்திறன் உள்ளவர்களாகவும் சிறந்தவர்களாகவும் நல்ல பண்பாளர்களாகவும் செயற்படக்கூடிய வகையில் எதிர் காலத்தில் யாழ் மத்திய கல்லூரியின் வணிகக் கல்வி அமைய வேண்டுமென எனது வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

## மன்றக் காப்பாளரின் கரம் குவித்த ஆசிகள்.

துறைசார் கல்வியில் வர்த்தகத் துறை மிகவும் துரிதவளர்ச்சியடைந்து வருகின்றது. நுட்பம் நிறைந்த பல்லாயிரம் தொழில்முயற்சிகளை உள்ளடக்கியது இத்துறையாகும். தொழில் நுட்பம் செறிந்த இத்துறை வளர்ச்சியால் பல்வேறுபட்ட விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அபிவிருத்தியடைந்த நாடுகள் தமது வளங்களை உச்சப்பயன் நோக்கிய செயற்பாட்டில் ஒழுங்கமைத்து வர்த்தகத்துறை மூலம் நாட்டு வளர்ச்சியையும் சமூக அபிவிருத்தியையும் பெற்று வருகின்றன.

எமது நாட்டில் வர்த்தகக் கல்வி ஏட்டுக்கல்வியாகவே உள்ளது. இந்நிலை மாறி நுட்பம் நிறைந்த பல்தொழில் புனையும் தொழிற் கல்வியாக வளர்ச்சியுற வேண்டும். எம் மண்ணின் வளத்தை இனங்கண்டு வள ஒழுங்கமைப்பு செய்வதன் மூலம் பல்லாயிரம் தொழில்களை உருவாக்கும் உயர்கல்வியாக உருவாக்கப்பட வேண்டும். அன்னியரின் அடிவருடும் கல்விச் சிந்தனை தகர்க்கப்பட்டு எம்மண்ணின் அடி வருடி புத்தாக்கங்கள் பல செய்யும் உயர்கல்விச்சிந்தனைகள் வளர்வதற்கேற்றவாறு கல்விக்கட்டமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

ஆரம்பகல்வி முதல் பல்கலைக்கழக கல்வி வரை பயன்படு கல்வியாக வர்த்தகக் கல்வி வளர்ச்சியடையவேண்டும். ஆரம்பக்கல்வியில் சூழலிலுள்ள வளத்தை உணர்த்தும் கல்விச் சிந்தனைத் தீபம் ஏற்றப்பட வேண்டும். மண்ணின் மகத்துவத்தினை புரிந்து நுண் தொழில் புரியும் நுண்மதி வளர்க்கப்படுவதன் மூலம் புத்தாக்கம் ஆயிரமாயிரம் உருவாக உரமிடும் கல்வியாக வர்த்தகக் கல்வி வளமூட்டப்பட வேண்டுமென கல்வியாளர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அறிவுப்பசி கொண்ட அத்தனை பேருக்கும் அறிவுரை வழங்காது அரும் பணியாற்றி உழைப்பாக்கம் செய்யும் நன்மனப்பாங்கு வளர்த்திட வேண்டும் என எம்மன்றத்தின் சார்பில் அன்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

எம்மன்றத்தின் பவள விழா சிறப்பு மலர் பொலிவுற்று வெளிவர நல்லாசி கூறுகின்றேன். மத்தியவணிகம் என்னும் சொற்பத மலர் அறிவொளி வீசி தொடர்ந்து வர வேண்டுமென ஆனைமுகன் பாதமலர் பணிந்து வாழ்த்துகின்றேன்.

# இதழாசிரியர் இதயத்திலிருந்து

இன்றைய் நெருக்கடியான ஓர் சூழ்நிலையிலும் மத்திய வணிகம் இதழ் மூன்று பல இடர்களையும் தாண்டி வீறு நடை போட்டு வந்து விட்டது. இவ்வாண்டுடன் மத்தியின் வர்த்தகக் கல்வி 75வது அகவை பூர்த்தி செய்கின்றது. இந்த வகையில் மத்திய வணிகம் இதழ் மூன்றை பவள விழா சிறப்பு மலராக வெளியிட்டு உங்கள் சிந்தனைக்கு விருந்தாக்குவதில் நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இப்பவள விழா சிறப்பு மலர் மத்தியின் பழைய மாணவர்கள் ஆக்கிய ஆக்கங்களையும் மாணவர்களின் சிந்தனைத் திறனை வளர்ப்பதற்காக மத்தியின் சிறப்பு மிக்க ஆசிரியர்களால் எழுதப் பட்ட ஆக்கங்களையும், மத்தியின் மாணவர்களால் சிறப்பாக ஆக்கப்பட்ட ஆக்கங்களையும் உள்ளடக்கி உள்ளது.

இந்தவகையில் இம்மலர் எல்லோரின் சிந்தனைக்கும் விருந்தாகி என்றும் வாடா மலராக பூத்துக் குலுங்க வேண்டும் என்பதே எமது நீண்ட நாள் கனவாகும்

*S. கமலக்கண்ணன்.*
*T. ராஜ்குமார்.*

# மன்ற செயற்குழு உறுப்பினர்

## 1995 - 1996

| | | |
|---|---|---|
| காப்பாளர் | :- | திரு.நா.க. சண்முகநாத பிள்ளை |
| உபகாப்பாளர்கள் | :- | திரு. சு. நடராசா.<br>திரு. ஆ. சௌந்தரலிங்கம் |
| தலைவர் | :- | செல்வன் :- தி. நடனசபேசன் |
| உபதலைவர் | :- | செல்வன். சி. சிறீதரன் |
| செயலாளர் | :- | செல்வன். கோ. முரளிதரன் |
| பொருளாளர் | :- | செல்வன் பா. நந்திகுமார் |
| பத்திராதிபர்கள் | :- | செல்வன் :- செ. கமலக்கண்ணன்<br>செல்வன் . தி. ராஜ்குமார் |
| விளம்பரப்பொறுப்பாளர்கள் | :- | செல்வன். பா. தனராஜ்<br>செல்வன். து. ஜெயானந்தன் |
| பிரமுகர்கள் | :- | செல்வன். இ சசிக்குமார்<br>செல்வன். க. விஜயபாலா<br>செல்வன். தி. காண்டீபன் |

# எமது கல்லூரியில் வர்த்தகத் துறையின் ஓர் கண்ணோட்டம்.

செல்வி.பொன்.செல்லையா
சிரேஷ்ட வர்த்தக ஆசிரியை
யாழ் மத்திய கல்லூரி

இலங்கையின் பிரசித்தி பெற்ற கல்லூரிகளில் ஒன்றாகிய யாழ்மத்திய கல்லூரி யாழ் நகரின் வர்த்தகக் கல்வியின் பிறப்பிடமாகி எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவை பவள விழாவாகக் கொண்டாடும் இவ்வேளையில் கல்லூரியின் வர்த்தகத்துறையை சற்று முன் நோக்குவோம்.

1920ல் எமது கல்லூரியின் அதிபராக இருந்த அருட்சகோதரர் புள்ளோவினால் யாழ்மத்திய கல்லூரியின் வர்த்தகத் துறை ஆரம்பிக்கப்பட்டது. அந்நாட்களில் வர்த்தகத்துறை சார் கல்விக்குப் பொறுப்பாக கலைப்புலவர் திரு.கே.நவரட்ணம் கடமையாற்றினார். அக்காலத்தில் எட்டாம் வகுப்பு சித்தியடைந்த மாணவர்களில் கலை,விஞ்ஞானப் பாடங்களில் நாட்டம் இன்றிக் காணப்பட்டவர்கள் வர்த்தகப் பாடங்களை மிகவும் விரும்பிக் கற்றார்கள். வர்த்தகத் துறையில் வர்த்தகமும் நிதியும், கணக்கு பதியியலும் கணக்கியியலும்,வர்த்தக எண்கணிதம், வர்த்தகப்புவியியல்,சுருக்கெழுத்து, தட்டெழுத்து ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

வர்த்தகப் பிரிவுக்கென கல்லூரிக் கட்டிடத்தில் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆரம்ப காலத்தில் ஆங்கில மொழியிலேயே வர்த்தகப் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. இலண்டன் வர்த்தகக் கழகம், இலங்கை வர்த்தகக் கழகப்பரீட்சைகளுக்கு மாணவர்கள் தோற்றினார்கள். இப் பரீட்சைகள் இலங்கையில் நிறுத்தப்பட்டதும் இலங்கை சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சைக்கு வர்த்தக மாணவர்களும் தோற்றினார்கள். பின்னர் க.பொ.த சாதாரண பரீட்சை நடைமுறைக்கு வந்ததும் அப்பரீட்சைக்கு வர்த்தக மாணவர்கள் தோற்றினார்கள்.

கலைப்புலவர் திரு.கே.நவரட்ணம் முப்பத்தெட்டு ஆண்டுகளை அதாவது ஆயிரத்துத்தொளாயிரத்து ஐம்பத்தெட்டுவரை வர்த்தகவியற் பாடங்களை சிறந்த முறையில் கற்பித்து இத்துறையில் பெரும் பணியாற்றியமையினால் வர்த்தகக் கல்வியின் பிதாவாகப் போற்றப்படுகிறார். ஆரம்பகாலத்தில் அவருடைய மாணவர்களாக இருந்தோர் கணக்காளராகவும் சுருக்கெழுத்தாளராகவும் திகழ்கிறார்கள் திறமைச் சித்தியடைந்தோரில் திரு. எ. நமசிவாயம், திரு நடராஜா, திரு.கே. குமார வேலு ஆகியோர் பெருமைப்படக்கூடிய பழைய மாணவர்களாவர். கலைப்புலவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் இன்றும் உயர்பதவிகளில் இருப்பதையிட்டு பெருமைப்படுகின்றோம். அவரிடம் கல்வி பயின்று இலண்டன் வர்த்தகப்பட்டப் பரீட்சையில் முதல் முதலில் சித்தியடைந்தவர் திரு. எ. நமசிவாயம் என்பது குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் வர்த்தகப் பாடநூல்கள் தமிழில் இல்லாமையால் கலைப்புலவர் அவர்கள் ஆரம்ப கணக்குப் பதிவியல், உயர்தராதர கணக்குப் பதிவியல்,ஆரம்ப வணிகம், இக்கால வாணிபம் ஆகிய நூல்களைத் தமிழில் எழுதி வெளியிட்டு மாணவர்களுக்கு உதவினார். அவருடைய நூல்கள் இன்றும் பாவனையில் இருப்பதையிட்டு பெருமைப்படுகின்றோம். கலைப்புலவர் வர்த்தக கலை ஆசிரியராக மட்டுமன்றி மாணவர்களுக்கு சமய,சமூக, கலாச்சார ஆசானாகவும் இருந்து வழிநடத்தினார். அவருடைய அரும்பணியை இன்றும் நினைவு கூர்வோமாக.

1956ல் கல்லூரிப் பழைய மாணவனான திரு.கை.கந்தசாமி வர்த்தகப்பாட உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1958ல் கலைப்புலவர் திரு.கே.நவரட்ணம் முப்பத்தெட்டு வருடகால சேவையை பூர்த்தி செய்து மத்தியகல்லூரியின் முதலாவது வர்த்தக ஆசானாக சேவையிலிருந்து இளைப்பாறினார். அப்பொழுது பழைய மாணவரான திரு.எஸ்.டி.ஜெயசிங்கம் இலண்டன் (B.Com) வர்த்தக இயல் பட்டம் பெற்றவர் மத்திய கல்லூரியில் வர்த்தக ஆசானாக இணைந்து கொண்டார். 1960 ஆடி திரு.எஸ்.டி.ஜெயசிங்கம் யாழ் தொழில் நுட்பக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளராக பதவியேற்றார். அந்நாட்கள் திரு.இ.ரி.இராஜரட்ணம் விசேட பயிற்சி பெற்றவர் கணக்குப் பதிவியல் ஆசிரியராகவும் திரு.என்.எஸ்.இரத்தினசிங்கம், திரு.எஸ்.எக்ஸ்.எல்.அல்போன்ஸ்சும் ஆரம்ப வணிகத்தை சிறிது காலம் கற்பித்தனர். 1964ல் திரு.கே.கந்தசாமி பலாலி ஆசிரிய கலாசாலைக்கு வர்த்தகப் பயிற்சிக்காக செல்ல

திரு.என்.பாலசிங்கம் இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி உயர்வணிக தராதரத்துடன் வர்த்தக ஆசிரியராக இணைந்து கொண்டார். 1967ல் திரு.கே.கந்தசாமி ஆசிரியப்பயிற்சியை பூர்த்தி செய்து விசேட பயிற்சி பெற்ற வர்த்தக ஆசிரியராக மீண்டும் இணைந்து கொண்டார். 1968ல் வ.க.பாலசுப்பிரமணியம் விசேட பயிற்சி பெற்ற வர்த்தக ஆசிரியராக மத்திய கல்லூரியில் இணைந்து கொண்டார்.

இக்காலப்பகுதியில் கல்வித் திணைக்களத்தால் வர்த்தகக் கல்விக்கு வேண்டிய தளபாடங்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டன. குறிப்பாக தமிழ்த்தட்டச்சுப் பொறிகளும் பெறப்பட்டன. 1969ல் சுருக்கெழுத்து தட்டெழுத்து கற்பிப்பதற்கென தனிப்பட்ட அறைகளும் கட்டப்பட்டது. பகுதி நேர வர்த்தக ஆசிரியராக க.பொ.த உயர்தர வகுப்பில் வர்த்தகம் கற்பிப்பதற்கென திரு.சி.ஓ.வி.கே. முதலியார் (B.Com) நியமிக்கப்பட்டார். 1969 ஆடி மாதத்தில் பண்டாரவளைக்கு நியமனம் பெற்றுச் செல்ல திரு.ஆர்.இலங்காதுரை (B.Com) க.பொ.த உயர்தர வகுப்பு வர்த்தக ஆசிரியராக கடமையேற்றார். 1969ல் க.பொ.த சாதாரண பரீட்சையில் திருப்திகரமான பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றன. முதன்முதலாக 1969 சித்திரையில் நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் திரு.எஸ்.குகனேந்திரன், கே.சிவராஜா ஆகிய இரு மாணவர்கள் திறமையான பெறுபேறுகளைப் பெற்று கனிஷ்ட பல்கலைக்கழகம் பலாலிக்கு உயர்கல்விக்காகச் சென்றனர். 1970இல் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றிய பி.பேபின், என்.முகமட்அலி வர்த்தகத்தில் விசேட சித்தியும் கணக்கியலில் திறமைச்சித்தியையும் பெற்றனர். எம்.சபுறுடின் வர்த்தகத்தில் விசேடசித்தியும், தமிழ் மொழியில் திறமைச்சித்தியும் பெற்றார். அக்காலத்தில் மூன்று பேர் நான்கு பாடங்களில் சித்தியும், ஐந்து பேர் மூன்று பாடங்களில் சித்தியும் அடைந்தனர். 1969இல் இராணியின் சாரணர்களாக தெரிவுசெய்யப்பட்ட நான்கு பேரும் வர்த்தகத்துறை மாணவர்கள் என்பதில் பெருமை கொள்கிறோம்.

1969 புரட்டாதி 28ம் தேதி அன்றைய அதிபர் திரு.இ. சபாலிங்கத்தால் வர்த்தக மாணவ மன்றம் அங்குராப்பணம் செய்யப்பட்டது. திரு.கே.கந்தசாமி உபபோசகராக நியமிக்கப்பட்டார். 1970ம் ஆண்டு(ஒக்டோபரில்) ஐப்பசியில் வர்த்தகத்துறையின் ஐம்பதாண்டு நிறைவை பொன்விழாவாக வர்த்தக மாணவ மன்றத்தினர் கொண்டாடினர். இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக கலாநிதி எஸ்.எல்.டி. சில்வாவும் சிறப்பு விருந்தினராக சி.ஏ.எம். கெக்குலாவேலவும் கலந்து கொண்டனர். வர்த்தகத்துறையின் ஆரம்ப கர்த்தாவாகிய கலைப்புலவர் திரு.கே.நவரத்தினம் அவர்களின் திருஉருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. இவ்விழாவிற்கென மேற்கொள்ளப்பட்ட பல போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

1971 தை மாதத்தில் உயர் வணிகதாரதரப் பத்திரமும் விசேட பயிற்சியும் பெற்ற செல்வி.பொ.செல்லையா யாழ்மத்திய கல்லூரியில் வர்த்தக ஆசிரியராக கடமையேற்றார். வணிக மாணவ மன்றத்தின் துணைக்காப்பாளராகவும் சேவையாற்றினார். 1972ல் திரு. கிருபானந்தன்(B.Com), திரு.ஆர்.ஏ.திலகரட்னம் (B.Com), திரு.நர்கராசா(B.Com) ஆகியோர் வர்த்தக பகுதி ஆசிரியராக இணைந்து கொண்டனர். திரு.கிருபானந்தன் யாழ் தொழில்நுட்ப கல்லூரிக்கு விரிவுரையாளராகச் செல்ல 1975இல் திரு.ஆ.சபாநாயகம் வர்த்தக ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1978இல் திரு.ஆ.சபாநாயகம் சோமஸ்கந்தாவுக்கும், திரு.எ.திலகரட்ணம் சம்பத்திரிசியார் கல்லூரிக்கும் மாற்றலாகிச் சென்றனர். 1979இல் திரு.எஸ்.உலகநாதன்(B.Com) எமது கல்லூரியில் வர்த்தக ஆசிரியராக குறுகிய காலம் சேவையாற்றினார்.

1975 புரட்டாதி பதினேழாம் திகதி பாடசாலை வங்கியொன்று தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணக்கிளை முகாமையாளரின் ஒத்துழைப்புடன் வடமாநிலக்கல்வி அதிபதி மஜித் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இவ் வங்கி மூலம் சேமிப்பு, சிக்கனம் ஆகிய பழக்கங்களையும் நிதிப்புழக்கம் தலைமைத்துவம்,பொறுப்புணர்ச்சி ஆகிய பண்புகளையும் மாணவர்களுக்கு பயிற்சியளிக்கக் கூடியதாக இருந்தது. திரு.வ.க.பாலசுப்பிரமணியம் ஆசிரியரின் மேற்பார்வையில் இவ்வங்கி செயற்படுத்தப்பட்டது. இவ்வங்கி மாணவர்களிடம் சேமிப்பு திட்டத்தை நடைமுறைப் படுத்தியது. 1981இல் திரு.வ.க.பாலசுப்பிரமணியம் கனகரத்னம் மகாவித்தியாலயத்திற்கு மாற்றலாகிச் செல்ல பாடசாலை வங்கியின் மேற்பார்வையாளராக செல்வி.பொ.செல்லையா கடமையாற்றினார்.

1980ல் திரு.என். சாம்பசிவம் B.Dev. Studies (Hons) விசேட வர்த்தகப்பயிற்சி பெற்றவர் ஆசிரியராக இணைந்து கொண்டார். இவர் வர்த்தக மாணவ மன்றப்பொறுப்பாசிரியராகக் கடமையாற்றி 1989இல் வெளிநாடு சென்றார். 1984இல் திரு.கே.கந்தசாமி மத்திய கல்லூரியின் உப அதிபராக நியமிக்கப்பட்டார்.

1988இல் திரு.சு..நடராஜா B.Com (Hons) வர்த்தகப் பகுதி ஆசிரியராகக் கடமையேற்றார். 1989 இல் வர்த்தக மாணவ மன்றத்தின் பொறுப்பாசிரியராக நியமிக்கப்பட்டார். 1989 இல் திரு .கே. நாகேந்திரம்,செல்வி.த.இராமலிங்கம் B.Com எமது கல்லூரியின் வர்த்தக ஆசிரியராக இணைந்து கொண்டனர்.

பொறுப்பாசிரியர் திரு.சு.நடராஜாவின் விடாமுயற்சியினாலும்,அயராத உழைப்பினாலும் வர்த்தக மாணவ மன்றம் துரித வளர்ச்சியடையத் தொடங்கியது. 1989 பங்குனி மாதத்தில் இம்மன்றம் தனக்கென தனியான யாப்பொன்றினை உருவாக்கி ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுடனும் செயற்படத் தொடங்கியது. 1989 மே மாதம் இம்மன்றம் இலட்சனை ஒன்றை உருவாக்கிக் கொண்டதுடன் தனக்கென தனியான நூல் நிலையத்தையும் ஆரம்பித்தது. இம் மன்றத்தின் மாணவர்கள் மன்றத்திற்காகவும்,கல்லூரிக்காகவும் பல்வேறு செயற்பாடுகளையாற்றி பெரும்புகழ் ஈட்டிக் கொண்டனர். 1990ம் ஆண்டில் மத்திய வணிகம் என்னும் முதலாவது வர்த்தக மலரை வெளியிட்டு தமது மன்றத்தின் செயற்பாட்டை மிகச் சிறந்ததாக்கிக் கொண்டனர். 1991ல் இடம் பெயர்ந்த மக்களுக்கு பல்வேறு விதமான உதவிகளையும், நன்கொடைகளும் வழங்கி யாழ்ப்பாண மக்களிடையே நற்பெயரை பெற்றுக் கொண்டனர். பாடசாலை மட்டத்தில் பட்டிமன்றங்கள்,கவியரங்குகள், விவாத மேடைகள்,கலந்துரையாடல்கள், கட்டுரைப்போட்டிகள் ஆகியவற்றை மிகச் சிறப்பாக நடத்தினர். 1992 யாழ் கோட்ட மட்ட கட்டுரைப்போட்டியை நடாத்தி அதில் வெற்றி பெற்றவர்களுக்கு வர்த்தகக் கிண்ணங்களையும், சான்றிதழ்களையும் வழங்கி வர்த்தக மாணவ மன்ற ஒன்று கூடல் நிகழ்வினையும் சிறப்பாகக் கொண்டாடினர். 1993ல் மத்திய வணிக மலர் - 2 வெளியீடு செய்யப்பட்டது. இம்மன்றத்தின் வளர்ச்சி மேன்மேலும் சிறப்புற்று வருகின்றது.

24-5-91இல் வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம் அவர்களால் எமது கல்லூரியில் கூட்டுறவுச் சங்கம்(வரைவுள்ளது) ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இச் சங்கத்தின் தலைவராக வர்த்தக ஆசிரியர் திரு.க.நாகேந்திரம் செயற்படுகிறார். வர்தககக் கல்வி பயிலும் மாணவர்கள் கூட்டுறவுக் கல்வியை செயல் ரீதியாகக் கற்றுக் கொள்ளவும். கோட்பாட்டு ரீதியாக கற்றுக் கொள்வதற்கும் வாய்ப்புக்கள் ஏற்பட்டது. மாணவர்களுக்கு தேவையான உபகரணங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுச்சங்கம் படிப்படியாக வளர்ச்சியுற்று மாணவ உணவு முத்திரைகளுக்கான பொருட்களை வழங்குவதில் தன்னை ஈடுபடுத்தியுள்ளது. 1992 க.பொ.த உயர்தர பரீட்சையில் எமது வர்த்தக மாணவ மன்ற உறுப்பினரும் உதவி சிரேஷ்ட மாணவ தலைவனுமாகிய செல்வன்.க.கிருஷ்ணகுமார் வர்த்தக பாடங்களில் 4 A பெறுபேறுகளைப் பெற்று வர்த்தகத் துறைக்கும் பாடசாலைக்கும் பெரும்புகழை ஈட்டிக் கொடுத்துள்ளார். 1993ம் ஆண்டு மாணவன் செல்வன்.டீன். ராஜ்குமார் 300 புள்ளிகளைப் பெற்று மேலும் கல்லூரிக்கு புகழினை ஈட்டிக் கொடுத்துள்ளார்.

வர்த்தக மாணவ மன்றம் தமது எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவினை பவளவிழா சிறப்புமலர் வெளியீட்டுடன் மேன்மேலும் சிறப்புற்று திகழ நாம் எல்லோரும் ஒருங்கிசைந்து செயற்படுவோமாக.

# வர்த்தகத் துறை முன்னோடி.


கலைப்புலவர் க. நவரத்தினம்
F.C.I(Birm), F.C.T.S (Inc),
Commercial Teacher's Diploma


கலைப்புலவர் க.நவரத்தினம் வர்த்தகத் துறையில் மேற்கூறிய சான்றிதழ்களை ஆங்கிலக் கல்வி மூலம் பெற்று 1920ம் ஆண்டு வர்த்தக ஆசிரியராக யாழ் மத்திய கல்லூரியில் நியமனம் பெற்றார். யாழ் மத்திய கல்லூரியில் வர்த்தகக் கல்வியை ஆரம்பித்து நன்கு வளர்த்த பெருமை கலைப்புலவர் க.நவரத்தினத்துக்கே உரியது. பொருளாதார வீழ்ச்சியால் மக்கள் வருந்திய காலப்பகுதியில் (1920-1930) யாழ்ப்பாண மக்களுக்கு வர்த்தகக் கல்வி மூலம் பொருளாதாரத்தை எப்படி வளர்க்கலாம் என்று வழிகாட்டிய பெரியார் கலைப்புலவர் க.நவரத்தினம். காலத்திற்கு ஏற்ற கல்வியை யாழ் மத்திய கல்லூரியில் வளர்த்த பெரியாரை நன்றி மறவாமல் இன்றைய மாணவர்களுக்கு அறிமுகம் செய்கிறது யாழ் மத்திய கல்லூரி வர்த்தக மாணவ மன்றம்.

யாழ் மத்திய கல்லூரிப் பழைய மாணவர்கள் இருவர் இக் கல்லூரியின் சிறப்புமிக்க ஆசிரியர்களாகப் பணியாற்றும் முக்கிய இடத்தைப் பெறுகின்றார்கள். ஒருவர் ஆறுமுக நாவலர் மற்றவர் கலைப்புலவர் க.நவரத்தினம். நாவலர் என்றால் ஆறுமுக நாவலரையே குறிக்கும். கலைப்புலவர் என்றால் வர்த்தக ஆசிரியர் க.நவரத்தினத்தையே குறிக்கும்."தக்கார் தகவிலர்"என்பது அவரவர் எச்சத்தால் அறியலாம் என்ற வள்ளுவர் வாக்குக்கு மணக்குடையவர் உரை எக்காலத்திற்கும் எந்த நாட்டிற்கும் பொருந்தும்.எச்சம் என்பது மணக்குடையவர் கருத்துப்படி அவரவர் செய்துவிட்டுச் சென்ற சேவையை மதிப்பிடும் பொழுது தக்கார் தகவிலர் என்ற உண்மை வெளியாகும். தமிழ் உரை நடை வளர்ச்சிக்கும் சைவசமய மறுமலர்ச்சிக்கும் ஆறுமுகநாவலர் சேவை தக்கார் என்ற வள்ளுவர் கூறிய உண்மையை நிரூபிக்கிறது. ஆங்கில மொழியில் வர்ததகக் கல்வியை கற்று தாம் கற்ற கல்லூரியிலேயே வர்த்தக ஆசிரியராகப் பணியாற்றி வர்த்தகக் கல்வியின் நோக்கத்தை நிறைவேற்றினார். கலைப்புலவர் க.நவரத்தினம் 1920ம் ஆண்டு தொடங்கி 1958ம் ஆண்டு வரையும் வர்த்தக ஆசானாகப் பணிபுரிந்து பல மத்திய கல்லூரி மாணவர்கள் வர்த்தகக் கல்வியில் முன்னேற வழிவகுத்தார்.

வர்த்தகக் கல்வியை வளர்ப்பதில் ஆர்வம் உள்ளவர்கள் கலை கைப்பணி வளர்ச்சிக்கும் சமய சமுதாய மறுமலர்ச்சிக்கும் ஆக்கமும், ஊக்கமும் அளித்தவர்களை வரலாற்றில் காண்பது அரிது. இந்த அரும் பெரும் செயலை யாழ் மத்திய கல்லூரி கலைப்புலவர் மூலம் நிலைநாட்டி இருக்கின்றது.

கலைப்புலவர் கலைப்பற்றும்,கலை வளர்ச்சிக்கும் ஆற்றிய சேவையையும் ஆராயும் பொழுது கலைப்புலவர் என்ற பட்டத்தைப் பெறத் தகுதியுள்ளவர் என்ற உண்மை தெளிவாகிறது. "சிற்பம்,ஓவியம்,சங்கீதம்,நடனம் ஆகியவற்றினுடாக நிலையுள்ள ஒளியின் வெண்கதிர்கள் தோன்றுவது கலை" என்ற வரைவிலக்கணம் தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. மத்திஜய கல்லூரியின் நூலக நிர்வாகி 1958ம் ஆண்டிலேயே கலைப்புலவரை இவ் வரைவிலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் கலைப்புலவர் க.நவரத்தினம் என்று கூறியுள்ளார். கலா நிலையம் என்ற ஸ்தாபனத்தை 1930ல் நிறுவி யாழ்ப்பாணத்தின் அறிவுக் களஞ்சியமாக்கினார். இலங்கையிலும், இந்தியாவிலும் உள்ள கலைக் கோயில்களின் படங்களை அழகுறப் பதிப்பித்து வெளியிட்டதால் சிற்பக்கலையின் சிறப்பை கலைஞர்கள் விமர்சனம் செய்ய வாய்ப்புக் கிடைத்தது. ஆறுமுக நாவலர் தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டையும் ,கலைப்புலவர்

சிற்பத்துக்குச் செய்த தொண்டையும் "கல்கி" ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி வெளிப்படுத்தியிருக்கிறார். இந்திய எழுத்தாளர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்கள் இவ்விருவரும்.

புலவர்கள் புலவர்களைப் பாராட்டுவது அருமை. வள்ளுவரை சமகாலப் புலவர்களும் பிற்காலப் புலவர்களும் "வள்ளுவமாலை" யில் பாடியிருக்கின்றார்கள். அதேபோல் கலைப்புலவரை புலவர்மணி .ஏ.பெரியதம்பிப்பிள்ளை தென்னாட்டில் வடநாட்டிற் திகழ் அழகுக் கலைகள் தென்னிலங்கைப் பொன்னாட்டில் வளர்த்தவர்." என்றும் நவாலியூர் சோ.நடராஜன் "முன்னால் கலாஜோதி முயன்ற பெருந்தொண்டை இந்நாள் நவரத்தினம் இயற்றினார்" என்றும் புகழ்ந்து பாடியிருக்கிறார்கள். இலங்கைப் புலவர்களின் புகழையும் இந்திய எழுத்தாளர்களின் பாராட்டுதலையும் பெற்றவர் கலைப்புலவர் க.நவரத்தினம் இவர் கலை, கைப்பணிக்கு ஆற்றிய பணிகளை கௌரவித்து தமிழ் அறிஞர்.சு.நடேசபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற "இலங்கையின் கலை வளர்ச்சி" என்னும் நூல் அரங்கேற்றத்தின் போது க.நவரத்தினத்திற்கு "கலைப்புலவர்" என்ற பொருத்தமான மதிப்பிற்குரிய பட்டத்தை வழங்கினார்கள்.

கல்வித்துறையிலும், கலைத்துறையிலும் பழமையில் உள்ள பொருத்தமான வற்றைத் தொடர்ந்து பின்பற்றியும் புதுமையானவற்றைப் பரீட்சித்தும் தெரிந்து எடுத்து பழமையானவற்றோடு சேர்த்துக் கல்வியும்,கலையும் தொடர வேண்டும் என்ற கொள்கையைப் பின்பற்றியவர் கலைப்புலவர். இக் கல்விக் கொள்கையும் கலை வளர்ச்சியும் யாழ் மத்திய கல்லூரியின் வரலாற்றை ஆராய்பவர்களுக்குத் தெளிவாகும். இந்தக் கல்வி வரலாற்றின் உண்மையை யாழ் மத்திய கல்லூரி உருவாக்கிய நாவலரும் கலைப்புலவரும் நிரூபித்து விட்டார்கள்.

தொகுப்பு:<br>
கலாநிதி. ஆ.சின்னத்தம்பி.<br>
ஓய்வு பெற்ற ஆங்கிலக் கல்வி அதிகாரியும்<br>
யா.ம.க முன்னாள் உப அதிபரும்.



கலை வர்த்தக வகுப்பறையில்....



தட்டச்சுக் கூடத்தில்........

# மன்ற செயற்குழு உறுப்பினர் 1995 - 1996



இருப்பவர்கள் வலமிருந்து இடமாக

திரு.சு.நடராசா, செல்வன் தி.நடனசபேசன், திரு.நா.க.சண்முகநாதபிள்ளை, செல்வன். கோ.முரளிதரன், செல்வன் பா.நந்திகுமார்.

நிற்பவர்கள் வலமிருந்து இடமாக

செல்வன். இ.சசிக்குமார், செல்வன். து.ஜெயானந்தன், செல்வன். பா.தனராஜ், செல்வன். க.விஜயபாலா, செல்வன் செ.கமலக்கண்ணன், செல்வன். சி.சிறீதரன், செல்வன். தி.ராஜ்குமார்.

# இலட்சனையின் இலட்சியம்

திரு. சு - நடராஜா
மன்றக் காப்பாளர்

எமது மன்றத்தின் இலட்சனை 1989ம் ஆண்டு அதிபரின் அனுமதியுடன் பொறுப்பாசிரியரின் மேற்பார்வையில் மன்ற உறுப்பினர்களால் உருவாக்கப்பட்டது.

இலட்சனை காட்டும் இலட்சியம்

பாடசாலையின் கட்டுக் கோப்புக்கும், நல்லொழுக்கத்திற்கும், மரபுகட்கும் உட்பட கல்வியும், இலட்சியமும் வளர்க்கப்படுமென்பதினை வெளியமைப்புக் காட்டுகின்றது. வெளியமைப்பில் காட்டப்படும் சர்வதேச நாணய அலகுகளும் வடிவமைப்புகளும் எமது வர்த்தக கல்வியில் உள்ளடக்கப்படும் விடயங்களையும், சகல நிலைகளிலும் வர்த்தகக் கல்வியின் தொடர்பு இணைக்கப்பட்டு இருப்பதனையும் எல்லாச் செயற்பாடுகளிலும் கட்டுப்பாடும் ஒழுங்கும் இன்றியமையாததென்பதனையும் எடுத்துக் காட்டுகின்றன.

உள்ளமைப்பில் இத்துறையில் கற்கும் மாணவர்கள் கல்வியிலும், வாழ்விலும் நீதிக்கு தலைவணங்குபவர்களாகவும் சமநிலை செயற்பாடு கொண்டவர்களாகவும், பரந்த அறிவு, மனப்பாங்கு கொண்டவர்களாகவும் வாழ வேண்டுமென்பதை எடுத்துக் காட்டுகின்றது. கல்வியொளி பெற்ற மாணவர்கள் பல்வேறு பட்ட நவீன தொழில் நுட்பம் நிறைந்த தொழில்களில் ஈடுபட்டு விற்பன்னர்களாகவும், வித்தகர்களாகவும் விளங்கவேண்டுமென்பதுடன் ஆயிரம் ஆயிரம் புது முயற்சிகளிலும் புத்தாக்கங்களிலும் ஈடுபட வேண்டும். இத்துறை மாணவர்களின் வளர்ச்சி இந்நாட்டிற்கும் சமூகத்திற்கும் வழி காட்டுவதுடன் வளத்தினையும் வருவாயினையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் இதன் மூலம் எமது துறைக்கும், எமது கல்லூரிக்கும் புகழை ஈட்டிக் கொடுத்தல் வேண்டும்

இவ் இலட்சியத்தை வளர்க்கும் மாணவசமுதாயத்தை உருவாக்கும் பணியில் அதிபர், ஆசிரியர்கள், துணையாளணியினர், மாணவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

நன்றி

# மத்தியம் ஏற்றிய வர்த்தக தீபம்

## ஒருதீபம் ... முதற்தீபம்

*சின்னப்பு பிலிப்நேரி*
*ஓய்வுபெற்ற ஆசிரியர்கள்*
*யா.ம.க.*

1920 - 1995 , 75 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.
மனிதவாழ்வில் 75 ஆண்டுகள் என்பது ஒரு பெரும்பாய்ச்சல் ஆகும். மத்திய கல்லூரி வர்த்தக தீபத்தை ஏற்றி 75 ஆண்டுகள் கடந்து, நூற்றாண்டை நோக்கி வீறுநடை நோக்கிச் செல்லும் இவ்வேளையில் வர்த்தகக்கல்வியின் வளர்ச்சி வரலாற்றை சிறிது மீட்டுப்பார்ப்பது, கண்மூடி நினைத்துப்பார்ப்பது ஏற்புடையது.

1920ம் ஆண்டு இன்றுபோல் வர்த்தகப்பிரிவுக்கு மாணவர் முண்டியடித்து வந்தது கிடையாது. அந்நாளில் வர்த்தகப்பிரிவை அதிபர் அருட்சகோதரர் புள்ளோ அவர்கள் மத்திய கல்லூரியில் ஆரம்பித்து திரு.க. நவரத்தினம் அவர்களிடம் பொறுப்புக்கொடுத்தார்.

எட்டாம் வகுப்பை முடித்தவர்களில் கலை,விஞ்ஞான வகுப்புகளுக்குச் செல்ல சிறிதும் விருப்பற்றவர்கள்,கலைப்புலவர் க.நவரத்தினம் அவர்களின் கனிவான மொழியால்,கடமை உணர்வான செயலால் ஈர்க்கப்பட்டு வர்த்தக வகுப்பில் சேர்ந்தார்கள். செல்வாக்கற்ற வர்த்தகக்கல்வியை, பெற்றோரின் மதிப்பைப் பெறாத வர்த்தகக் கல்வியை அன்று ஒரு தீபமாக, முதற்தீபமாக, வழிகாட்டும் ஒளி விளக்காக கலைப்புலவர் ஏற்றி வைத்தார்.

தீர்க்க தரிசன நோக்கோடு தியாக உணர்வோடு ஏற்றப்பட்ட தீபம் சுடர்விடத் தொடங்கியது.

### பல தீபங்கள் படிப்படியாக ஏற்றப்பட்டன.

கலைப்புலவர் ஏற்றிய தீபத்தைக் கொண்டு அவரிடம் கல்வி கற்ற அவரது மாணவன் திரு.எஸ். இராசதுரை அவர்களால் 1950 ஆண்டில் வைத்தீஸ்வரா கல்லூரியில் வர்த்தக தீபம் ஏற்றப்பட்டது. 1949ம் ஆண்டில் ஸ்ரான்லிக்கல்லூரியில் (கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயம்) ஆசிரியர் திரு சுப்பையா அவர்களால் வணிகஜோதி ஏற்றப்பட்டது, 1962 இல் H.S.C வகுப்பில் வர்த்தகப்பாடம் கற்பிக்கப்பட்டது.

தீபங்கள் பெருகின. அதாவது வர்த்தகக்கல்வி மக்கள் மத்தியில் பெரும்மதிப்பை பெறத்தொடங்கியது. மாணவர்கள் வணிகத்தை வாஞ்சையோடு கற்கத் தொடங்கினர். மக்களின் மனமாற்றத்திற்கு உந்து சக்தியாக கல்விக்கூடங்கள் தம் செயற்பாட்டை நெறிப்படுத்தின.

1958ம் ஆண்டு வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாலயத்தில் இந்நாட்டில் முதன்முதலாக,தமிழ் தட்டச்சு, தமிழ் சுருக்கெழுத்து ஆகிய பாடங்கள் ஆசிரியர் சோ. அமிர்தலிங்கம் அவர்களால் கற்பிக்கப்பட்டது. இதேவேளை இக்காலப் பகுதியில் தனியார் கல்வி நிறுவனங்களிலும் வர்த்தகக்கல்வி வளம்பெறத் தொடங்கியது.ஆனைப்பந்தி உயர்கலை மன்றம், செக்போட் கல்வி நிறுவனம் யாழ்ப்பாணம், பிலிப்பையா கல்வி நிறுவனம் யாழ்ப்பாணம்,கணக்கியல் வர்த்தகக் கல்லூரி வண்ணார்பண்ணை,வேலுப்பிள்ளை வர்த்தகக் கல்லூரி பருத்தித்துறை என்பன சிலவாகும்.

வர்த்தகக் கல்வியை,சில கல்லூரிகள் இந்தியா,இலண்டன் பரீட்சைகளுக்கு ஏற்பக் கற்பித்தன. அப்பரீட்சைகளில் மாணவர்களின் பெறுபேறுகள் சிறப்பாக அமைந்தன. வர்த்தகக் கல்வியின் செல்வாக்கும் வளர்ந்தது.

1958/ 59 கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரி அரசாங்கத்தால் நிறுவப்பட்டது. இங்கு வர்த்தக தராதரப்பத்திர வகுப்புக்கு தட்டச்சும்,சுருக்கெழுத்தும்,தமிழ்,ஆங்கில மொழிகளில் கற்பிக்கப்பட்டன.

பாடசாலைகளில் எட்டாம் வகுப்பு (J.S.C) பரீட்சைக்கு (NPTA) கணக்குப் பதியும் முறையும் (BOOK-KEEPING) ஒரு பாடமாக எடுக்கக்கூடிய நிலை இருந்தது. சிரேஷ்ட தராதரப்பரீட்சைக்கு (S.S.C) பின்வரும் வர்த்தகப் பாடங்கள் தனித்தனிப்பாடங்களாகப் போதிக்கப்பட்டன.

(1) கணக்குப்பதியும் முறை (BOOK-KEEPING)
(2) ஆரம்ப வர்த்தகம் (ELEMENTS OF COMMERCE)
(3) வர்த்தக எண்கணிதம் (COMMERCIAL ARITHMETIC)
(4) பொருளியல் (ECONOMICS)
(5) தட்டச்சு
(6) சுருக்கெழுத்து

1961ம் ஆண்டுக்குப்பின் தட்டச்சும்,சுருக்கெழுத்தும் ஒரே பாடமாக்கப்பட்டது.

இப்பாடங்களுக்கு மத்திய கல்லூரி ஆசிரியர் கலைப்புலவர் அவர்களால் உருவாக்கப்பட்ட புத்தகங்கள் பேருதவியாக இருந்தன. அப்புத்தகங்கள் பின்வருமாறு:-

(1) கணக்குப் பதிவு நூல் (BOOK-KEEPING IN TAMIL)
1.6.1948 இல் வெளியிடப்பட்டது.
(2) உயர்தர கணக்குப் பதிவு நூல் (ADVANCED ACCOUNTS)
18.2.1958 இல் வெளியிடப்பட்டது.
(3) இக்கால வாணிபம் (MODERN COMMERCIAL PRACTICE)
17.4.1961 இல் வெளியிடப்பட்டது.

உயர்தர கணக்குப் பதிவியல் பகுதி (2) எழுதிக்கொண்டிருக்கும்வேளை, அகில இலங்கை வர்த்தக மன்றத்தின் காப்பாளராக இருந்த வர்த்தகக் கல்வியின் தந்தை இரண்டாம் மாதம் 1962 இல் இறைவனடி இணைந்தார்.

## காவலரண் உந்துசக்தி

இலங்கையிலே இன நசுக்கல் பல்வகைப்பட்டதாக இருந்தது. குறிப்பாக வர்த்தகக் கல்வியின் வளர்ச்சிகளை திட்டமிட்டு அரசு நசுக்கியது. 1957ம் ஆண்டு மகரகம ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் சிங்கள மொழியில் வர்த்தகக்கல்வி விசேட பயிற்சியாக அளிக்கப்பட்டது. ஆசிரியர்களைப் பயிற்றுவித்து வர்த்தகக்கல்வியை வளர்த்தது. தமிழ் மொழியில் இப்பயிற்சி இருக்கவில்லை. அரசின் இந்த மாற்றான் தாய் மனப்போக்கை உணர்ந்த வர்த்தக மாணவர் தமிழ் மொழியில் வர்த்தகக் கல்வியின் வளர்ச்சியை உள்ளத்தில் உணர்ந்து ஒன்று சேர்ந்து "அகில இலங்கை வர்த்தகக் கலை மன்றத்தை" (ALL CEYLON COMMERCIAL EDUCATION ASSOCIATION ) 12.7.1961 இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தார்கள்.

யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற மன்றக்கூட்டத்தில் மன்றத்தின் கௌரவ காப்பாளர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

கலைப்புலவர் க.நவரத்தினம் (யாழ் மத்திய கல்லூரி ஆசிரியர்)
திரு.வை.மகேசன் (வைத்திலிங்கம் அன் கம்பனி)
திரு.கோ.அமிர்தலிங்கம் (நாவலர் பாடசாலை சுருக்கெழுத்து ஆசிரியர்)

திரு.சி.இராசதுரை (வைத்தீஸ்வர கல்லூரி வர்த்தக ஆசிரியர்)
மன்றத்தின் தலைவராக திரு.நா.கோபாலநாதனும்,செயலாளராக திரு.மா.புவனேந்திரனும் தனாதிகாரியாக திரு.கு.சுவாமிநாதனும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

அன்று தொட்டு இன்றுவரை அகில இலங்கை வர்த்தக கலை மன்றம் வர்த்தகக் கல்வியின் வளர்ச்சிக்காக, காலச்சூழலின் தாக்கத்திற்கு ஈடுகொடுத்து அரும்பணி ஆற்றி வருகிறது. இம்மன்றத்தின் செயற்பாட்டிலுள்ள அனைத்துப் பங்களிப்புக்கும் உந்து சக்தியாக அன்றும் இன்றும் இதன் செயலாளர் ஈடுகொடுத்து வருவது பாராட்டுக்குரியதாகும்..

பேரொளியில்:-

வர்த்தகக் கல்வியின் எழுச்சி

"கடந்த ஒரு தசாப்தத்தில் வளர்ச்சியுற்ற இப்பிரிவில் மாணவர் நாட்டம் காட்டுவதும்,நலமான பெறுபேற்றினைப் பெறுவதும் கண்கூடு. தொட்டனைந்தூறும் மணற்கேணிபோல் வர்த்தகக் கல்வி எழுச்சியடைந்திருப்பது அத்துறை சார்ந்த காலைக் கண்ணாடிகளான ஆசிரியப்பெருமக்களின் பங்களிப்பென்று கூறுவது மிகையாகாதே. காலத்தின் தேவைக்கேற்ப கல்வி திரிபடைவது சாலப் பொருத்தமே"

ஆர். சுந்தரலிங்கம்
வட மாநிலக் கல்விப்பணிப்பாளர்.
1991-1993 மத்திய வணிகம்

***

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற வாக்கிற்கு ஏற்ப வாணிபத்தில் வளர்ந்து தங்கிய தமிழர் பெருமை வணிகத்துறைக் கல்வியில் துரித வளர்ச்சி அடைய வேண்டும். அதன் மூலம் அரும்பும் வியர்வை உதிக்கப் பல்லாயிரம் தொழில் செய்து எம் மண்ணின் வளத்தையும்,மக்கள் திறனையும் வளர்த்திட இளைஞர்களும் இணைந்திட வேண்டும்.

*சு.நடராஜா*
*மன்றப் பொறுப்பாசிரியர்.*

***

பெரு ணி

எமது நாட்டில் மிக முக்கிய மூலவளமாகக் கருதப்படும் மனித வளத்தை வளமாக்கி விருத்தி செய்ய வேண்டிய பெரும்பணி பாடசாலைகளுக்கும் உண்டு. இந்த வகையில் வர்த்தகக் துறைக் கல்வியை தீர்க்கதரிசனத்துடன் நெறிப்படுத்தி வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு கல்வித்துறை சார்ந்தவர்களுக்கு உண்டு என்பதை நாம் மறத்தலாகாது.

*இ.சிவானந்தன்*
*பிரதிக் கல்விப்பணிப்பாளர்*
*1993 வணிகதாரகை*

***

நாளைய சமூகம்

நாளைய சமூகத்தின் பிரதிநிதிகளாய் நாட்டை வளப்படுத்தப் போகின்ற கல்விச் சிறார்களின் முயற்சிகண்டு பெருமையடைகிறேன். வசதிகளும் வாழ்வும் குளம்பியிருக்கும் வேளை தன் நம்பிக்கையில் தலை நிமிர்ந்து வாழத் தொடங்கியிருக்கும் தமிழ் இனத்தின் கல்வி வளம் என்றும் கட்டிக் காப்பாற்ற வேண்டிய முக்கியமானதொன்று என்றால் மிகையாகாதது. அக்கல்வி

வளத்தினை அகல ஆராய்ந்து அறிந்து கற்பதற்கு வளமூட்டுவன கல்விசார் மன்றங்களே.

*ஆறு. திருமுருகன் B.A*
*மன்றப் பொறுப்பாசிரியர் (1994)*
*1993-94 வணிகநாதம்*

⁂

வணிகம் ஒரு கலை

தமிழ் கூறும் நல்லுலகத்தின் வணிக வரலாறு மிகப்பழமை உடையது. இந்தியப் பெருங்கடலில் கலஞ்செலுத்தி எகிப்து, பாபிலோன் முதலிய நாகரீகமுயர்ந்த நாடுகளோடு பல்லாயிரம்ஆண்டுகட்கு முன்னரே தமிழர் பண்டம் மாற்றிவந்தனர். வணிகத்தை ஒரு கலையாகவே போற்றி வந்தனர்.

*திருமதி.ஆ.சிவஞானசுந்தரம்*
*அதிபர்*
*1993 வணிகவாணி*

⁂

சிந்தனை வளர்ச்சி

மாணவர்களின் சிந்தனை வளர்ச்சிக்கு,பரந்த மனப்பான்மை பெறுவதற்கு இவ்வகையான மலர் வெளியிடும் முயற்சி உதவியாக அமையும். மேலும் மாணவர்களின் பொருளியல், வர்த்தகம், கணக்கியல் ஆகிய துறைகளில் யதார்த்த ரீதியான கருத்துக்களைப் பெறுவதற்கு இம்மலர் முற்றும் முழுதாக துணைபோகும் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு.

*சி.சிவராசா.*
*பிரதிக் கல்விப்பணிப்பாளர்*
*1990,1991 வணிகதீபம்.*

⁂

நவீன உத்தி

விஞ்ஞானத்தின் விந்தை மிகு மாற்றங்களை விஞ்சி பண்டைக்காலத்தில் பண்டமாற்றுத்துறையாக விளங்கிய வணிகம், இன்று நவீன உத்திகளுடன் கூடிய முன்னணித்துறையாக விளங்குகின்றது. இத்தகைய சிறப்பு மிகுதுறை இலங்கையின் கல்விக் கலைத்திட்ட அமைப்பில் தொழில் நுட்பக்கல்வியின் ஒரு கூறாக அமைக்கப்பட்டுள்ளது.

திரு.த.முத்துக்குமாரசாமி BA.Dip.in.Ed.
*அதிபர்*
*1992-1993..பற்று*

⁂

மாற்றுக் கற்கை நெறி

இத்துறையில் மிகச்சிறந்த பரீட்சைப்பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களும் பல்கலைக்கழகம் செல்ல முடியாத நிலை உள்ளது. வர்த்தகக் கல்வியில் மாற்றுக் கற்கை நெறிகள் பல உள்ளன. இந்த மாற்றுக் கற்கை நெறிகளை நமது பிரதேசத்திற்குக் கொண்டு வருதலே இன்றைய தேவை.

*அ.பஞ்சலிங்கம்*
*அதிபர்*
*1994..பற்று*

⁂

தன்னம்பிக்கை மிக்கவர்களை உருவாக்க:

பட்டம்பெற்று வெளியேறியதும் அவர்கள் தொழில் பெறுவதற்கு தனியார் மற்றும் வங்கித்துறைகளை நாடாது அரசதுறையையே குறிப்பாக ஆசிரியர் வேவையையே நாடி

நிற்கின்றனர். தாம் பாடசாலைகளிலும்,பல்கலைக்கழகத்திலும் பெற்ற கல்வியின் துணை கொண்டு தனியார் துறைகளில் தம்மால் நிமிர்ந்து நிற்க முடியுமென்ற தன்னம்பிக்கையற்றவர்களாக விளங்குகின்றனர். பரீட்சைகளிற்சித்தி பெறுவதையுயம் அரச துறைகளில் உத்தியோகம் பெறுவதையும் குறிக்கோளாகக் கொண்டே கல்வி பயில்கின்றனர். மாணவர்களில் இச் சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டு அவர்கள் தன்னம்பிக்கை மிக்கவர்களாக விளங்கினால் எமது நாடும், இனமும் பல்துறைகளில் முன்னேறும்.

*செல்வி. திலகவதி பெரியதம்பி*
*கல்விப்பணிப்பாளர்*
*வலயம் 1, யாழ்ப்பாணம்*

⁂

சுய சார்புள்ள சமூகம்

ஒரு சமூகம் சுய சார்புள்ள சமூகமாக வெளிநாட்டவரில் தங்கியிராமல் தனது சொந்தக் காலில் அரசியல் பொருளாதார சுதந்திரத்துடனும் வாழ்வதற்கு அதற்கு வேண்டிய அறிவையும் ஆற்றலையும் பெற்றுக் கொள்ள வேண்டும்

*பேராசிரியர் அ. துரைராஜா*
*91 Volv விருட்சம்*

⁂

**மத்தியம் ஏற்றிய வர்த்தக தீபம் இன்று இம்மண்ணில் எங்கும் பரந்து விரிந்து பேரொலியாக ஒளிர்வதைக் காணும் ஒவ்வொருவரும்,**

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (திருக்குறள் 423)

என்பதை உள்ளத்தில் உணர்ந்து வாழ்வதே அறிவுடையமையாகும்

# வர்த்தக விடயங்கள்

1. திரு. சு. நடராஜா
2. செல்வன் . க. கிருஷ்ணகுமார்
3. செல்வன். வே. தவப்புதல்வன்
4. திரு. சி.ப. இராஜீவன்
5. செல்வன். து. ஜெயானந்தன்
6. செல்வன். பா.நந்திகுமார்

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

## பண்டங்கள் சேவைகள் வரி (Goods and Serviceas)

STACKS

திரு. சு. நடராஜா
B.Com. (Hons). B.A.Dip - in - Ed
வர்த்தக ஆசிரியர்
யாழ் மத்திய கல்லூரி.

### 1. அறிமுகம்:-

இலங்கை அரசினால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட வரி மாற்றங்களில் ஒன்று பண்டங்கள் சேவைகள் வரியாகும். பண்டங்கள் அல்லது சேவைகளில் உள்ளூர்நுகர்வின் மீதான வரியாகும் அபிவிருத்தி அடைந்த சில நாடுகளில் காணப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கும் ப. சே. வரிக்கும் ( G.S.T.) கொள்கை அளவில் அதிக வேறுபாடு இல்லை இரண்டுமே சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரிகளாகும். நடைமுறைப்படுத்தும் பொழுது மட்டும் சில வேறு பாடுகள் காணப்படுகின்றன. உலகநாடுகளில் அறுபது நாடுகளில் ப. சே. வரி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நாற்பது நாடுகளில் இவ்வரி நடைமுறையில் உள்ளது சர்வதேச வர்த்தகத்தில் துரித வளர்ச்சியடைந்து வரும் யப்பான், கொரியா, சிங்கப்பூர், இந்தோனேசியா போன்ற தென்கிழக்காசிய நாடுகளில் இவ்வரி நடைமுறையில் இருக்கின்றது. ஐரோப்பிய சமூகத்தில் சேர்வதற்கு ஐரோப்பிய நாடுகளில் இது கட்டாய தேவையாக கருதப்படுகிறது. இன்று சர்வதேச வர்த்தகத்தில் வளர்ச்சியடைந்த, வளர்ச்சியடைந்து வரும்நாடுகள் யாவும் ப. சே. வரி முறையினை நடைமுறைப்படுத்துவதில் மிக ஆர்வம் காட்டி வருகின்றன. இதன் அடிப்படையிலேயே இலங்கையிலும் இவ்வரி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

11. நோக்கம் :-

வரி செலுத்தும் தகமை கொண்ட நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் இறக்குமதி செய்யும் பொருட்களுடன் இலங்கைக்குள் வழங்கும் பொருட்கள் சேவைகள் மீது அறவிடப்படும் வரி பண்டங்கள் சேவைகள் வரியாகும். பண்டங்கள் சேவைகள் இலங்கைக்குள் வழங்கப்படுதல் என்பது பொருட்கள் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் இலங்கையின் இருப்பில் மாற்றத்தை ஏற்படுத்தல் ஆற்றப்படும் சேவைகள் இலங்கைக்குள் ஆற்றப்பட வேண்டுமென்பதையும் நோக்கெல்லையாக கொண்டது.

விசேட சந்தர்பங்களில் இலங்கையில் வழங்கப்பட்ட அல்லது ஆற்றப்பட்ட சட்டரீதியான பண்டங்கள் சேவைகளைக் குறிக்கும்.

1-3.1 வரியமைப்பு :-
பண்டங்கள் சேவைகள் வரியானது 1964ம் ஆண்டு முதல் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மொத்த விற்பனவு வரிக்குப் பதிலாக அல்லது வியாபாரப் புரள்வு வரிக்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்டதாகும். மொத்த விற்பனவு வரியில் (Tuin over Tex) காணப்படும் பல குறை பாடுகளையும் நீக்கும் நோக்குடன் ப.சே. வரி அறிமுகப் படுத்தப்பட்டது.

1-3.2 மொத்த விற்பனவு வரியின் குறைபாடுகள்

1. வரிக்குவிப்புத்தன்மை :- உற்பத்தி தொடக்கம் பகிர்வு வரையுள்ள பல்வேறு பட்ட நிலைகளிலும் மொத்த விற்பனவு வரிவிதிக்கப்படுகின்றது. இதனால் முடிவுப் பொருளின் வரியானது நியம வீதத்திலும் பார்க்க அதிகளவு கூடுதலாகக் காணப்படுகின்றது.

2. புலப்படாத்தன்மை:-
மொத்த விற்பனவு வரியானது உற்பத்தியில் அல்லது பகிர்வின் ஒவ்வொரு நிலையிலும் விலைமீது விதிக்கப்படும் வரியின் அளவினை மதிப்பிட்டு வேறுபடுத்துவது கடினமாக உள்ளது. எந்த ஒரு நிலையிலும் வரியானது வேறாகக் காட்டப்படாதமையினால் நிவாரணம் வழங்குதல் கடினமாக உள்ளது.

ப.சே வரியின் மூலம் மேற்கூறிய குறைபாடுகளை நீக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

4. வரிக்கணிப்பு :-
பண்டங்கள் சேவைகள் வரியானது உற்பத்தியிலிருந்து நுகர்வு வரையிலுள்ள ஒவ்வொரு நிலையிலும் விலையின் ஏற்றப் பெறுமதிக்கு அல்லது சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு மட்டும் கணிக்கப்படும்.
உதாரணம்

| உள்ளீட்டுப் பெறுமானம் | | சேர்க்கப்பட்ட பெறுமானம | | முடிவுப் பெறுமானம் |
|---|---|---|---|---|
| 100 | + | 20 | = | 120 |

இங்கு இருபது ரூபா பெறுமானத்திற்கு மட்டும் ப. சே. வரி கணிக்கப்படும்

1.5பண்டங்கள் சேவைகள் வரி மாதிரிகள் :-
இவ்வரியினை நடைமுறைப்படுத்தும் பொழுது பின்வரும் மாதிரிகள் பின்பற்றப்படுகின்றன.

1. மூலதனப் பொருட்களுக்கு பெறுமானத்தின் முழு அளவிற்கும் கழிவு அனுமதித்தல்
2. மூலதனப் பொருட்களுக்கு முழு அளவில் கழிவுகளை அனுமதிக்காது மதிப்பிறக்கத்தினை மட்டும் அனுமதித்தல்

1.5.2. வெளிநாட்டு வர்த்தகத்தில் பின்பற்றப்படும் முறைகள்

1. சேரிடக்கொள்கை (Destination - Principle) ஏற்றுமதியில் வரிவிதிக்காது இறக்குமதிகளில் மட்டும் வரிவிதித்தல்
2. உற்பத்தியிடக் கொள்கை (The orgin principle) ஏற்றுமதியில் வரி அறவிடப்படும் இறக்குமதியில் வரி விதிக்காமையைக் குறிக்கும்.
இவ் வரியைக் கணிப்பதில் ஒவ்வொரு நாடும் தனது நாட்டு நிலைக்கேற்றவாறு பலமுறைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றன. பெரும்பாலான நாடுகள் சேரிடக் கொள்கையை பின்பற்றி

வருகின்றன. இலங்கை அரசும் இக்கொள்கையைக் கடைப்பிடிக்க தீர்மானித்துள்ளது.

1.6 ப. சே வரி விலக்கழிக்கப்படும் பொருட்கள்

1. முதல் நிலை விவசாய உற்பத்திகள்
2. மருந்தாக்கப் பொருட்கள்
3. நிதிசார் சேவைகள்
4. புத்தகங்கள்
5. உரப் பொருட்களும் விலங்கு உணவு வகைகளும்
6. பயணிகள் போக்கு வரத்து சேவைகள்
7. கல்வி சார் சேவைகள்
8. அத்தியவசிய விவசாய உபகரணங்கள் போன்றவை

1.7. பண்டங்கள் சேவைகள் வரிகளின் அனுகூலங்கள்

1. வருமானம் குறைந்த பெருமளவு மக்கட்தொகை யினால் நுகரப்படும் அரிசி, பாண், பாற் பொருட்கள், பண்ணைப் பொருட்கள், மருந்துகள், வீடமைப்பு, ஆடைகள் போன்றவற்றுக்கு வரி விதிக்கப்படாமை அல்லது மிகக் குறைந்தளவு வரிவிதித்தல் இதன் மூலம் மக்கள் பெரும் பயன் பெறுகின்றனர்.
2. சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு மட்டும் வரிவிதிக்கப்படுவதினால் வரிக்குவிப்புத் தன்மை விலக்கப்படுகின்றது.
3. சேர்க்கப்பட்ட பெறுமானத்தில் மட்டும் வரிவிதிக்கப் படுவதினால் நிறுவனங்கள் தமக்கிடையே பொருட்களை விற்பனை செய்யும் பொழுது வரி செலுத்தும் கிடையான செயற்பாட்டை ஊக்குவிக்கின்றது.
4. தொழில் முயற்சியாளர்களும், வர்த்தகர்களும் சிறந்த முறையில் பதிவுகளையும், கணக்குகளையும் பேணிவருவதற்கு வசதியாக அமைகின்றது.
5. ஒவ்வொரு நிறுவனங்களும் தமது நிதிசார் செயற்பாடுகளின் நிலைகளை இலகுவாகவும் தெளிவாகவும் விளங்கிக் கொள்ள முடிகின்றது.
6. ஒவ்வொரு நிறுவனங்களும் வரியின் சரியான தொகையை இனங்கண்டு கொள்ளவும் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளவும் வழி வகுக்கின்றது.
7. இதன் மூலம் வரியைச்சுயமாக கணித்துக் கொள்ளவும், வரியின் சீராக்கங்கள் கழிவுகள் போன்றவற்றை தாமே கணக்கிட்டுக் கொள்ளவும் முடிகின்றது.

1.8 பண்டங்கள் சேவைகள் வரியின் இலங்கை நடைமுறை

இலங்கையில் மாகாண சபைகளுக்கு இறைவரியினை அறவிடும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் மொத்த விற்பனை, சில்லறை விற்பனைத் துறைகளில் ப.சே வரிமுறையினை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது. எனவே இத் துறைகளுக்கு மட்டும் மொத்த விற்பனவு வரி முறை தொடர்ந்து நடை முறைப்படுத்தப்படும் இதன் மூலம் மாகாண சபைகள் இறைவரியினை அறவிட்டுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். தற்போது இலங்கையில் இறக்குமதிகள், உற்பத்திகள் சேவைத்துறைகள் போன்றவற்றுக்கு மட்டும் ப.சே வரி முறை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.


உசாத்துணை நூல்
Goods and services Tax
Publication
G.S.T. Development Unit

# இலங்கையில் பங்குச் சந்தை

கனகலிங்கம் கிருஷ்ணகுமார்
(பழைய மாணவன்)

## அ) நிதிச் சந்தை ஓர் அறிமுகம்

ஒரு நாட்டிலே செயற்படுகின்ற சகல நிதி நிறுவனங்களில் இணைந்த செயற்பாடே நிதிச் சந்தை எனப்படும். நிதிச் சந்தையின் ஊடாக முயற்சியாளர்கள் தமக்குத் தேவையான நிதி நிரம்பலைப் பெறுகின்றார்கள். பொருளாதாரம் ஒன்றிலே பின்வரும் காரணங்களால் நிதிச் சந்தையானது முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

1. பிறநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெற்று அவர்களின் அதிகரித்த வருகையினூடாக பொருளாதாரத்திற்குத் தேவையான மூலதனத்தையும் அன்னியச் செலாவணியையும் பெறுவதற்கு
2. பொருளாதாரத்திலே முதலீட்டாளர்களாகவுள்ள உள்ளூர், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குத் தேவையான நிதி வசதிகளை அளிப்பதற்கு
3. நிதிச் சந்தையின் பரவலான செயற்பாட்டின் மூலம் பொது மக்களிடமுள்ள சேமிப்பை வைப்பாக ஏற்று வட்டி வழங்குவதன் மூலம் அவர்களின் சேமிப்புக்கான சூழலை ஊக்கப்படுத்துவதற்கு
4. பணத்தை மேலதிகமாக வைத்திருப்போரையும் பணம் தேவைப்படும் பிரிவினரையும் இணைப்பதற்கு
5. நிதிச் சந்தையின் வளர்ச்சியின் ஊடாகவே வணிக வங்கிகளின் சுதந்திரமான செயற்பாட்டை உறுதிப்படுத்தலாம்.

இந்நிதிச் சந்தையானது பணச் சந்தை எனவும் மூலதனச் சந்தை எனவும் இரண்டு வகைப்படும். முயற்சியாளர்களுக்குத் தேவைப்படும் குறுங்கால நிதி வழங்கலை அளிக்கின்ற சகல நிறுவனங்களினதும் இணைந்த செயற்பாடே பணச் சந்தை எனப்படும். திறைசேரி உண்டியல்கள், வைப்புச் சான்றிதழ்கள், மாற்றுண்டியல்கள், வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணம் என்பவையே இலங்கையின் பணச் சந்தையில் கைமாற்றப்படும் பிரதான ஆவணங்கள் ஆகும். முயற்சியாளர்களின் தேவைகளுக்கேற்றவாறு நீண்டகால நிதி வளங்களை வழங்குகின்ற நிறுவனங்களின் இணைந்த செயற்பாடே மூலதனச் சந்தை எனப்படும். இம்மூலதனச் சந்தையின் பிரதான கூறாக பங்குச் சந்தை (SHARE MARKET) காணப்படுகின்றது.

## ஆ) பங்குச் சந்தை என்றால் என்ன?

வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகள் பங்குப் பத்திரங்களையும் தொகுதிக் கடன் பத்திரங்களையும் தனி நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் விற்பனை செய்து தமக்குத் தேவையான நீண்ட கால நிதியினைப் பெற்றுக்கொள்ளும் இடமே பங்குச் சந்தை எனப்படும். எல்லாப் பொதுக் கம்பனிகளும் இவ்வாறு பங்குச் சந்தையினூடாக பங்குகளைப் பரிமாற்றம் செய்து கொள்ள முடியாது. பங்குச் சந்தையினூடாக தமது பங்குகளை விற்பனை செய்கின்ற அல்லது பங்குச் சந்தையினூடாக தமது பங்குகளின் விற்பனை விலைகளை நிர்ணயிக்கும் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகள் பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகள் அல்லது விலைகூறப்பட்ட கம்பனிகள் அல்லது நிரற்படுத்தப்பட்ட கம்பனிகள் ( Quoted or Listed Companies) எனப்படும். ஏறக்குறைய 1500 பொதுக் கம்பனிகள் உள்ள இலங்கையில் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த இலங்கைப் பங்குச் சந்தையில் இவ்வாறு நிரற்படுத்தப்பட்ட கம்பனிகள் 201 மாத்திரமே. பங்குச் சந்தையினூடாக பங்குகளை விற்பனை செய்யாமல் தமது சொந்த முயற்சியினூடாக பங்குகளை

விற்பனை செய்யும் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகள் விலைகூறப்படாத கம்பனிகள் அல்லது நிரற்படுத்தப்படாத கம்பனிகள் (Unlisted Companies) எனப்படும்.

பங்குச் சந்தை ஒன்றிலே காணப்படுவோரை பின்வரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

1. காளைகள் (Bulls)

எதிர்காலத்தில் பங்குகளின் விலை அதிகரிக்குமென எதிர்பார்த்து கூடுதலான பங்குகளைக் கொள்வனவு செய்கின்ற பிரிவினர்களே காளைகள் ஆவார். இவர்கள் பங்குச் சந்தையின் கேள்வியை நிர்ணயிக்கும் பிரிவினர் ஆவார்.

3. கரடிகள் ( Bears)

எதிர்காலத்தில் பங்குகளின் விலை குறையுமென எதிர்பார்த்து தம்மிடமுள்ள பங்குகளை முன்கூட்டியே விற்பனை செய்வோர் கரடிகள் ஆவார். பங்குச் சந்தையின் நிரம்பலை நிர்ணயிப்பவர்கள் இவர்கள் ஆவார்.

3. கலைமான்கள் (Deers)

பங்குகளின் விலை குறைவாக உள்ள காலங்களில் கூடுதலான பங்குகளை கொள்வனவு செய்து பங்குகளின் விலை உயர்வடையும் போது அவற்றை விற்பனை செய்து இலாபத்தை உழைப்பவர்களே கலைமான்கள் ஆவார். இவர்களது நோக்கம் நிரந்தர முதலீடு அல்ல. இவ்வாறான பங்குச் சந்தை வியாபாரம் ஊக வியாபாரம் (Speculation) எனப்படும்.

பங்குச் சந்தையானது இரண்டு வகைப்படும். புதிதாக ஆரம்பிக்கப்படும் கம்பனிகள் தமது பங்குகளை பொது மக்களுக்கு விற்பனை செய்யும் பங்குச் சந்தை முதலாம் தர பங்குச் சந்தை (Primary Share Market) எனப்படும். இதில் கம்பனிகள் நேரடியாகவே பொதுமக்களுக்கு பங்குகளை விற்பனை செய்கின்றன. பங்குத் தரகர்களின் சேவை பெறப் படுவதில்லை. இங்கு பங்குத் தரகர் எனப்படுவோர் பங்குச் சந்தையில் பங்குகளை விற்பனை செய்யும் கம்பனிகளுக்கும் அவற்றைக் கொள்வனவு செய்யும் பொது மக்களுக்கும் இடையே நடுவர்களாக தொழிற்படுவோரே ஆவார். இலங்கையில் இவ்வாறான 15 தரகு நிறுவனங்கள் காணப்படுகின்றன. ஏற்கனவே செயற்படுகின்ற கம்பனிகள் தாம் ஏற்கனவே விற்பனை செய்த பங்குகளை பொது மக்களுக்கு விற்பனை செய்வதற்கு ஈடுபடுத்தும் பங்குச் சந்தை இரண்டாந்தர பங்குச் சந்தை (Secondary Sharemarket) எனப்படும். இங்கு விற்பனையின்போது பங்குத் தரகர்களின் சேவை பெறப்படுகின்றது. இந்த இரண்டாந் தர சந்தையின் முக்கிய அம்சமாக வியாபாரத் தளத்தினை (Trading Floor) குறிப்பிடலாம். பங்குகளைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்களின் கட்டளைகளையும் பங்குகளை விற்பனை செய்ய விரும்புபவர்களின் அளிப்புக்களையும் ஓர் கரும்பலகையில் பதிவு செய்யும் இடமே வியாபாரத் தளம் எனப்படும்.

## இ. இலங்கையில் பங்குச் சந்தையின் தோற்றமும் வளர்ச்சியும்

1. தோற்றம்

இலங்கையின் பங்குச் சந்தையின் ஆரம்பமாக 1894 இல் உருவாக்கப்பட்ட பங்குத் தரகர் சங்கத்தினை ( Share Brokers Association) குறிப்பிடலாம். தரகு வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த பிரித்தானியர்கள் தனது நலன்களைப் பாதுகாப்பதற்காக இவ் அமைப்பினை உருவாக்கினர். 1904ம் ஆண்டு இவ் அமைப்பு கொழும்புத் தரகர் சங்கமாக (Colombo Brokers Association) மாற்றி அமைக்கப்பட்டது. பின்பு நீண்ட காலத்திற்கு இப் பெயருடனேயே இவ் அமைப்பு செயற்பட்டு வந்தது. 1984 ம் ஆண்டு கொழும்புத் தரகர் சங்கத்திற்கு போட்டியை உருவாக்கும் நோக்கத்துடன் கொழும்பு வரையறுத்த பங்குத் தரகர் சங்கம் (Colombo Share Brokers) ஓர் அரச அமைப்பாக உருவாக்கப்பட்டது. 1985ன் இறுதிக் காலப் பகுதிவரை இவ் இரண்டு அமைப்புக்களும் போட்டி போட்டு பங்குச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தன. ஆனால் 1985 நவம்பரில் கொழும்புத் தரகர் சங்கமும் கொழும்பு வரையறுத்த பங்குத் தரகர் சங்கமும் இணைக்கப்பட்டு கொழும்பு பிணைகள் பரிவர்த்தனை நிலையம் (Colombo Securities Exchange) உருவாக்கப்பட்டது. 1990ல்

இது கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம் (Colombo Stock Exchange) அமைப்பு ஆகப் பெயர் மாற்றப்பட்டது.

இலங்கையின் பங்குச் சந்தையில் பங்குச் சந்தை நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யவென இரண்டு பிரதான அரச அமைப்புக்கள் காணப்படுகின்றன.

1. வரையறுக்கப்பட்ட பங்குப் பரிமாற்று அமைப்பு

இலங்கையின் பங்குச் சந்தையை வழிநடத்துகின்ற அமைப்பு இதுவாகும். 1984 வரை கொழும்புத் தரகர் சங்கமே பங்குச் சந்தையை வழிநடத்தி வந்தது. 1985 ன் இறுதிவரை கொழும்புத் தரகர் சங்கத்துடன் வரையறுக்கப்பட்ட கொழும்பு பங்குத் தரகர் நிறுவனமும் போட்டியிட்டு பங்குச் சந்தையை வழிநடாத்தி வந்தன. 1985 ல் இவை இரண்டும் ஒருங்கிணைக்கப்பட்டு பங்குச் சந்தையை வழிநடாத்தவென உருவாக்கப்பட்டதே இன்று வரையறுக்கப்பட்ட பங்குப் பரிமாற்று அமைப்பு என அழைக்கப்படுகின்றது. இச் சபையின் இயக்குனர் சபையில் 4 பேர் ஆவணச் சபையின் பிரதிகளாகவும் 5 பேர் பங்குத் தரகு நிறுவனங்களின் பிரதிகளாகவும் உள்ளனர்.

11. ஆவண பரிமாற்றுச் சபை

இலங்கையின் பங்குச் சந்தை நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காகவும் கம்பனிகளின் முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவும் 1987 ம் ஆண்டு ஆவணச் சபைச் சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டதாகும். பின்பு 1991 ல் சட்ட மாற்றத்தினூடாக இதன் பெயர் ஆவண பரிமாற்றுச் சபை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இச் சபையில் மத்திய வங்கி ஆளுனர், திறைசேரியின் உதவிச் செயலாளர், பட்டயக் கணக்காளர் சங்கத் தலைவர், கம்பனிப் பதிவாளர் ஆகியோர் நிரந்தரமான இயக்குனர்களாகவும் 6 பேர் நிதி அமைச்சரால் காலத்திற்குக் காலம் நியமிக்கப்படும் இயக்குனர்களாகவும் உள்ளனர்.

2. இலங்கையில் பங்குச் சந்தையின் வளர்ச்சி

1ம் தர பங்குச் சந்தையின் நடவடிக்கைகள், 2ம் தர பங்குச் சந்தையின் நடவடிக்கைகள் ஆகிய இரண்டு வகையிலேயே பங்குச் சந்தை ஒன்றின் வளர்ச்சியை மதிப்பிட வேண்டும். இந்த இரண்டு வகையிலும் கொழும்பு பங்குச் சந்தையானது, குறுகிய கால ஆயுளையே கொண்டிருந்தாலும், நிதானமான ஓர் வளர்ச்சிப்போக்கையே காட்டி நிற்கின்றது. பங்குச் சந்தையின் மாதாந்த புரள்வானது 1991 டிசம்பரில் 558.9 மில்லியனாகவும் 1992 டிசம்பரில் 250.3 மில்லியனாக குறைவடைந்தாலும் 1993 டிசம்பரில் 3209.4 மில்லியன் எனவும் 1994 மார்ச்சில் 5467.9 மில்லியனாக உயர்வடைந்துகொண்டு வருவது இதனையே சுட்டிக் காட்டுகின்றது. அத்தோடு விற்பனை செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையும் 1990 ல் 41.7 மில்லியனிலிருந்து 1991ல் 95 மில்லியனாக உயர்வடைந்துள்ளமையும் குறிப்பிடத் தக்கதாகும். இந்த வகையிலே ஆண்டு வளர்ச்சியிலே கொழும்பு பங்குச் சந்தையானது 1993ல் வளர்முக நாடுகளில் 10 ஆவதாகவும் தென்கிழக்காசியாவில் 1 ஆவதாகவும் உள்ளது.

எண்பதுகளில் பங்குச் சந்தையின் நடவடிக்கைகளை விரிவு படுத்துவதற்காகவும், அதன் வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்காகவும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவற்றில் பின்வருவன முக்கியமானவை ஆகும்.

1. பொதுக் கம்பனிகளின் செயற்பாட்டில் நவீன வளர்ச்சிகளையும் உள்ளடக்கவும், அவற்றிற்கு சட்டரீதியான பின்புலத்தை வழங்கவுமென 1982 ம் ஆண்டு புதிய கம்பனிச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

2. பங்குச் சந்தையின் அபிவிருத்திகள் பற்றி மதிப்பீடு செய்யவென பல்வேறான குழுக்கள் நியமிக்கப்பட்டதோடு, சட்டரீதியான சபைகளும் உருவாக்கப்பட்டன.

உ : ம்: ஆவண பரிமாற்றச் சபை, பங்குப் பரிமாற்று அமைப்பு.

3. பங்குச் சந்தை பற்றிய ஆலோசனைகளைப் பெறவும், மூலதனச் சந்தையின் அடிப்படைக் கட்டமைப்பிற்கான நிதியீட்டங்களைப் பெறவுமென வெளிநாட்டு நிதி நிறுவனங்களின்

உதவிகள் பெறப்பட்டன.

உ : ம்: - சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க ஏஜென்சி (USAID) ஆசிய அபிவிருத்தி வங்கி. (ADB)

4. உள்ளூர் கம்பனிகளுக்கு பங்கு வழங்கலின்போது வரிச் சலுகைகளும், ஏனைய ஊக்குவிப்புக்களும் வழங்கப்பட்டன.

உ : ம்: பங்கு கைமாற்றலின் போதான முத்திரை வரி.

5. அன்னிய முதலீட்டாளர்கள் 100% விலைகூறப்பட்ட பங்குகளை உள்ளூர் கம்பனிகளில் கொள்வனவு செய்ய கூடியவாறு சட்டமூலம் திருத்தப்பட்டது.

6. பங்குகளை உடைய ஊழியர் குழாம் ஒன்றினை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டு Employee's Trust Fund (ETF) உருவாக்கப்பட்டது.

7. தனியார் துறையினர் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தடையாயிருந்த சட்டங்கள் சிலவற்றை நீக்கியது.

உ : ம்: வருமான உச்ச வரம்பு கட்டாயச் சேமிப்புச் சட்டம்.

8. வணிகவங்கிகளில் பங்குக் கொடுக்கல் வாங்கல்களுக்காக அன்னியச் செலாவணிக் கட்டுப்பாடுகளை நீக்கியமை.

9. மத்திமப் படுத்தப்பட்ட கணணியின் ஊடாக (Centralised Computer) பங்குதாரர், பங்குத் தரகர், விலைகூறப்பட்ட கம்பனிகள் என்பவற்றின் கணக்குகளைப் பேணுவதன் மூலம் பங்கு வரிமாற்றம் தொடர்பான நடவடிக்கைகள் பதியப்படுகின்ற மத்திய வைப்பு முறை (Central Depository System) 1992 ல் அறிமுகப்படுத்தப்பட்டது.

10. 1991 ல் விலைகூறப்பட்ட கம்பனிகளுக்கான செல்வவரி நீக்கப்பட்டது.

11. அலகு நிறுவனங்களும்(Unit Trust) பிராந்திய நிதியங்களும்(Regional fund) பங்குச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி அளிக்கப்பட்டது,

12. 1986 ல் கொழும்பு பங்குச் சந்தையானது சர்வதேச பங்கு பரிவர்த்தனைகள் சம்மேளனத்தில் (International Federation of Stock Exchange) அங்கத்துவம் பெற்றது.

13. 1993 ல் வியாபாரத் தளத்தில் இரு பாக வியாபார டிக்கெட் (Two Part Ticket System) முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஈ. <u>தொகுப்பு</u>

குறுகிய கால வரலாற்றினை உடைய கொழும்பு பங்குச் சந்தையானது அண்மைக் காலத்தின் நிதானமானதொரு வளர்ச்சியினைக் காட்டி வருகின்றது. ஆனால் இது ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்ததொன்றாகவே உள்ளது. 1993 ல் வளர்முக நாடுகளில் ஆண்டு வளர்ச்சியில் முதலாவதாக உள்ள போலந்தின் வளர்ச்சி வீதம் 718 ஆக இருக்க 10 ஆவதாக உள்ள இலங்கை 62 ஐயே காட்டி நிற்கின்றது. இருந்த போதிலும் கொழும்பு பங்குச் சந்தையானது இனிவரும் காலங்களில் ஒரு துரிதமான வளர்ச்சியைக் காட்டும் என்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. கொழும்பு பங்குச் சந்தையின் மிக அண்மைய அறிக்கைகள் இதனையே சுட்டி நிற்கின்றன.

உசாத்துணை :

1) Economic Review October 1994
2) Economics for Accountants - K - West

# மக்கள் மயப்படுத்தலும் இலங்கை அரசாங்கமும்
# (Peoplisation and Srilankan Government)

செல்வன். வே. தவப்புதல்வன்
(பழைய மாணவர்)
வர்த்தக பீடம்
யாழ் பல்கலைக்கழகம்

தற்போதைய உலகில் உறங்கிக் கொண்டிருக்கும் சோஷலிச கொள்கைகளை தமது முதுகு என்பாக கொண்டு இயங்கி வருகின்ற சோஷலிச நாடுகளான கியூபா, வடகொரியா, ரஷ்யா, பல்கேரியா போன்றன கூட இன்று சந்தை முறைமையைத் தாபிக்கும் பல கட்டங்களை நெருங்கிக் கொண்டு இருக்கும் இவ் வேளையில் இலங்கை அரசானது தனக்குச் சொந்தமான உற்பத்தி வர்த்தக முயற்சிகளில் ஈடுபடும் நிறுவனங்களை மக்கள் மயப்படுத்தல் என்ற உரிமை மாற்றத்திற்கு ( தனியாருக்கு) உட்படுத்துவதானது மிகவும் வியக்கத்தக்க ஒரு விடயம் அல்ல எனலாம். அது மட்டுமன்றி தற்போது பதவியேற்றுள்ள அரசாங்கம் கூட மக்கள் மயப்படுத்தல் தொடர்ந்து மேற்கொள்ளப் படும் என அறிவித்துள்ளதுடன் பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது எனவே இக்கட்டுரையானது க. பொ. த. (உ.த) வகுப்பு மாணவர்களுக்கும் ஏனைய வர்த்தக மாணவர்களுக்கும் பயன்படுவதாய் இருக்கும் என நம்புவதுடன் இக் கட்டுரை இலங்கை அரசாங்கங்களின் பதவிக்காலத்தில் மக்கள் மயப்படுத்தலின் பரிணாம வளர்ச்சி இலங்கை அரசு மேற்கொள்வது உண்மையில் ஒரு மக்கள் மயப்படுத்தல் செயற்பாடா? அரசுகள் மக்கள் மயப்படுத்தலுக்கு மேற் கொண்ட வழிமுறைகளும் எடுத்த நடவடிக்கைகளும் மென்மேலும் அரசுகள் மக்கள் மயப்படுத்தலுக்குள் தள்ளப்பட்டமைக்கான காரணங்கள் அரசு இதன் மூலம் தன்னுடைய எதிர்பார்ப்புகள் முழுவதையும் நிறைவேற்றுமா? போன்ற தலைப்புக்களின் கீழ் மக்கள் மயப்படுத்தல் தொடர்பான ஒரு பூரணத்துவத்தை தரமுற்படுகின்றது.

## இலங்கை அரசுகளின் ஆட்சியின் மக்கள் மயப்படுத்தலின் பரிணாமம்

இன்றைய உலகின் எந்தவொரு பொருளாதார அமைப்பிலும் ஏதோ ஒரு வகையில் அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் இல்லை. அதாவது அரசாங்க தலையிடா கொள்கை தற்போது எந்த ஒரு சமூகத்திலும் பூரணமாக இல்லை எனக் கூறலாம் இந்த வகையில் இலங்கையிலும் சுதந்திரத்திற்கு முன்னரும் சரி பின்னரும் சரி அரசதுறைசார் நிறுவனங்களும் செயற்பாடுகளும் தொடர்ந்த வண்ணமே இருந்தன இருக்கின்றன. பொதுவாக 1956க்கும் 1977 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலேயே அதிகளவு அரச நிறுவனங்கள் உற்பத்தி வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டு வந்தன. ஏனெனில் அன்று ஆட்சியிலிருந்த ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி சோஷலிச கொள்கையை கொண்ட ஒரு அரசாக காணப்பட்டது. இதன் அடிப்படையாக உள்நாட்டு உற்பத்தியை உயர்த்தி சர்வதேச வர்த்தகத்திற்கு ஒரு தடைபோட முற்பட்டது ஆனால் 1977 இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கமானது ஒரு முதலாளித்துவ சிந்தனையுடைய கொள்கையுடன் ஆட்சியில் அமர்ந்ததுடன் சுதந்திரக் கட்சியுடைய மூடப்பட்ட பொருளாதாரத்தை திறந்து விடவும் அதாவது ஒரு திறந்த பொருளாதார கொள்கையனையும் அறிமுகப்படுத்தியது இதனால் தனியாரும் அதிகளவில் உற்பத்தி வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டு சர்வதேச வர்த்தகத்திலும் ஈடுபட அனுமதி அளித்தது. எனினும் அரசாங்க திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களை பாதுகாப்பதற்கும் அவற்றிடையே காணப்பட்ட பல்வேறுபட்ட குறைபாடுகளையும் நீக்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது இதன் அடிப்படையிலேயே அந்நிறுவனங்களில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கும் முகமாக பொது முயற்சிகள் குழு (Cope) எனும் ஓர் அமைப்பு உருவாக்கியது.

இவ்வாறு தனியார் மோகம் பொருளாதாரத்தில் அதிகரித்து வரும் கால கட்டத்திலேயே மக்கள் மயப்படுத்தல் என்னும் பெயரில் தனியார் மயமாக்கல் செயற்பாட்டிற்கு அத்திவாரம் இடப்பட்டது. ஆனால் இவ் அரசின் மக்கள் மயப்படுத்தல் நடவடிக்கையை அன்றைய கால கட்டத்தில் எதிர்கட்சியாக இருந்த சுதந்திரக்கட்சி இது வறியமக்களை மேலும் வறியவர்கள் ஆக்குவதுடன் நமது நாட்டையே வெளிநாடுகளுக்கு ஏலம் போடும் ஒரு சதி முயற்சி என மேடை தோறும் முழங்கின. ஆனால் இன்று அதே கட்சி பொதுமக்கள் ஐக்கிய முன்னணி என்று தனது கட்சியின் பெயரை மாற்றிக் கொண்டு பதவியேற்ற பின் கூறிய வாக்குறுதிகளில் ஒன்றே முன்னைய அரசு மேற்கொண்ட மக்கள் மயமாக்கல் பாரியளவில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்பதாகும் எனவே மக்கள் மயமாக்கல் இலங்கை அரசுகளின் ஆட்சிக் காலத்தில் தொடரப் போகும் ஒன்றாகும். என கூறலாம் இம் மக்கள் மயமாக்கலானது ஐ.தே. கட்சியினால் 1985 ல் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இச் செயற்பாட்டிற்கு ஒரு ஆரம்ப நடவடிக்கையாகவே 1987ம் ஆண்டு 23இல் சுவீகரிக்கப்பட்ட நிறுவனங்களையும் அரச கூட்டுத்தாபனங்களையும் பொதுக்கம்பனியாக மாற்றியமைக்கும் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இச் சட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் பொதுக்கம்பனியாக மாற்றி அமைத்த பின்னரே அவற்றின் பங்குகளை தனியார், வெளிநாட்டவர், அந்நிறுவனங்களில் பணிபுரிந்த ஊழியர்கள் போன்றோருக்கு விற்பனை செய்வதன் மூலமே மக்கள் மயப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றது. இச் சட்டத்தின் கீழ் மக்கள் மயப்படுத்தப்பட்ட முதலாவது கம்பனி யுனைட்டெட் மோட்டோர்ஸ் கம்பனி லிமிட்டெட் என்பதாகும். இதனைத் தொடர்ந்து ஏறத்தாழ முப்பதிற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மக்கள்மயப்படுத்தப்பட்டுள்ளதுடன் தற்போதைய அரசினாலும் இன்னும் பல அரச தொழில் முயற்சிகள் மக்கள் மயமாக்கப்படவுள்ளன. 1989 பங்குனி நடுப்பகுதியில் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த டிங்கிரி பண்டா விஜயதுங்கா தனியார் மயப்படுத்தும் குழு ( Privatisation Committee) என்னும் ஓர் குழுவை நியமித்தார் அது மட்டுமன்றி இது தொடர்பாக நிதி அமைச்சின் கீழ் வர்த்தகமயப்படுத்தும் பிரிவு என்னும் ஓர் பிரிவும் ஏற்படுத்தப்பட்டது. தற்போது இந்நடவடிக்கையை துரிதப்படுத்தும் முகமாக மக்கள்மயமாக்கல் அமைச்சு என்னும் ஓர் அமைச்சையும் நிறுவியுள்ளது.

அதுமட்டுமன்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கமானது தனியார் மயப்படுத்தற் கொள்கையை அமுல்படுத்துவதற்கு முன்னோடியாக இலங்கை வங்கியின் தலைவர் திரு. ராஜன் ஆசீர்வாதம் அவர்களின் தலைமையின் கீழ் பொது நிறுவனங்கள் சீர்திருத்த ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளது. இக் குழுவில் 7 பேர் அங்கம் வகிப்பர் எனினும் தற்போது 5 பேர் நியமிக்கப்பட்டடுள்ளதுடன் பின்னர் இருவர் நியமிக்கப்படுவர் எனவும் அறிவித்துள்ளது.

ஆகவே இம் மக்கள் மயப்படுத்தலானது இன்னும் பதவிக்கு வந்துள்ள அரசும் முன்னைய அரசை விட அதிகமாக மேற்கொள்ள போவதாக அறிவித்துள்ளதுடன் அதற்கான பல ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள இவ் வேளையில் மென்மேலும் இம் மக்கள் மயமாக்கல் இலங்கை அரசுகளின் ஆட்சியில் ஒரு பரிணாம வளர்ச்சியடையப் போகும் ஒன்றாகவே அமையும் என்பதில் ஐயப்பாடு எதுவுமின்றி புலப்படுகிறது.

## இலங்கை அரசு மேற்கொள்வது உண்மையில் ஒரு மக்கள் மயப்படுத்தல் செயற்பாடா?

மக்கள் மயப்படுத்தல் என்பதற்கு அரசு கூறும் விளக்கம் என்ன வெனில் அரசுக்கு சொந்தமான உற்பத்தி வர்த்தக முயற்சிகளில் ஈடுபடும் நிறுவனங்களை அந்நிறுவனத்தில் வேலை செய்யும் ஊழியர்க்கும் பொதுமக்கள், உள்நாட்டு வெளிநாட்டு தனியார் போன்றோருக்கு உரிமைமாற்றி கொடுப்பதையே மக்கள் மயப்படுத்தல் என்கிறது. இவ்வாறு அரச நிறுவனம் ஒன்றை மக்கள் மயப்படுத்தும் போது அதன் உரிமையில் (பங்குகளில்) 10% ஐ அந்நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்க்கு இலவசமாகவும் 30% ஐ பொதுமக்களுக்கும் மிகுதி 60% ஐ உள் நாட்டு வெளிநாட்ட தனியார் நிறுவனங்களிடமும் ஒப்படைக்கின்றது. பொதுவான ஒரு நோக்கில் பார்க்கும்

போது ஒரு தொழில் நிறுவனத்தின் உரிமை மூலதனத்தில் 51% க்கு மேற்பட்ட தொகையயை எவ்வகையினர் வைத்துள்ளனரோ அவர்களே அந்நிறுவனத்தின் உரிமையாளராக காணப்படுவர். அதாவது ஏனையோர் அந்நிறுவனத்தில் சுதந்திரமான தீர்மானத்தையோ அன்றி கொள்கையையோ வகுக்க முடியாத நிலை காணப்படும் இந்த வகையில் இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் மக்கள் மயப்படுத்தல் என்னும் பெயரிலான உரிமை மாற்றமானது முற்று முழுதாக தனியாருக்கு விற்றுவிடும் ஒரு தனியார் மயப்படுத்தல் நடவடிக்கை எனவே கூறலாம். அது மட்டுமன்றி மக்கள் மயப்படுத்தலின் போது அந் நிறுவனத்தில் பணியாற்றிய ஊழியருக்கு 10% பங்குகள் இலவசமாக வழங்கப்பட வேண்டுமென்று மக்கள் மயப்படுத்தல் தொடர்பான சட்டத்திலோ அல்லது வேறெந்த சட்டத்திலுமோ குறிப்பிட்டு கூறப்படவில்லை. எனவே உரிமை மாற்றமானது நியாயமானது என கூறமுடியாது. இதற்கு நல்ல உதாரணமாக இலங்கை அரசு முதன் முதலில் மக்கள் மயப்படுத்திய யுனைட்டெட் மோட்டோர்ஸ் கம்பனியின் பங்குகளில் 5% மட்டுமே ஊழியருக்கு வழங்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல துல்கிரிய ஆடைத் தொழிற்சாலை மக்கள் மயப்படுத்தும் போது அதன் பங்குகள்100% ஐயும் தென்கொரியா நாட்டு கம்பனி ஒன்றான வெளிநாட்டு கம்பனிக்கு விற்பனை செய்துள்ளது.

அரசாங்கம் மக்கள் மயப்படுத்தல் என்ற பெயரில் தான் மேற்கொள்ளும் தனியார் மயப்படுத்தலுக்கு பல நியாய பூர்வமான காரணங்களை முன்வைக்கவும் முனைந்துள்ளது. அதாவது அரச நிறுவனங்கள் பல தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்குகின்றன அவற்றின் நடைமுறை செலவுகளை கூட ஈடுசெய்ய முடியாத நிலையிலுள்ளன. இதனால் திறைசேரிக்கு பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டு அரசு பாரிய பொருளாதார சிக்கல்களை எதிர் நோக்கியுள்ளது. போன்ற இன்னோரன்ன பல நியாயபூர்வமான காரணங்களை முன்வைக்க முனைகிறது. அதற்கான மழுப்பல் நடவடிக்கையாகவே ஊழியர்களுக்கான 10% பங்குரிமை ஒதுக்க அறிவிப்பாகும் ஏன் இவ்வளவும் தனியார் மயப்படுத்தல் என்ற பெயரைப் பயன் படுத்தியே தற்போது செய்வது போல் ஒரு பூரணமான தனியார் மயமாக்கலை மேற்கொள்ளலாமே எனவே அரசு பயன்படுத்தும் மக்கள்மயப்படுத்தல் என்னும் சொல்முற்றிலும் முரண்பட்ட ஒரு கருத்தையே கொண்டுள்ளது. ஏனெனில் மக்கள் மயப்படுத்தப்படுவன அரசாங்க நிறுவனங்கள் அல்லது அரசாங்க சொத்துக்களே ஆகும். அரசாங்க சொத்துக்கள் மக்களுடைய சொத்துக்கள் ஆகும் இவ்வாறு மக்களுடைய சொத்துக்களை தனியாரிடம் விற்பனை செய்து விட்டு அவ்வாறானதொரு நடவடிக்கைக்கு மக்கள் மயப்படுத்தல் என பெயரும் இட்டுள்ளது உண்மையில் அரசு செய்வதற்கு மாறாக தனியாருடைய நிறுவனங்களையும் சொத்துக்களையும் அரசாங்கம் சுவீகரித்து மக்களுக்கு சொந்தமாக்கின் அதனை மக்கள் மயப்படுத்தல் என்று அழைக்கலாம். அதைவிடுவித்து விட்டு ஆங்கில அகராதியில் கூட காண முடியாத ஒரு சொல்லைப் பயன்படுத்தி சொல்வது ஒன்றாகவும் செய்வது வேறொன்றாகவும் முற்றிலும் ஒரு முரணான செயற்பாட்டை அரசு மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்ல 1989ல் டிங்கிரி பண்டா விஜயதுங்கா அவர்களினால் நியமிக்கப்பட்ட குழுவின் பெயரே தனியார் மயப்படுத்தும் குழு (Privatisation Committee) என்பதாகும்.

எனவே இவற்றையெல்லாம் ஒட்டு மொத்தமாக நோக்கும் போது இலங்கை அரசு மேற்கொள்வது உண்மையில் ஒரு மக்கள் மயப்படுத்தல் செயற்பாடா? என கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது.

## மக்கள் மயப்படுத்துலுக்கு அரசு மேற்கொண்ட வழி முறைகளும் நடவடிக்கைகளும்

இலங்கை அரசாங்கம் மக்கள் மயப்படுத்தலுக்கு மேற்கொள்கின்ற வழி முறைகளை பின்வருமாறு ஒப்பிட்டு நோக்கலாம்

1. அரசாங்கம் தனியுரிமை வகித்து வந்த சில உற்பத்தி வர்த்தக முயற்சிகளில் தனியாரையும் ஈடுபட அனுமதி வழங்குவதன் மூலம் தனியார் மயப்படுத்தலை மேற்கொள்ளல்.

உதாரணம் : தனியார் துறையினரையும் காப்புறுதி தொழிலில் ஈடுபட அனுமதி வழங்கியமை

பயணிகளுக்கான பஸ்சேவையில் இலங்கை போக்குவரத்து சபைக்கு போட்டியாக தனியாரையும் பஸ் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்பட்டமை முகவர் தபால் நிலையங்கள் அமைக்கப்பட்டமை விபரகொத்து வெளியிடும் பணியை தனியார் கம்பனியிடம் ஒப்படைத்தமை

2. அரசதுறை நிறுவனங்களில் காணப்படும் திறமையற்ற நிர்வாக நடவடிக்கைகளை சிறப்புற நிர்வகிக்கும் முகமாக நிர்வாக பொறுப்பை தனியாரிடம் ஒப்படைத்தல்

உதாரணம்: 44922. அரசு பெருந்தோட்டங்களின் முகாமையினை தனியார் கம்பனியிடம் ஒப்படைத்தமையும் துல்கிரிய, வியாங்கொட, பூகொட போன்ற ஆடைத் தொழிற்சாலைகளின் முகாமை கையளிப்பையும் குறிப்பிடலாம்.

3. தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்கி வரும் அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை விரிவுபடுத்தும் முகமாக அவற்றுடன் தொடர்புபட்ட விதத்தில் கம்பனிகள் சட்டத்தின் கீழ் கம்பனிகளை உருவாக்குதல் இவ்வாறு உருவாக்கப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் ஒரு குறிப்பிட்ட வீதத்தை பொதுமக்களுக்கும் வழங்குதன் மூலம் தனியார் மயமாக்கலுக்கு அடி எடுத்துக் கொடுத்தல்.

உதாரணம்: 1982ம் ஆண்டளவில் சந்தைப்படுத்தும் திணைக்களத்தின் பழம் பதனிடும் தொழிற்சாலைகளை கொண்டு நடாத்துவதற்கு வரையறுக்கப்பட்ட லங்கா கனேறிஸ் லிமிட்டெட் உருவாக்கப்பட்டமை.

இவ்வாறு அரசாங்கம் தனக்கு சொந்தமான அமைப்புக்களை மக்கள் மயப்படுத்துவதற்கு பல வகையான வழி முறைகளை கையாண்டுவந்தாலும் கூட இவ் வழிமுறைகளுடன் கூடவே மக்கள் மயப்படுத்தல் தொடர்பான ஒரு திட்டவட்டமான கொள்கையை வகுக்கும் முகமாகவும் 1957ம் ஆண்டின் 23ம் இலக்க சுவீகரிக்கப்பட்ட அரச நிறுவனங்களையும், கூட்டுத்தாபனங்களையும் பொதுக்கம்பனிகளாக மாற்றியமைக்கும் சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர் அவற்றினை மக்கள் மயப்படுத்தும் முகமாகவும் பின்வரும் நடைமுறைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

குறிப்பிட்ட நிறுவனத்தின் சொத்துக்களை அரச மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்படுகின்றது. அத்துடன் நிறுவனத்தின் மூலதன கட்டமைப்பும் தீர்மானிக்க வேண்டும் அதாவது மூலதனம் எவ்வளவு பெறுமதியான எத்தனை பங்குகள் வழங்கப்பட்டன என்ற வகையில் மூலதன கட்டமைப்பு தீர்மானிக்கப்பட வேண்டும் அதன் பின்னர் திறைசேரி செயலாளர் கையொப்பமிடப்பட்ட அமைப்பு அகவிதி, புறவிதி, பத்திரங்கள் தயாரிக்கப்பட வேண்டும் இப் பத்திரங்களில் குறிப்பிட்ட மூலதன கட்டமைப்பு நிர்வாக உறுப்பினர் விபரம் என்பவற்றை குறிப்பிட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டு உரிய அமைச்சரினூடாக சுவீகரிக்கப்பட்ட நிறுவனத்தை கம்பனியாக மாற்ற முடிவு செய்து அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டதையும் மூலதன அமைப்பு, அகவிதி, புறவிதி என்பவற்றின் பிரதிகளும் இணைக்கப்பட்டு நிதி அமைச்சருக்கு அனுப்பப்பட்டு நிதி அமைச்சின் இசைவு பெறப்படவேண்டும் நிதி அமைச்சரின் இசைவு பெறப்பட்ட பின்னர் அந்த இசைவு கடிதம், அமைப்பு அகவிதி, புறவிதி, அமைச்சரவையின் அங்கிகாரம், மூலதன அமைப்பு என்பவற்றை கம்பனி பதிவாளருக்கு சமர்ப்பித்து 1982ம் ஆண்டு 17ம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு அமைய பதிவு செய்யப்பட்டு கூட்டிணைத்தற் கட்டளையைப் பெற்று ஒரு பொதுக் கம்பனியாக மாற்றப்பட வேண்டும் இவ்வாறு

பொதுக்கம்பனியாக மாற்றப்பட்டது குறித்து வர்த்தக மானியில் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படும் இவ்வாறு பொதுக் கம்பனியாக மாற்றப்பட்டாலும் அதனுடைய முழுப்பங்குகளும் திறைசேரி செயலாளரின் பதவிப் பெயருக்கே கம்பனிப் பதிவாளர் ஒதுக்கீடு செய்வார் எனவே தற்போதும் இது ஓர் அரச நிறுவனமாகவே காணப்படும். எனவே திறைசேரி செயலாளரின் பெயருள்ள பங்குகளை பகுத்து வழங்குவதன் மூலமே தனியார் மயப்படுத்தல் என்னும் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றது.

மக்கள் மயமாக்கலுக்குள் அரசுகள் மென்மேலும் தள்ளப்பட்டமைக்கான காரணங்கள்

அண்மையில் பதவிக்கு வந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசும் சரி மக்கள் மயமாக்கலை இலங்கைக்கு அளித்த அன்றைய ஆட்சியாளர்களான ஐக்கிய தேசிய கட்சியும் சரி மக்கள் மயமாக்கல் தொடர்பான பலவிதமான எதிர்ப்புக்களை பல விதமான கோணங்களிலிருந்தும் சந்தித்தவைதான் சந்தித்துக்கொண்டும் இருக்கின்றனதான் எனினும் இம்மக்கள் மயப்படுத்தலுக்குள் இவ் அரசாங்கங்கள் தொடர்ந்தும் இற்றைவரை தள்ளப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இதற்கு முன்னர் குறிப்பிட்டது போன்று தற்போதைய அரசும் மக்கள் மயப்படுத்தலை தொடர்ந்து விரிவு படுத்தப் போவதாக அறிவித்துள்ளமை ஒரு நல்ல சான்றாக கொள்ளலாம். இவ்வாறு பதவிக்கு வரும் ஒவ்வொரு அரசும் மக்கள் மயமாக்கலை விரும்பி ஏற்று செயற்படுத்துகின்றது. என்பதை விட இவை மக்கள் மயப்படுத்தலுக்குள் (தனியார் மயமாக்கல்) தள்ளப்பட்டுள்ளன என்று கூறலாம். இதற்கான முக்கிய காரணங்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

1. அரச பாதிப்பில் ஏற்பட்ட பற்றாக்குறை

   அதாவது அரச கூட்டுதாபனங்களில் தமது நடைமுறை செலவுகளை கூட ஈடுசெய்ய முடியாத நிலையில் இருக்கின்றமை இதனால் அவற்றின் செலவுக்காக அரசாங்க பதிலீட்டு செலவுகள் அதிகரித்து தொடர்ச்சியான ஒரு பற்றாக்குறை நிலையை அனுபவித்தது இதனால் அரசாங்கம் கடன் பொறிக்குள் சிக்க வேண்டிய நிலைக்கும் உள்ளானதுடன் வெளிநாடுகளிலும் தங்கியிருக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்த நிலையை தவிர்க்கும் முகமாகவே அரசு மக்கள் மயமாக்கலை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

2. அரசதுறை நிறுவனங்களில் காணப்பட்ட திறமையற்ற நிர்வாக நடவடிக்கை
   அரச நிறுவனங்களில் காணப்பட்ட அளவுக்கு அதிகமான ஊழியர் பிரச்சினையும் அதுமட்டுமன்றி அவர்களில் பலர் அரசாங்க ஆதரவாளர்களாகவும் காணப்பட்டமையாலும் ஏற்பட்ட பல பிணக்குகளால் தோன்றிய திறமையற்ற நிர்வாக அமைப்பும் அரசாங்கத்தை மக்கள் மயப்படுத்தலை தொடர்ந்தும் மேற்கொள்ள வழிவகுத்தது எனலாம்.

3. அரசாங்கம் சில முக்கியமான தொழில் முயற்சிகளில் தனியுரிமை வகித்து வந்தது. இவ்வாறு தனியுரிமை வகித்த தொழில்களில் தனியாரையும் ஈடுபடுத்தி திறமையான செயற்பாட்டை மேற்கொள்ளும் தேவைப்பாட்டின் நிமித்தமும் அரசானது தனியார் மயமாக்கலை மேற்கொள்ள வேண்டி நேரிட்டது.

4. மக்கள் மயப்படுத்தல் மூலம் அரசாங்க சொத்துக்களை விற்று வரும் வருமானத்தைக் கொண்டு அதிகரிக்கும் அரசசெலவை ஈடுசெய்யவும், இலங்கையின் மூலதனச் சந்தையை ஒரு மேம்பாட்டு நிலைக்கு உயர்த்துதல் போன்ற அரசின் எதிர்பார்ப்புக்களும் மக்கள் மயப்படுத்தல் செயற்பாட்டிற்கு வழிவகுத்தது.

5. இத் தனியார் மயப்படுத்தல் மூலம் நீண்டகால நோக்கில் இலங்கையை ஒரு சந்தை முறைமை அதாவது முதலாளித்துவ நாடாக ஆக்கமுற்பட்டமையும் மக்கள் மயமாக்கலை மேற்கொள்ள வழிவகுத்தது.

எவ்வாறாயினும் இவ்வாறான பல காரணங்களின் நிமித்தமும் காலத்தின் தேவையின் நிமித்தமும் அரசியல் இலாபத்தின் அடிப்படையிலும் ஒவ்வொரு முறையும் பதவிக்கு வந்துள்ள அரசுகள் தனியார் மயமாக்கலுக்குள் தள்ளப்பட்டுள்ளமை வெளிப்படையான உண்மையாய் உள்ளது.

## அரசின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறுமா?

ஏற்கனவே கூறப்பட்டது போன்று அரசு பலவிதமான பொருளாதார, சமூக, அரசியல், கலாச்சார வளர்ச்சிகளை எதிர்பார்த்து மக்கள் மயப்படுத்தல் என்னும் ஓர் உரிமை மாற்ற நடவடிக்கையை மேற்கொண்டது ஆனால் இந்த எதிர்பார்ப்புக்கள் எந்த அளவுக்கு நியாாமானவை அவ் எதிர் பார்ப்புக்களினால் அரசு எட்டியுள்ள சில முக்கிய பலாபலன்களையும் நோக்குவோம்.

01. மக்கள் மயமாக்கல் மூலம் அரசாங்க நிறுவனங்களும் அரச சொத்துக்களும் மக்களிடமும் அரச ஊழியரிடமும் ஒப்படைக்கப்படுகின்றது. என கூறுகின்றது. ஆனால் உண்மையில் நடப்பது என்ன அரசநிறுவனங்களையும் சொத்துக்களையும் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களிடம் ஒப்படைத்து வருகின்றது இதில் எது அரசின் எதிர்பார்ப்பு, எவ்வாறான பலாபலனை எதிர்பார்க்கின்றது என்பது புரியாத புதிராய் உள்ளது.

02. ஏற்கனவே கூறப்பட்டது போன்ற நடைமுறை செலவுகளை ஈடுசெய்ய கூட வருமானம் உழைக்காத அரச நிறுவனங்களை மக்கள் மயமாக்களுக்கு உட்படுத்துகின்றோம் எனக் கூறிய அரசாங்கம் எந்த தேவையை அல்லது பலாபலனை எதிர்பார்த்துக் கொண்டு இலாபத்தில் இயங்கும் அரச நிறுவனங்கள் சிலவற்றை மக்கள் மயப்படுத்தியுள்ளதுடன் மேலும் மக்கள் மயப்படுத்த எத்தனித்தும் வருகின்றன.

03. மக்கள் மயமாக்கல் மூலம் அரசநிறுவனங்களுக்கான செலவுகளை கட்டுப்படுத்தி அரச வருமானத்தை பெறலாம் என எதிர்பார்த்தது இவ் எதிர்பார்ப்பை அரசாங்கம் ஓரளவு நிறைவேற்றி தனது நிதிச் சுமையை குறைத்துக் கொள்ளலாம் ஆனால் வேறுவிதமாக நோக்கும் போது பொதுமக்கள் தனியாரிடம் பொதுவாக நுகர்வு பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்யகூட அதிகளவு பணத்தை செலவிடவேண்டி நேரிடலாம்.

04. முக்கியமாக மக்கள் மயமாக்கல் மூலம் அரச ஊழியர்களையும் நிர்வாகத்தில் ஈடுபடுத்தி அவர்களின் உரிமையை பெற வழி செய்துள்ளது என கூறகின்றது ஆனால் மக்கள் மயமாக்கப்பட்ட நிறுவனத்தின் 10% ஆன பங்குகளை ஊழியர்க்கு ஒதுக்கப்படுகின்றது. அது கொள்கையளவில் மட்டுமே சில வேளைகளில் அவ் உரிமையும் வழங்கப்படவில்லை. மாறாக மிகுதி 90% மும் சில வேளைகளில் 100% மானவையுமே உள் நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. இந்நிலையில் ஊழியர்களால் சில வேலைகளில் ஒரு இயக்குனரை கூட தெரிவு செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது.

05. மக்கள் மயப்படுத்தல் மூலம் இலங்கையை ஒரு சந்தைமுறைமை கொண்ட முதலாளித்துவ பொருளாதாரமாக உருவாக்குவதற்கு எதிர்பார்திருக்கலாம் ஆனால் இது ஒரு நீண்ட கால பொருளாதார கொள்கை ஆகும் எனவே மக்கள் மயப்படுத்தலினால் தற்போதைய மக்கள் அனுபவிக்கும் எதிர்விளைவான கஷ்டங்களையும் கருத்திற் கொண்டே அதாவது ஒருபக்க விளைவை மட்டும் கருத்திற் கொள்ளாது மக்கள் மயமாக்கல் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் அதை விடுத்து விட்டு மக்கள் மயமாக்கலில் அரசு போகின்ற போக்கைப் பார்த்தால் முக்கியமான சில பணிகளை கூட குறிப்பாக நிதி, நிர்வாகம், பொது ஒழுங்கு போன்றவற்றைகூட தனியாரிடமும் ஒப்படைத்து விடும் போலல்லவோ தெரிகிறது.

எனவே எந்தவொரு பொருளாதாரத்திலும் தற்போது முழுமையான தனியாரின் செயற்பாடோ அல்லது முக்கியமான அரசின் செயற்பாடோ மேற்கொள்ளப்படுவதில்லலை மேற்கொள்ளவும் முடியாது எனவே தான் ஒரு அரசாங்கம் நடாத்த வேண்டிய தொழில் முயற்சி எது? தனியார்

மயப்படுத்த வேண்டிய தொழில் முயற்சி எது என்பதை பலவிதமான விளைவுகளையும் கவனத்திற் கொண்டு ஆராய்ந்த பின்னரே தனியார் மயமாக்கலில் ஈடுபடுவதுடன் அரசாங்கம் செய்வதை சொல்ல வேண்டும் அல்லது சொல்வதையாவது செய்யத்தக்க வகையில் இச் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும் அதாவது மக்கள் மயப்படுத்தல் எனக் கூறிக் கொண்டு தனியார்மயப்படுத்தலை மேற்கொள்வதை விடுத்து நேரடியாகவே தனியார் மயப்படுத்தல் என்னும் சொல்லைப் பயன்படுத்தி ஒரு கொள்கையை உறுதியாகவே கடைப்பிடித்து நடைமுறைப்படுத்துமெனின் நிச்சயமாக தனியார் மயமாக்கலினால் ஒரு வெற்றியை காணமுடியும்.

# "யாழ்ப்பாணத்தில் வங்கியில் வரலாறு"

சி.ப. இராஜீவன்
(பழைய மாணவண்)
உதவி முகாமையாளர்
கொமர்சியல் வங்கி
யாழ்ப்பாணம்.

பணம் தோன்றிய வரலாறு

ஆரம்ப காலத்தில் மனிதனின் தேவைகள் மட்டுப்படுத்தப்பட்டவைகளாக இருந்த பொழுது அவன் தனது அடிப்படை தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றை தானே தேடிக்கொண்டு வாழக் கூடியவகை இருந்தமையினால் பணம் என்ற ஒன்று அவனுக்குத் தேவைப்படவில்லை. நாளடைவில் மனிதனின் தேவைகள் வளர்ந்து கொண்டே போக அவன் தனது தேவைகளை பூர்த்தி செய்வதற்காக் ஒருவரில் ஒருவன் தங்கி நிற்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டான். இதற்கு கைமாறாக மற்றவர்களிற்கு தேவையான ஒன்றை வழங்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. ஆரம்பத்தில் இந்த கொடுப்பனவுகள் பண்டமாற்று முறை மூலமே நடாத்தப்பட்டது. இப் பண்டமாற்று முறையில் உள்ள சிக்கல்கள், மற்றும் இன்னொருவருக்கு தேவைப்படாத ஒரு குறிப்பிட்ட பண்டம், ஒருவரிடம் அளவுக்கதிமாக இருத்தல் போன்ற சிக்கலான காரணிகளினால் பண்டத்திற்குப் பதிலாக சுலபமாகக் கொடுத்து வாங்கக் கூடிய ஒரு ஊடகத்தை கண்டு பிடிக்க வேண்டிய தேவை மனிதனுக்கு ஏற்பட்டது. இந்த ஊடகமானது நிலைத்து நிற்கக் கூடியதும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதும், சுலபமாக சேமித்து வைக்கப்படக்கூடியதும், நானாவிதமான கொடுப்பனவுகளிற்கும் பயன்படக்கூடியதுமான ஒரு பொருளாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக தங்கம், வெள்ளி போன்ற பெறுமதி மிக்க உலோகங்களிலான நாணயங்கள் பாவணைக்கு வந்தன. நாளடைவில் இந்த உலோகங்களின் பெறுமதி காரணமாக அவற்றின் பாவணையாளர்கள் அவற்றை உருக்கியும், சில பகுதிகளை வெட்டியும் எடுத்ததன் காரணமாக இன்றைய பாவணையில் உள்ள பெறுமதியற்ற உலோகங்களினால் ஆன நான்யங்களும் கடதாசியினால் ஆன பணத்தாள்களும் பாவணைக்கு வந்தன. இவற்றையே பணம் என்ற அழைப்போம்.

வணிக வங்கிகளின் தோற்றம்

தமது உடனடித் தேவைக்கு மேற்பட்ட பணத்தை நம்பிக்கைக்குரியவர்களிடம் பாதுகாப்பிற்காக கொடுத்து வைக்கும் முறைமை பிபிலியின் காலத்தில் ஏற்பட்டது. அப்பொழுத மத குருமார்கள் நம்பிக்கைக் குரியவர்களாகவும், கோவில்கள் பாதுகாப்பான இடங்களாகவும் இருந்தன. பிரித்தானியாவிலே 17ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் நகை வியாபாரிகள் இத்தகைய நம்பிக்கைக்குரியவர்களாக திகழ்ந்தார்கள். இதன் காரணமாக மக்கள் இவர்களிடம் தங்கள் பணத்தை பாதுகாப்பிற்காக கொடுத்து வைக்க ஆரமபித்தார்கள். இதற்காக ஒரு பற்றுச் சீட்டையும் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். பணம் திரும்பவும் தேவைப்படும் பொழுது இந்த பற்றுச் சீட்டை மீளவும் கையளித்து பணத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய செயற்பாடு இருந்தது. இந் நகை வியாபாரிகள் செல்வாக்கு மிக்கவர்களாகவும், நம்பிக்கைக்குரியவர்களாகவும் திகழ்ந்தமையால் இவர்கள் கொடுக்கும் பற்றுச் சீட்டை மக்கள் தங்கள் கொடுப்பனவுகளிற்கு பயன்படுத்த ஆரம்பித்தமையே காசோலைகளின் அறிமுகமாகியது. தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணத்தை, பணம்தேவைப்படுபவர்களிடம் கொடுத்து அதற்காக வட்டியை நகை வியாபாரிகள் அறவிடத் தெடங்கினார்கள். இதற்காக தேவைப்படும் பணத்தை சேர்ப்பதற்காக தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணத்திற்கு வட்டி வழங்கும் நடைமுறையையும் இவர்கள் கைக்கொண்டார்கள். இதுவே

வங்கியியலின் ஆரம்பம் எனலாம்.

இன்று வங்கியானது பணத்தைப் பாதுகாப்பாக சேகரித்து வைத்திருப்பதோடு தன்னுடைய வாடிக்கையாளரின் விபரங்களை முக்கியமாக சேகரித்து வைக்கும் செயற்பாட்டை ( Storing Information) நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. பிரித்தாணிய ஆட்சியிலேயே யாழ்ப்பாணத்தில் வங்கியியல் அறிமுகமாகியது.

யாழ்ப்பாணத்தில் வணிக வங்கிகளின் முன்னோடிகள்

70 ஆண்டுகளின் முன்பு கொய்லன் பாங்க் ஒன்றியல் பாங்க் யாழ்ப்பாண ஐக்கியலாப நிதி என்ற பெயரில் மூன்று வங்கிகள் யாழ்ப்பாணத்தில் இயங்கின. கொய்லன் பாங்க் இந்தியாவில் கேரளத்தில் திருவிதான் கூரைத் தலைமையகமாக கொண்டு செயற்பட்டது. அந்நாட்களில் யாழ்ப்பாணம் புகையிலை பெருமளலவில் கேரளாவிற்கு (முன்னைய மலையாளம்) ஏற்றுமதியானதினால் இந்த வங்கி இங்கே நன்றாக செயற்பட்டது.

ஒன்றியல் பாங்க் ஒவ் மலேசியா லிமிட்டெட் மலேசியாவை தலைமையகமாக கொண்டு செயற்பட்டது. பெருமளவு யாழ்ப்பாணத்தவர்கள் தொழில் வாய்ப்பு தேடி மலேசியாவிற்கு சென்றதனினால் அவர்கள் தங்கள் குடும்பத்தவர், மற்றும்உறவினர்களிற்கு பணம் அனுப்புவதற்காக இந்த வங்கியினை தேர்ந்தெடுத்தார்கள். மேலும் இந்த வங்கி இந்திய வம்சாவளி செட்பிமார் செய்து வந்த நகை ஈடுபிடிக்கும் தொழிலையும் கையாண்டு வந்தது. அந் நாட்களில் மத்திய வங்கி இங்கே அமைக்கப்படவில்லை நாணயக் கட்டுப்பாடுகள் இருக்கவில்லை. ஏற்றுமதி இறக்குமதி சட்டங்களும் கடினமாணவையாக இருக்கவில்லை. அத்துடன் இலங்கை, இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளும் ஒரே ஆட்சியாளரின் கீழ் இருந்தமையினால் மக்களின் பணப் பரிமாற்றம் இந்த வங்கியினூடாக தங்கு தடையின்றி நடைபெறும் வாய்ப்புக்கள் இருந்தன.

அடுத்த வங்கியான யாழ்ப்பாண ஐக்கிய லாப நிதியமும் மலேசியாவில் தொழில் புரியும் இலங்கையர்களினாலேயே ஆரம்பிக்கப்பட்டது. இதன் பின்னால் கொழும்பில் இயங்கிவந்த இந்தியன் வங்கி தன் கிளை ஒன்றை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து மந்தமான வர்த்தகம் காரணமாக அதனை மூடிவிட்டது

பின்னர் 1939ம் ஆண்டில் ஆங்கிலேயரின் மேர்க்கண்டைல் வங்கி இங்கு ஆரம்பமானது. மேர்க்கண்டைல் பாங்க் ஒவ் இந்தியா லிமிட்டெட் என்று இதற்கு பெயர் இதற்கிடையில் யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த மற்றொரு முக்கிய வங்கி யாழ்ப்பாணம் கூட்டுறவு வங்கியாகும். இவ் வங்கி ஆரம்பத்தில் ஐக்கிய நாணய சங்கங்களை ஆரம்பிக்கவும் வளர்க்கவும் ஆரம்பித்து பின்னர் இரண்டாவது உலகமா யுத்தத்தில் கூட்டுறவு சங்கங்கள் அளப் பெரும் சேவை செய்ய ஊன்று கோலாக அமைந்தது. யாழ்ப்பாணத்தில் மேர்க்கண்டைல் வங்கி ஆரம்பமான பின்னர்தான் வங்கித்துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டது எனலாம். இரண்டாவது உலகமகா யுத்தத்தில் போர் பணியில் ஈடுபட்டு உயிர் நீத்த மேர்க்கண்டைல் வங்கி ஊழியர்களின் நினைவுச் சின்னத்தின் புகைப்படப் பிரதி ஒன்று தற்போதைய கொமேர்சியல் வங்கி யாழ் கிளையில் உள்ளது. இந்த மேர்கண்டைல் வங்கியானது உலகின் பல பாகங்களிலும் கிளைகளை கொண்டிருந்ததும் ஆட்சியாளர் சமுதாயமே வங்கியாளார்களாக இருந்ததும் குறிப்பிடத்தக்கது. அன்றைய யாழ்ப்பாண மக்களிற்கு வங்கி என்றால் என்ன? வங்கியினால் மக்களிற்கு ஏற்படும் நன்மைகள் என்ன என்பனவற்றை உணர்த்தி வைத்த பெருமை மேர்க்கண்டைல் வங்கியையே சாரும்

இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும்

இவை இங்ஙணம் இருக்க 1945ம் ஆண்டில் இலங்கை வங்கியும் அதனைத் தொடர்து மக்கள் வங்கியும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டன. இந்த வருடம் இலங்கை வங்கி தனது 50ம் ஆண்டு நிறைவை கொண்டாடுகின்றது. 1969ம் ஆண்டு கொழும்பில் இயங்கிய ஈஸ்தேன் பாங்க் ஒவ் இந்தியா லிமிட்டெட் என்னும் ஸ்தாபனம் இப் போதைய கொமேர்ஸ்ஸியல் வங்கியின்

ஆரம்பம். இதனைத் தொடர்ந்து மேர்க்கண்டைல் வங்கியின் தலைமையகம் ஹட்டன் நெஷனல் வங்கியினாலும் அதன் யாழ்ப்பாணம், கண்டி, காலி ஆகிய கிளைகள் கொமேர்சியல் வங்கியினாலும் 1972ம் ஆண்டு சுவீகரிக்கப்பட்டன.

இன்றைய நிலை

இன்று யாழ்ப்பாணத்தில் இயங்கும் வங்கிகள் யுத்த சூழ்நிலை காரணமாக தமது செயற்பாடுகளை முடக்கி இயங்கவேண்டிய நிர்ப்பந்தங்களிற்கு உள்ளாகியுள்ளன. கணணிகளின் அதிமுகம் வங்கித்துறையில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ள போதிலும், யாழ்ப்பாண வங்கிகள் இன்னமும் கணணிகளை அறிமுகம் வங்கித்துறையில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ள போதிலும், யாழ்ப்பாண வங்கிகள் இன்னமும் கணணிகளை பயன்படுத்த ஆரம்பிக்கவில்லை. இலங்கை வங்கியின் மேல்தரக்கிளை தற்போது கணணிகளை அறிமுகம் செய்வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

யுத்த சூழ்நிலை நீங்கி, நிலையான சமாதானம் தோன்றினால், வெளிநாட்டு வங்கிகள் உட்பட, சில புதிய வங்கிகள் இங்கே அறிமுகமாகலாம் தேசிய அபிவிருத்தி வங்கி என்ற ஒரு வங்கியின் ஆரம்பத்திற்கான முன் முயற்சிகள் ஏற்கெனவே தொடங்கிவிட்டன. வடக்கு கிழக்கிற்கான பாரிய புனருத்தாரன அபிவிருத்தி பணியில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் அத்தனை வங்கிகளும் முழு மூச்சாக ஈடுபடும் பொழுது வங்கிச் சேவையின் முழு செயற்பாடுகளையும் அதன் பலாபலன்களையும் யாழ்ப்பாண மக்கள் உணர்ந்து கொள்ள வாய்ப்பிருக்கும் இவற்றை முற்று முழுதாக பயன்படுத்தி தங்களின் சொந்த வாழ்கை நிலையினையும், நாட்டினையும் முன்னேற்றும் பாரிய பணி யாழ்பாண மக்களின் முன் விரிந்து கிடக்கின்றது.

✧✧✧

# வர்த்தகத்தில் தொடர்பாடலின் இணைப்பு

செல்வன். து. ஜெயானந்தன்
ஆண்டு 12C

இக்கட்டுரையானது தொடர்பாடலும் வர்த்தகமும் எவ்வாறு இணைந்து இருக்கிறது என்பதனையும் ஒன்றில் ஒன்று எவ்வாறு தங்கி உள்ளது என்பதனையும் ஆய்வு செய்கிறது.

அறிமுகம் :

1.0. மனிதன் தோன்றிய காலத்திலிருந்து தொடர்பாடலும் தோன்றி உள்ளது. ஆரம்பகால மனிதன் வர்த்தகச் செயல் பாடுகளை சைகைகளின் மூலமும் ஒலிகள் மூலமும் இணைந்து செயல் படுத்தி வந்தது இதன் உடைய வளர்ச்சியின் இன்றைய தொடர்பாடலின் எண்ணக்கரு ஆகும். இருவர் அல்லது இரண்டுக்கும் மேற்பட்டவருக்கு இடையில் எண்ணங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் உணர்வுகள் என்பன பரிமாற்றப் படுவதனை தொடர்பாடல் என குறிப்பிடலாம்.

1.1 தொடர்பாடலின் வகைகள்

தொடர்பாடல் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முறைகளை அடிப்படையாக கொண்டு மூன்று வகையில் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

1. வாய் வழி மூலமான தொடர்பாடல்

மக்களோடு மக்கள் வாயில் இருந்து ஒலி எழுப்புவதன் மூலமாக தொடர்பாடலை மேற்கொள்வதனை இது குறிக்கின்றது

உதாரணம்

கலந்துரையாடல்

2. சைகை மூலமான தொடர்பாடல்

சைகைகள், குறியீடுகள் என்பவற்றின் மூலம் தகவல் பரிமாற்றி கொள்வதனைக் குறிப்பிடுகின்றது

உதாரணம்:- கை அசைத்தல் உதாரணமாக வீதி ஒழுங்கை நிலைநாட்டும் காவல் துறையினரின் கை அசைவு, பல்வேறு நிறமூட்டப்பட்ட மின்விளக்குகள் மூலம் போக்குவரத்துச் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதனை குறிப்பிடலாம்.

3 எழுத்து மூலமான தொடர்பாடல்

வரி வடிவங்களை உபயோகிப்பதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற செய்திப் பரிமாற்றங்கள் எழுத்துமூலமான தொடர்பாடல் எனப்படும்.

உதாரணம் வர்த்தக மாணவர்மன்ற பவள விழா மலர்

நிறுவனங்களுக்கு இடையே மேற்கொள்ளப்படுகின்ற தொடர்பாடல் தன்மைகளை முறமைப்படுத்தும் போது பின்வருவனவற்றினை மேற்கொள்ளலாம்

1. நிலைக்குத்தான தொடர்பாடல்

உயர் பதவியில் இருக்கும் ஒருவரிடம் இருந்து ஏனைய ஆள் அணியினரை நோக்கி வழங்கப்படுகின்ற செய்திப் பரிமாற்றம் நிலைக்குத்தான தொடர்பாடல் ஆகும் இத்தொடர்பாடல் மேலும் இருவகைப்படுத்தலாம்

1. கீழ் நோக்கிய தொடர்பாடல்

பொது முகாமையாளர் இடம் இருந்தும் மேற்பார்வையாளர் இடம் இருந்தும் சாதாரண தொழிலாளிக்கு வழங்கப்படுகின்ற தொடர்பாடல் கட்டமைப்பு ஆகும்.

மேல் நோக்கிய தொடர்பாடல்

அனுபவம் நிறைந்த சாதாரணதொழிலாளிகளில் இருந்து பொது முகாமையாளருக்கு வழங்கப்படுகின்ற கருத்துக்களும் செயல் ரீதியான விளக்கங்களையும் இது குறிக்கிறது சிறப்பு மிக்கதாக கருதப்படுவது இதுவாகும்

2. கிடையான தொடர்பாடல்

ஒரே தொழில் செயலாற்றுகின்ற ஆள்அணியினருக்கு இடையே ஏற்படுகின்ற தகவல் பரிமாற்றங்கள் கிடையான தொடர்பாடல் ஆகும்.

உதாரணம்: வகுப்பறையில் மாணவர்களுக்கு இடையே ஒரு பாடம் பற்றிய கலந்துரையாடல்.

### 1.2 ஒரு வழித்தொடர்பாடலும் இருவழித்தொடர்பாடலும்

செய்தியை அனுப்புபவர் அச்செய்தியை, பதில் அல்லது விளைவை உடனடியாக பெற்றுக் கொள்ள கூடிய இயல்பு அல்லது பின்னூட்டி அடிப்படையிலே இச்செய்தி பரிமாற்றங்கள் ஒருவழி இருவழி என பாகுபாடு செய்யப்படுகிறது.

செய்திகள் அனுப்புபவரினால் தனது செய்திக்குரிய பின்னூட்டியை உடனடியாக உணர்ந்து கொள்ள முடியும் ஆயின் இருவழித் தொடர்பு கொள்ளல் எனப்படும் (உதாரணம்) கருத்தரங்கு செய்தி அனுப்புகின்றவர் அதற்குரிய பதிலின் விளைவை அதாவது பின்னூட்டியை எதிர்பார்த்து இருப்பாராயின் ஒரு வழி செய்தி பரிமாற்றம் எனப்படும் (உதாரணம்) கடிதம். பின்னூட்டி என்பது செய்தியை அனுப்புவர் பெறுபவர் ஆகவும், பெறுபவர் அனுப்புபவர் ஆகவும் மாறுகின்ற நிலையினை குறிப்பிடுகிறது.

### தொடர்பாடல் சாதனங்கள்

செய்திப் பரிமாற்றம் பண்டைய காலங்களில் மரபுரீதியான சாதனங்கள் ஆகியபடியால் ஒலி எழுப்புதல் விலங்குகளை தூது விடுதல் போன்ற முறைகள் பயன்படுத்தப்பட்டு இருந்தன. ஆனால் விஞ்ஞானம் தொழில் நுட்பம் என்பவற்றின் அதிக வளர்ச்சி காரணமாக நிகழ் காலத்தில் பலவகையான புதிய சாதனங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. இச்சாதனங்கள் இங்கு ஆய்வு செய்யப்படுகிறது.

(A) கடிதங்கள்:-

தொன்று தொட்டு எழுத்து மூலமான முறையில் செய்திகளை அனுப்புவதற்கு கடிதங்கள் உபயோகிக்கப்படுகின்றன. இவை பல்வேறு வகையில் காணப்படுகின்றன.

1. உள்நாட்டு கடிதங்கள்
2. வெளிநாட்டு கடிதங்கள்
3. ஆள் குறித்த கடிதங்கள்
4. பதிவு செய்யப்பட்ட கடிதங்கள்
5. காப்புறுதி செய்த கடிதங்கள்
6. வியாபார பதில் கடிதங்கள்

(B) தந்திகள்

தொலைபேசியினை பயன்படுத்தி செய்திகள் மிக விரைவாக அனுப்புவதற்கு பயன்படுத்தபடும் எழுத்து மூலமான சாதனமாகும். இலங்கையில் அஞ்சல் பகுதியினால் இது கட்டுப்படுத்தப்படுகின்றது இத்தந்திமுறையில் தந்தி விபரங்கள் உபயோகிக்கபடுகின்றது இத்தந்திகள் பல வகைப் படுத்தப்படுகின்றது.

1. பல இன முகவரித்தந்தி
2. பதிலுக்கு பணம் கட்டியதந்தி
3. கடல் வழித் தந்தி
4. தொலை பேசித் தந்தி
5. கம்பியில்லாத் தந்தி

(C) தொலைபேசி

உள்நாட்டு வெளிநாட்டு தகவல் பரிமாற்றத்தில் நேருக்குநேர் செய்திப்பரிமாற்றத்தை மேற் கொள்ளுவதற்கு. உபயோகிக்க படுகின்ற வாய் மொழிமூலமான தகவல் பரிமாற்றமுறையாகும். இவை தொடர்பு கொள்ளலின் போது நேரடி தொலைபேசி மாற்றுவழி தொலைபேசி திரட்டும் அழைப்புமுறை போன்ற அடிப்படைகள் பின்பற்றபடுகின்றது. இன்று இலங்கையில் இருந்து அதிகளவு நாடுகளில் நகரங்கள் ஊடாக சர்வதேச நேரடி சுழற்சி (LOP) கையாளப்படுகின்றது.

தற்காலத்தில் தொலைபேசி தொடர்பு கொள்ளல் முறையானது அதிகளவில் அபிவிருத்தியடைந்திருக்கின்றது. விசைபலகைகள், கம்பியில்லா தொலைபேசிகள் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. இவை தொடர்பான விளக்கங்கள் தரப்படுகின்றன.

(அ) சொலுலர் தொலைபேசி நகரும் தொலைபேசி கம்பிகள் மூலமான இணைப்புக்கள் இன்றி வரையறுக்கப்பட்ட பிரதேசத்தின் வலைப்பின்னல் அமைப்பு முறையினைப் பயன்படுத்தி மின்அலைகள் மூலம் செய்திப் பரிமாற்றம் மேற்கொள்ளப்படும் முறையாகும். இது 1989 சொலுலர் லங்கா லிமிட்டெட் தனியார் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. சாதாரண தொலைபேசியிலிருந்து வேறுபாடுகளையும் சிறப்பான இயல்புகளையும் கொண்டிருக்கின்றது.

(ஆ) தொலை பேசி கொடுப்பனவு அட்டை

நாணய தொலை பேசிகளில் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் பிளாஸ்ரிக் அட்டைகளைப் பயன்படுத்தி தன்னியக்கமான முறையில் செய்திப்பரிமாற்றம் மேற்கொள்வதற்கான அட்டைகள் ஆகும். இலங்கையில் இப்படியான அட்டைகள் லங்காபோன் நிறுவனத்தினால் 50, 100, 300, 800 ஆகியவிலைகளில் விற்பனை செய்யப் படுகின்றது. பகிரங்க தொலை பேசி இயந்திரத்தினால் இவ்வட்டைகளை செலுத்தி 2,4மணி நேரமும் செய்தி பரிமாற்றத்தில் ஈடுபடலாம். இதேபோன்ற அட்டைகள் மேற்றோ பொலிட்டன் கம்பனியினால் மேற்றோ காட் என்னும் பெயரில் அறிமுகம் செய்யப் பட்டு உள்ளன.

(இ) தொலைபேசிவிபரக் கொத்து

தொலை பேசியை பயன்படுத்துகின்ற நிறுவனங்களின் வியாபார விளம்பரங்களை கொண்டதாக அகர வரிசைமுறையில் தனியார் கம்பனியினால் வெளியிடப்படும் மஞ்சல் பக்க விளம்பர புத்தகம் ஆகும்.

(ஈ) இன்ரகொம்

ஒரு நிறுவன்த்தில் உள்ளவர்கள் செய்திப் பரிமாற்றத்தினை மேற்கொள்ளுவதற்கு உள்ள தொடர்பு சாதானமாகும் இது நிறுவன முகாமையினால் கட்டுப்படுத்தப்படும் உள்ளக சாதனமாகும்.

(D) ரெலக்ஸ்

தட்டச்சு வடிவிலமைந்த இயந்திரத்தின் மூலம் அச்சு அடிப்பதன் ஊடாக வேறோர் இடத்தில் உள்ள இயந்திரத்தில் செய்தி பதிவு செய்யப்படுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற எழுத்து மூலமான சாதனமாகும். விரைவாகவும் உறுதியாகவும் செய்தியினை அனுப்பமுடியும். இது வெளிநாட்டு வியாபாரத்தில் விலைப்பட்டியலை அனுப்புவதற்கு உகந்ததாகும்.

(E) பக்ஸ் (Fax)

ஆவணங்களை நிழற்படப் பிரதிவடிவில் ஒரு முனையில் இருந்து இன்னொரு முனைக்கு அனுப்புவதற்கு பயன்படுத்தப்படுகிறது. படங்கள் வரைபுகள் ஆவணங்கள் A4 அளவுத்திட்டங்கள் மிகவிரைவில் அனுப்பப்படுகிறது.

(F) விரைவு தூதுவர் சேவை :-

உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு ஆவணங்கள், கடிதங்கள், பொதிகள் என்பனவற்றை அனுப்புவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. முகவர்கள் மூலம் சேகரிக்கப்பட்டு விரைவாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிவைக்கப்படும்

3. <u>தொடர்பாடல் நிறுவனங்கள்</u> :-

இலங்கையில் தொடர்பாடல் அபிவிருத்தியில் பல்வகைப்பட்ட நிறுவனங்கள் பங்களிப்பு செய்கின்றன. அவை தொடர்பாக இது ஆராயப்படுகிறது

1. தபால் திணைக்களம் (Postal department)

தபால் திணைக்களம் தபால்தொடர்புகளின் நடைமுறை அபிவிருத்தி என்பதற்கு பொறுப்பாக உள்ளது நாட்டிலுள்ள தபால் கந்தோர்கள் ஊடாக பல்வேறுவகையான சேவைகளை பொதுமக்களுக்கு வழங்குகிறது. உள்நாட்டு வெளிநாட்டு கடிதங்களை பொறுப்பேற்றல், விநியோக பொதிகள் பொறுப்பேற்றல், பணத்தினை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு அனுப்ப உதவுதல். தந்திகளை பெற்றுக் கொள்ளல், விநியோகம், வானொலி, தொலைக்காட்சி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் தொலைபேசி அழைப்பு வழங்கல் போன்ற பல்வேறுவகையான சேவைகளை பொதுமக்களுக்கு வழங்குகின்றது.

தற்போது தபால் திணைக்களம் திறமையான சேவையை உயர்ந்த வினைத்திறனுடன் வழங்கவும் வளங்களை உத்தமமாக பயன்படுத்தவும் செலவுகளை குறைக்கவும் பொதுமக்களை திருப்தியில் வைத்திருக்ககூடிய தபால் சேவையை நடாத்தும் பொருட்டு மறுசீரமைப்பினை மேற்கொண்டுள்ளது. இம்மறுசீரமைப்பில் குறிப்பிடத்தக்க அம்சங்களாக பின்வருவனவற்றினைக் குறிப்பிடலாம்.

1. ஒன்பது பிரதிதபால் மா அதிபர்கள் ஒவ்வொரு மாகாணத்திற்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டது.

11. இவர்களுக்கு போதியளவு நிர்வாக நிதி அதிகாரங்கள் வழங்கப்பட்டமை.

111. ஒன்பது உயர்நிர்வாக செயலாளர் ஒன்பது மாகாணங்களுக்கு பிரதிதபால் மா அதிபர்களுக்கு உதவி செய்ய நியமிக்கப்பட்டதோடு சுப்பிறின்டன் பதவி அகற்றப்பட்டமை

1v. மத்திய தபால் பரிவர்தனைக்கான நிரந்தரகட்டடமொன்று சீனாவின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

v. கடிதங்களை தரம்பிரிப்பதில் (Sorting) நவீன தன்னியக்கமுறைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

2. <u>முகவர் தபால் நிலையம்</u> :-

1977 க்குப் பின் தனியாரும் தபால் திணைக்களத்தின் அனுமதியுடன் தபால் கந்தோரைநடத்த அனுமதி வழங்கப்பட்டது. இது முகவர்தபால் நிலையம் எனப் பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. தெரிவு செய்யப்படும் முகவரானவர் மீளப் பெறமுடியாத வைப்பாக ரூபா 50,000 செலுத்த வேண்டும் இவ் முகவர் தபால் நிலையங்கள் தலைநகரிலும் பிரதான நகரங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது

இலங்கையில் முகவர் தபால் நிலையங்கள் அறிமுகப்பட்டதற்கான பிரதான காரணங்களாவன.

1. பொதுமக்களுக்கு மேலதிக வசதிகளை அளித்தல்

11. தலைநகரிலும் ஏனைய நகர்களிலும் தபால் நிலையங்களின் அழுத்தங்களை குறைத்தல்

111. அரசாங்கத்தின் சில செலவுகளை குறைத்தல்

1v. வேலைவாய்ப்புகளை வழங்குதல்

இவ் முகவர் தபால் கந்தோர் கடிதங்கள் பிற தபால்களை விநியோகிப்பதை தவிர ஏனைய பொதுவான சேவைகளை வழங்குகிறது.

பின்வரும் பொதுவான சேவைகளை பொது மக்களுக்கு வழங்குகிறது.

1. ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு பணத்தினை அனுப்புதல். உ.ம்: காசுக்கட்டளை விநியோகம்.
11. தந்திகளைப் பொறுப்பேற்றல்
111. பொதிகளைப் பொறுப்பேற்றல்
1v. பதிவுத்தபால்களைப் பொறுப்பேற்றல்
v. வானொலி தொலைக்காட்சி அனுமதிபத்திரம் வழங்கல்

3. ஸ்ரீ லங்கா ரெலிகொம்

198ப ஆண்டிலிருந்து இலங்கையில் தொலைத் தொடர்பு சேவைகளுக்கு தொலைத்தொடர்பு திணைக்களம் பொறுப்பான அமைப்பாக செயல்பட்டது. அதற்கு முன் தொலைத்தொடர்பு திணைக்களம் தபால் தொலை தொடர்பு திணைக்களத்தின் ஒரு பிரிவாக செயல்பட்டது. 1990 ஆண்டில் தொலைத் தொடர்புகளுக்கு பொறுப்பாக ஸ்ரீ லங்கா ரெலிகோம் கூட்டுத்தாபனம் தொலைத் தொடர்பு திணைக்களத்தின் பொறுப்புக்களை ஏற்று செயல்பட ஆரம்பித்தது 1857 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கையில் தொலைத்தொடர்பு சேவைகளை அளிக்கும் பொறுப்பு ரெலிகொம் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால் தொலைத்தொடர்பு சட்ட நியதிகளை செயல்படுத்தும் பொறுப்பு தொலைத்தொடர்பு இயக்குநர் நாயகத்தின் தலைமையில் செயல்படும் கந்தோரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தொலைத் தொடர்பு சேவைகளை விஸ்தரிப்பதற்கும் பயிற்சி திட்டங்களை செயல்படுத்துவதற்கும் யூ. என். டீ. பி, உலக வங்கி சர்வதேச தொலை தொடர்பு சங்கம் ஆகியவை ரெலிகொம் நிறுவனத்திற்கு உதவிகளை வழங்கும்.

* 1995 ஆம் ஆண்டிற்குள் தற்போதைய தொலைத் தொடர்பு அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு நாடு பூராகிலும் தொலைத் தொடர்பு தேவையை பூர்த்தி செய்தல்.
* நடமாடும் தொலைத்தொடர்பு சேவைகள் போன்ற புதிய சேவைகளை அளித்தல்
* அளிக்கப்படும் தொலைதொடர்பு சேவைகளின் தரத்தை உயர்த்தல்
* தொழிலாளர்களின் பயிற்சி திட்டங்களின் ஊடாக வாடிக்கையாளர் நல்லுறவை வளர்த்தல்
* கட்டணங்களை சீரமைப்பு செய்து நெருக்கடி அற்ற மணித்தியாலங்களில் தொலைத்தொடர்பு கட்டணங்களை குறைத்தல்
* மாதாந்த தொலைத்தொடர்பு கட்டணசிட்டைகளை காலதாமதமின்றி வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் பணக்கொடுப்பனவுகளை இலகுபார்த்தல்
* தொலைத் தொடர்பு சேவைகளை பெறுவதற்கான விண்ணப்பம் வழங்குமுறையை இலகு வாக்கல்

4. சர்வதேச தந்திவழிசங்கம்

1865ல் சர்வதேச தொலைத் தொடர்பு சங்கம் என பாரிசில் நிறுவப்பட்டது 1934ல் சர்வதேச தந்தி வழங்கற் சங்கம் என புனரமைக்கப்பட்டது. 1994ல் ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து ஜெனிவாவில் தலமைக்காரியாலயத்தினை கொண்டு செயல்படுகிறது. இதன் நோக்கம் பின்வருமாறு

* தந்திச்சேவை, வானொலிசெய்திச் சேவை, தொலைபேசிசேவை போன்றவற்றின் அபிவிருத்திக்கு தேவையான சட்டங்களை தயாரித்தல்
* தொடர்பாடல் துறையின் அபிவிருத்திக்காக ஆராய்ச்சி தொழில்நுட்ப பயிற்சி பாடநெறி ஆகியவற்றினை ஒழுங்கமைத்தல்
* சர்வதேச ரீதியில் தொடர்பாடல் அமைப்புகளுடன் தொடர்பினை ஏற்படுத்தல்

* செய்தித் தொடர்பாடல் நிலையங்களின் சேவைகளை பெறுவதற்கு அங்கத்துவ நாடுகளுக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தல்

5. இலங்கை செய்தித்தாள் கம்பனி

1978ல் சர்வதேச செய்தி அமைப்புடன் இணைந்து செய்திவெளிப்பாடுகளை மேற்கொள்வதற்காக அதிகாரம் பெற்ற நிறுவனமாக காணப்படுகிறது. இத்துடன் முக்கிய செய்தி பத்திரிகையான வீரகேசரி கம்பனி லிமிடெட், ரூபவாகினி கூட்டுத்தாபனம், ஒலிப்பதிவுக் கூட்டுத்தாபனம் என்பன இணைந்து செயற்படுகிறது. இதன் சேவைகள் வருமாறு.

1. உள்நாட்டு வெளிநாட்டு செய்திகளை பிரசுரித்தல்
2. உள்நாட்டு வெளிநாட்டு செய்திகளுக்கு மக்களுக்கு தொடர்பு சாதனங்களை பெற்றுக் கொடுத்தல்

4. வர்த்தத்தின் மேம்பாட்டில் தொடர்பாடலின் பங்கு

வர்த்தக ரீதியான நடவடிக்கைகள், வர்த்தகரீதியான அபிவிருத்திகள் முனைப்புடன் காணப்படுகின்ற இக்காலத்தில் தொடர்பாடல் சேவை இன்றியமையாததாக காணப்படுகிறது. ஒரு நிறுவனத்திற்கு பின்வரும் காரணங்களுக்காக செலவு சிக்கனமான, தெளிவான, நம்பிக்கையாக சட்ட பூர்வமாக இரகசியமான தொடர்பாடல் அவசியமாகும்

1. நிறுவனம் ஒன்று பிற நிறுவனங்னளுடன் தொடர்பு கொள்வதற்கு
2. பொருட்களுக்கான கட்டளைகளை அனுப்பி பொருட்களை பெறுவதற்கு நடவடிக்கையாளருக்கும் பங்குதாரருக்கும் தேவையான தகவல்களை வழங்குவதற்கு
3. சந்தை தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கும் சந்தை ஆராய்ச்சியினை மேற்கொள்வதற்கும்
4. ஊழியர்களுக்கு கட்டளை இடுவதற்கும் அறிவுறுத்தல் வழங்கவும் அவர்களிடம் பின்னூட்டியின் அடிப்படையில் ஆலோசனை பெறுவதற்கு.
5. நிறுவனம் மேம்படுத்தல் நடவடிக்கைகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கும் அவசியமாகும்

முடிவுரை :-

உற்பத்தி வியாபார நிறுவனங்கள் தனது இலக்கினை அடைந்து கொள்வதற்கு தொடர்பாடல் இன்றியமையாததாகும். உபகல்வி ரீதியில் முகாமைத்துவதுறை முதன்மை பெற்றிருக்கும் இக்காலத்தில் இம்முகாமைத்துவ செயல்பாடுகளை வர்த்தகரீதியான அடிப்படையிலும் பிற சந்தர்ப்பங்களிலும் மிக சிறப்பாகவும் எளிமையாகவும் மேற்கொள்வதற்கு இத்தொடர்பாடல் என்றும் துணைச்சேவை இன்றியமையாத தொன்றாகும்

*உசாத்துணை நூல்கள்*
*வர்தகமும் நிதியும் - தேவராஜன் - ஜெயராமன்*
*வணிகமும் நிதியும் அலகு 2 - இலங்காதுரை*
*நடைமுறை வணிகம 1. வணிகமஞ்சரி வெளியீடு*

# பொதிகட்டல்

## PACKAGING

செல்வன். பா. நந்திகுமார்
ஆண்டு 12 C

பொதிகட்டல் செயற்பாடானது அண்மைக் காலமாக மிக முக்கியத்துவம் பெற்ற தொழிற்பாடாகக் காணப்படுகின்றது. உற்பத்திப் பொருள் ஒன்றின் தரம் முக்கியத்துவப்படுத்தப்படுவது போல் கவர்ச்சிகரமான, சிறந்த பொதியிடலும் முக்கியத்துவப்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். பொருட்கள் கெட்டுப்பேகாமல் இருப்பதற்கும், எடுத்துச் செல்ல எளிதாகவும் இருக்கத்தக்க வகையில் ஆரம்பிக்கப்பட்ட பொதிகட்டல் செய்முறையானது தற்காலத்தில் கலையாக வளர்ந்து விட்டது.

பொதிகட்டல் என்றால் என்ன? பொருட்களை பெட்டியில் அல்லது பையில் அல்லது கொள்கலனில் இடல் பொதிகட்டல் எனப்படும். இது பொருளின் ஒரு பகுதியாகும். இது பொருட்களை விற்பனை செய்யும் பொழுது பொருட்களைப் பற்றிய தகவல்களை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் பெட்டி அல்லது பை அல்லது கொள்கலனாகக் காணப்படும். நுகர்வுப்பொருட்கள் கைத்தொழிற் பொருட்கள் ஆகிய இரண்டிற்கும் பொதிகட்டலானது மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. சிறந்த பொதியிடல் முறைமையால் உற்பத்தியாளர்கள், இடைநிலையாளர்கள்,நுகர்வோர் ஆகிய அனைவரும் பயனடைகின்றனர்.

சிறந்த பொதியிடலின் பின்பற்ற வேண்டியவை.

சிறந்த பொதியிடல் முறையைப் பின்பற்றும்போது பின்வரும் அம்சங்கள் பின்பற்றப்பட வேண்டும்.

* பாதுகாப்பளிக்கும் முறையில் பொதிசெய்தல் வேண்டும்.அதாவது சில பொருட்கள் உடையலாம் அல்லது ஆவியாகலாம் அல்லது வாசனை இழக்கலாம் அல்லது சேதமடையலாம் இவ்விதமான சூழல் அபாயங்களில் இருந்து பொருளைப் பொதிகட்டல் மூலம் பாதுகாப்பளிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
* உபயோகத்திற்கு ஏற்ற விதமாகப் பொதிசெய்தல் வேண்டும். அதாவது நுகர்வோர் பொருட்களை உபயோகிக்க பாதுகாப்பாகவும் வசதியாகவும் இருப்பதற்கு ஏற்பாடு செய்தல்.
* பொதிகட்டல் பொருட்கள் பற்றிய மதிப்பை உயர்த்துவதாயும் பொருள் பற்றிய மதிப்பை ஏற்படுத்துவதாயும் காணப்படவேண்டும்.
* பொருட்களைப் பற்றிய தகவல்களை நுகர்வோருக்கு அளிப்பதாக பொதிகட்டல் காணப்பட வேண்டும்.
* பொதிகட்டல் பொருளினை போட்டியாளரின் பொருளிலிருந்து வேறுபடுத்துவதாகக் காணப்படுதல் வேண்டும்.
* பொதிகட்டல் நுகர்வுப்பொருட்களையும் கைத்தொழில்ப்பொருட்களையும் வேறுபடுத்திக் காட்டும் வகையில் அமைதல் வேண்டும்.
* பொதிகட்டலானது பொருட்களிற்கு மேம்படுத்தலை ஏற்படுத்தக் கூடியவாறு இருத்தல் வேண்டும்.

* பொதிகட்டலானது குறைந்த செலவினைக் கொண்டதாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

## பொதிகட்டலின் நன்மைகள்

பொதிகட்டல் முறையால் உற்பத்தியாளர்கள், இடைநிலையாளர்கள், நுகர்வோர் ஆகிய தரப்பினர் நன்மைகளை அடைகின்றனர். குறிப்பாக பின்வரும் நன்மைகளைக் கூறலாம்.

* பொதிகட்டலால் பொருட்களிற்குப் போதிய பாதுகாப்பை ஏற்படுத்தலாம்.

* பொருட்களை இலகுவாகவும், பாதுகாப்பாகவும் கையாளுவதற்கு பொதிகட்டற் செய்முறை உதவுகின்றது.

* பொதியிடுதல் பொருட்களிற்கு கவர்ச்சியை ஏற்படுத்துகிறது.

* பொருளின் விபரம், அதன் உபயோகமுறை போன்ற தகவல்களை நுகர்வோருக்கு தெரியப்படுத்துவதற்குப் பொதிகட்டல் பயன்படுகின்றது.

* விற்பனவாளர் பொருட்களை இலகுவாகக் களஞ்சியப்படுத்த உதவும்.

* பொதிகட்டலால் நுகர்வோர் பொருட்களை இலகுவாக இனம் காணலாம்.

* பொருட்கள் கலப்படம் செய்யப்படுதலைப் பொதிகட்டல் தடுக்கின்றது.

## பொதிகட்டற் கடன்கள்.

பொதிகட்டல் செய்முறைக்கு அதிக நிதி தேவைப்படும்.இதற்கு வர்த்தக வங்கிகளின் பொதியிடுதல் கடன் திட்டம் உதவுகின்றது. பொதிகட்டும் மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கும், பொதிகட்டும் செய்முறைக்கும், தேவைப்படும் நிதியை வழங்கும் வர்த்தக வங்கியின் கடன்திட்டம் பொதியிடுதற் கடன் ஆகும்.

## தேசிய பொதிகட்டல் நிலையம்

இலங்கையின் பொதிகட்டலுக்குப் பொறுப்பாக இந்நிலையம் காணப்படுகின்றது. இவ் அமைப்பு ஏற்றுமதி அபிவிருத்தி திணைக்களத்தாலும் இலங்கைப் பொதிகட்டல் நிலையத்தாலும் கூட்டுமுயற்சியாக உருவாக்கப்பட்ட உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட ஒரு பொதுக் கம்பனியாகும். இலங்கையின் பொதிகட்டல் தொடர்பாகக் காணப்படும் ஓர் உயர் அமைப்பாக இது உள்ளது. இது பொதிகட்டல் தொழிலை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான முயற்சியில் ஈடுபடுகின்றது.

* இதன் தொழிற்பாடுகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

* பொதியிடுதல் தொடர்பான நவீன முறைகளை அறிமுகம் செய்தல்.

* பொதிகட்டல் தொடர்பாக நேரடியாகவும், பிரசுரங்கள் மூலமும் தகவல்களை அளித்தல்.

* பொதியிடுதல் தொடர்பாக தொழில்நுட்பத் தகவல்களைப்பெற நூலக சேவைகளை நடாத்தல்.

* பொதிகளுக்கான தொழில்நுட்பத் தகவல்களை சேகரித்து பராமரித்தல்.

* பொதிகட்டல் தொடர்பான பயிற்சி வசதிகளை அளித்தல்.

* பொதிகட்டல் தொடர்பான உற்பத்தியாளர்களின் பிரச்சினையை அரசுக்குத் தெரியப்படுத்தி வசதிகளைச் செய்து கொடுத்தல்.

* மாதிரிப் பொதிகளை அமைத்து காட்சிக்கு வைத்து உதவுதல்.

* பொதியிடல் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கையில் ஈடுபடல்.

* நீண்டகாலம் பொருட்கள் பழுதடையாமல் உபயோகிக்ககூடிய பொதியிடல் முறையை ஏற்பாடு செய்தல்.

ஒரு உற்பத்தி செயற்பாட்டில் பொதியிடல் முக்கிய சேவையாக தற்காலத்தில் வளர்ந்துள்ளது. இலங்கை நிறுவனங்களும் நவீன பொதியமைப்பு முறைகளில் அதிக நாட்டம் செலுத்தி வருகின்றன. இதனால் எந்த ஒரு உற்பத்தி நிறுவனங்களும் பொதிகட்டும் செய்முறையில் அதிக முக்கியத்துவத்தை செலுத்த வேண்டியது அவசியமாகும்.

பவள விழாக் காணும் மத்தியின்
வர்த்தகக் கல்வி சிறக்க
நல் வாழ்த்துக்கள்.

✳

# மெடி எயிட்ஸ்

# மருந்தகம்

644 பருத்தித்துறை வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்

✳
✳

## மெடி எயிட்ஸ் கிளினிக்

88 பருத்தித்துறை வீதி
கல்வியங்காடு
யாழ்ப்பாணம

❄
❄

## மெடி எயிட்ஸ் டிஸ்பென்சரி

182 செம்மணி வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்

EVERY SUCCESS AND PROSPERITY
BE YOURS

# V.S.B
# GROUP

இ.பாலச்சந்திரனும் பங்காளர்களும்
266A ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

WITH BEST COMPLIMENTS FROM

# PROMOTERS ENGINEERING COMPANY LTD.

**844 POINT PEDRO ROAD**
**NALLUR**
**JAFFNA.**

WITH BEST COMPLIMENTS FROM

# PIF

# பி. ஐ. பர்னான்டோ

மூக்குக் கண்ணாடியகம்
பல்கட்டும் நிலையம

524 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

மத்தியின் வணிகம் சிறப்புடன்
விளங்க வாழ்த்துகின்றோம்.

# SAN TRANSPORT

M. அரியரட்ணம்
399 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

With Best Compliments
from

# T. Kumarasamy Textiles

**42-44, Grand Bazaar,**
**Jaffna.**

---

With Best Compliments from

# NEW VEMAKI

**27/3, Power House Road**
**Jaffna.**

**Authorised Dealers For:**
**CIC Paints, Koba Batteries, Lanka wall tiles, Ceremic Products.**

**Head Office:**
**UA 18/1 Peoples Park**
**Colombo -11**

**Branch:**
**Venke Impex**
**Vavuniya**

*With Best Compliments*
*from*

*

*

# S.Sooriyakumar

*An Old Centralite*

## கணக்கியல் விடயங்கள்

1. திரு. D. Sam
11. செல்வன். யோ. சிவதர்சன்
111. செல்வன். ச. லவன்

# வாடகைக் கொள்வனவு
# HIRE PURCHASE

திரு. D. Sam
(கணக்கியல் ஆசிரியரும் பழைய மாணவரும்)

1. வாடகைக் கொள்வனவின் குணாம்சங்கள்.
வாடகைக் கொள்வனவானது சொத்துக்களை வாங்குவதற்கான ஓர் முறையாகும். கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலான கொடுப்பனவு அல்லது அதன் பின் குறுங்காலத்திலான கொடுப்பனவு ஆகியவற்றில் இருந்து ஓர் வாடகைக் கொள்வனவு உடன் படிக்கை வேறுபடுகின்றது.

1-1 முக்கிய வேறுபாடுகளானவை

(1) சொத்தானது வழங்குனரிடம் இருந்து பெறப்படும் போது அது வாங்குபவருக்குச் சொந்தமானதாக மாற்றப்படுவதில்லை. மாறாக உடமையானது வாடகைக் கொள்வனவு வசதியினை வழங்குகின்றவரையே சேரும்.

(2) சொத்தின் கொள்வனவாளர் அதற்கான கொடுப்பனவினை தவணைக் கட்டணங்களாக ஓர் குறிப்பிட்ட காலத்திற்குச் செலுத்துதல் வேண்டும். இது 2 அல்லது 3 ஆண்டுகளாக அமையலாம்.

(3) வாடகைக் கொள்வனவு உடன் காசு விலையிலும் உயர்வானதாகும். மேலதிகமாக அறவிடப்படும் பணமானது வட்டிக்கான தொகையாகும்.

(4) குறித்த சொத்தானது பின்வரும் இரு நிபந்தனைகளால் பூர்த்தி செய்யப்படுமே தவிர சட்டரீதியாக கொள்வனவாளருக்கு உடமையாவதில்லை.
1. இறுதித் தவணைக் கட்டணம் செலுத்தப்படல்.
2. கொள்வனவாளர் சட்ட ரீதியான சொத்துக் கொள்வனவு முறைக்கு இணங்குதல்.

கொள்வனவாளர் விரும்பின் தவணைக் கட்டணக் கொடுப்பனவினை நிறுத்தலாம்.இதன் பின் அவர்சொத்தினை விற்பனையாளருக்கு மீளவும் வழங்க வேண்டியிருக்கும். அத்துடன் அவர் முன்பு செலுத்திய தவணைக் கட்டணங்களையும் பெறமுடியாதிருக்கும்.
கொள்வனவாளரால் தவணைக் கட்டணத்தினை தொடர்ந்து செலுத்த முடியாத சந்தர்ப்பங்களில் வழமையாக சொத்தினை விற்பனையாளர் மீளப்பெறுவதுடன் ஏற்கனவே செலுத்தப்பட்ட தவணைக் கட்டணத்தையும் தானே வைத்துக் கொள்வார்.

1-2. செலுத்த வேண்டிய வட்டியும், வாடகை கொள்வனவும்
வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் செலுத்தப்படும் ஒவ்வொரு தவணைக் கட்டணமும்பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

1. தவணைக் கட்டணத்தின் ஓர் பகுதி பெறப்பட்ட சொத்தின் காசு விலையின் ஓர் பகுதியாகும்.
2. தவணைக் கட்டணத்தின் மறு பகுதி செலுத்தப்படவேண்டிய கடன் காலத்திற்கான வட்டியாகும். மொத்தத் தவணைக் கட்டணமானது (1)+(2) என்பதுடன் இவை சமகட்டணங்களாக அல்லது சமனற்ற கட்டணங்களாக இருக்கலாம்.

மாதிரி 1 : சமமற்ற தவனைக் கட்டணங்கள்

1. கிஸ் என்பவரிடம் இருந்து ஓர் இயந்திரம் ஆண்டு 1 ஆரம்பத்தில் கொள்வனவு செய்யப்பட்டது. காசு விலை ரூபா 2000
2. வாடகைக் கொள்வனவு விலை ரூபா 2300
3. ஒவ்வொரு வருட இறுதியிலும் வருடாந்த தவணைக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். 2 தவணைக் கட்டணங்கள் ஒவ்வொன்றும் ரூபா 1000 இனையும் வருடத்திற்கான வட்டியினையும் உள்ளடக்கியது.
4. வட்டிவீதம் ஆண்டிற்கு 10

| | | ரூபா |
|---|---|---|
| ஆண்டு : 1 | காசு விலை. (A) | 2000 |
| | கூட்டு (A இன்)ரூ2000 இன் 10 வட்டி | 200 |
| | | 2200 |
| | கழி செலுத்திய தவணைக் கட்டணம் | 1200 |
| | 1ம் ஆண்டு முடிவில் செலுத்துமதி (B) | 1000 |
| ஆண்டு : | 2 கூட்டு (B இன்) ரூ1000 இன் 10 வட்டி (B) | 100 |
| | கழி செலுத்திய தவணைக் கட்டணம் | 1100 |
| | 2ம் ஆண்டு முடிவில் செலுத்துமதி. | 1100 |

மாதிரி 2 : சமமான தவணைக் கட்டணங்கள்.

ஒவ்வொரு தவணைக் கட்டணமும் ரூ1152 ஐ தவிர ஏனைய தரவுகள் யாவும் மாதிரி 1 ஐப் போன்றதே (வட்டித் தொகைகள் கிட்டிய ரூபாய்க்கு மாற்றப்பட்டுள்ளன.)

ரூபா

| | |
|---|---|
| ஆண்டு 1 : காசு விலை (A) | 2000 |
| கூட்டு [(A) இன்)] ரூ2000 இன் 10 வட்டி | 200 |
| | 2200 |
| கழி. செலுத்திய தவணைக் கட்டணம் | 1152 |
| ஆண்டு 1 முடிவில் செலுத்துமதி (B) | 1048 |
| கூட்டு [(B) இன்)] ரூ1048 இன் 10 வட்டி | 104 |
| | 1152 |
| கழி செலுத்திய தவணைக் கட்டணம் | 1152 |
| 2 ஆண்டு முடிவில் செலுத்து மதி | – |

ஆண்டு ஒன்றிற்கான வட்டியானது சமமான, சமமற்ற, தவணைக் கட்டணத்திலும் ஒன்றாகவே காணப்படுகின்றது. காரணம் இரு விதங்களிலும் 1ம் வருடத்திற்கான காசு விலையானது ஒன்றாகவே இருத்தல் ஆகும்.

1-3. வாடகைக் கொள்வனவிற்கான கணக்கு வைத்தல்.

கணக்கியலானது வாடகைக் கொள்வனவினால் வாங்கப்பட்ட சொத்துக்களை உடனடியாக கொள்வனவாளனின் சொத்தாகவே கருதுகின்றது. இதற்கான காரணம் பொதுவாக நிறுவனங்கள்

வாடகைக் கொள்வனவில் சொத்துக்களை வாங்கும் போது எல்லாத் தவணைக் கட்டணங்களையும் செலுத்துதல் என்ற நோக்கத்தினைக் கொண்டிருத்தல் என்பது மட்டுமன்றி சொத்துக்கள் இறுதியில் நிறுவனங்களைச் சென்று சேர்தல் ஆகும்.

நிறுவனங்கள் இறுதித் தவணைக் கட்டணத்தினை செலுத்தும் போது தான் உடைமையாளராகின்ற போதும் கணக்கீட்டு நோக்கில் சட்ட உரித்தானது கொள்வனவின் போதே ஏற்படுகின்றது எனக் கொள்ளப்படுகின்றது. மொத்தக் கொள்வனவு விலையானது கணக்குகளுக்காக பின்வரும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது.

1. காசு விலை - இத்தொகை நிலையான சொத்துக் கணக்கில் வரவில் இடப்படுகிறது.
2. வட்டி - இது கடனிற்காக செலுத்தப்படவேண்டிய ஓர் செலவாகும். இது ஓர் செலவுக் கணக்கில் வரவில் இடப்படுகின்றது. அதாவது வாடகைக் கொள்வனவு வட்டிக் கணக்கு.
   வட்டியானது வாடகைக் கொள்வனவிற்கான முழுக்காலத்திற்கும் எழுவதானால் ஒவ்வொரு காலமும் அதற்குரிய வட்டியினையே சாட்டுதல் செய்ய வேண்டும். இது மாதிரி 3 மூலம் காட்டப்படுகின்றது.

மாதிரி 3:

கணக்குகளில் எவ்வாறு காட்டப்படல்.

| |
|---|
| வட்டி ஆண்டு1 |
| வட்டி ஆண்டு2 |
| காசுவிலை |

வட்டி ஆண்டு1 → ஆண்டு 1 இல் ஓர் செலவு

வட்டி ஆண்டு2 → ஆண்டு 2ல் ஓர் செலவு

காசுவிலை → நிலையான சொத்துக் கணக்கில் பதியப்படும் ஆண்டு 1 கொள்வனவுத் திகதியில் பதியப்படும்

மொத்த வாடகைக் கொள்வனவு விலை

1-4. <u>கொள்வனவாளர் ஏட்டில் விளக்கங்கள்.</u>

தேவைப்படும் இரட்டைப் பதிவானது :

A. காசு விலை: வரவு நிலையான சொத்து
   செலவு வழங்குநர்.

B. வாடகைக் கொள்வனவு வட்டி :வரவு-வாடகைக் கொள்வனவு வட்டி
   (ஒவ்வொரு காலத்திற்குமான வட்டி)
   செலவு - வழங்குனர்.

C. வாடகைக் கொள்வனவு தவணைக் கட்டணம் : வரவு - வழங்குனர்
   செலவு - காசு

D. வட்டியினை இலாபநட்டக் கணக்கிற்கு சாட்டுதல் செய்தல் :
   வரவு - இலாபநட்டக் கணக்கு
   செலவு - வாடகைக் கொள்வனவு வட்டி

இப்போது நாம் மாதிரி 1 தரப்பட்ட தரவுகளை எவ்வாறு கணக்குகளில் பதிதல் என நோக்குவோம். (மேலே குறிப்பிட்டவாறே ஆங்கில எழுத்துக்கள் காட்டப்பட்டுள்ளன.)

### இயந்திரக் க/கு

| | | | |
|---|---|---|---|
| ஆண்டு 1 | ரூபா | | |
| ஜன 1கிஸ் (A) | 2000 | | |

### A கிஸ் க/கு

| | | | |
|---|---|---|---|
| ஆண்டு 1 | ரூபா | ஆண்டு 1 | ரூபா |
| டிச 31வங்கி (C) | 1200 | ஜன1இயந்திரம் (A) | 2000 |
| டிச 31மீதி கொ செ | 1000 | டிச 31 வாடகைக்கொள்வனவு வட்டி (B) | 200 |
| | 2200 | | 2200 |
| ஆண்டு 2 | | ஆண்டு 2 | |
| டிச 31 வங்கி (C) | 1100 | ஜன 1 மீதி/ கொ/ வ | 1000 |
| | | டிச 31 வாடகைக் கொ/வு வட்டி(B) | 100 |
| | 1100 | | 1100 |

### வாடகைக் கொள்வனவு வட்டிக் க/கு

| | | | |
|---|---|---|---|
| ஆண்டு 1 | ரூபா | ஆண்டு 1 | ரூபா |
| டிச 31 A கிஸ் (B) | 200 | டிச 31 இ/ந (D) | 200 |
| ஆண்டு 2 | | ஆண்டு 2 | |
| டிச 31 A கிஸ் (B) | 100 | டிச 31 இ/ந (D) | 100 |

### காசுக் க/கு

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டு 1 | ரூபா |
| | | டிச 31 A கிஸ் (C) | 1200 |
| | | ஆண்டு 2 | |
| | | டிச 31 A கிஸ் (C) | 1100 |

### இலாப நட்டக் க/கு (பொழிப்பு)

| | | | |
|---|---|---|---|
| ஆண்டு 1 | ரூபா | | |
| வாடகைக் கொள்வனவு வட்டி | 200 | | |
| ஆண்டு 2 | | | |
| வாடகைக் கொள்வனவு வட்டி | 100 | | |

1-5 <u>வாடகைக் கொள்வனவில் வாங்கப்பட்ட சொத்துக்களின் பெறுமானத் தேய்வு</u>. பெறுமானத் தேய்வானது காசு விலையின் அடிப்படையிலானதாகும். வட்டி பெறுமானத்தேய்வு கணிப்பீடுகளை உள்ளடக்கிப் பதியப்படுவதில்லை.

1-6 <u>வாடகைக் கொள்வனவில் வாங்கப்பட்ட சொத்துக்களும் ஐந்தொகையும்</u>. ஓர் தனிவியாபாரி பங்குடமை ஆகியவற்றில் வாடகைக் கொள்வனவில் வாங்கப்பட் நிலையான சொத்துக்கள் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| | நிலையான சொத்துக்கள் | | |
| | இயந்திரம் கொள் விலையில் | ரூபா | ரூபா |
| | | | 20000 |
| கழி | வாடகைக் கொள்வனவில் செலுத்துமதி | 6000 | |

| | | |
|---|---|---|
| …………திகதி வரையான பெறுமானத் தேய்வு | 10000 | (16000) |
| | | 4000 |

கீழே தரப்படும் மாதிரி 4ல் இயந்திரமானது நேர் கோட்டு முறையினைப் பயன்படுத்தி 20% பெறுமானத் தேய்விடப்பட்டால் ஐந்தொகைப் பதிவுகள்.

ஐந்தொகை (ஆண்டு 1 முடிவில்)

| நிலையான சொத்துக்கள் | ரூபா | ரூபா |
|---|---|---|
| இயந்திரம் கொள்விலையில் | | 2000 |
| கழி :வாடகைக் கொள்வனவின் போது சென்மதி (i) | 1000 | |
| …………திகதி வரையான பெ.தேய்வு | 400 | (1400) |
| | | 600 |

குறிப்பு :- (1) என்பது கிஸ் க / கின் மீதியாகும்.

ஐந்தொகை (ஆண்டு 2 முடிவில்)

| நிலையான சொத்துக்கள் | ரூபா | ரூபா |
|---|---|---|
| இயந்திரம் கொள்விலையில் | 2000 | |
| கழி ----திகதி வரையான பெறுமானத் தேய்வு | (800) | 1200 |

குறிப்பு:- ஆண்டு 2 முடிவில் வாடகைக் கொள்வனவு தொடர்பாக திரு.கிஸ் இற்கு செலுத்துமதியில்லை. ஆனால் கம்பெனி ஐந்தொகையில் இது அனுமதிக்கப்படுவதில்லை. ஒரு மாற்றம் முதன் முதலாக 1981 கம்பனிச் சட்டம் மூலம் ஏற்படுத்தப்பட்டது. இதன்படி வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைச் சென்மதி ஐந்தொகையில் மொத்தப் பெறுமதியில் இருந்து கழித்துக் காட்டப்படல் கூடாது. இவ் விதியானது பின்னர் வந்த கம்பனிச் சட்டங்களிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

1-7 முழுதாக விடையளிக்கப்பட்ட ஓர் உதாரணம்.

மாதிரி 4 வாடகைக் கொள்வனவுகளை முழுவதுமாக விபரிக்கின்றது. அது 3 வருட வாடகைக் கொள்வனவினையும் ஐந்தொகை விபரங்களையும் தருகின்றது.

மாதிரி 4 :

1. ஓர் இயந்திரம் க.தொமஸ் என்பவரால் ரூ 3618 வாடகைக் கொள்வனவு விலையில் வழங்குனர் Ltd இடமிருந்து 1 ஜனவரி 19 - 3ல் கொள்வனவு செய்யப்பட்டது.
2. 1206 படி 3 தவணைக் கட்டணங்களில் முறையே 31 டிசம்பர் 19-3, 19-4, 19-5 ல் செலுத்தப்பட்டன.
3. காசு விலை ரூ 3000
4. வட்டி வீதம் 10%

எழுத்துக்கள் (A) முதல் (F) வரை ஆனவை பின்வரும் கணக்குப் பதிவுகளின் விபரத்தினைக் குறிக்கின்றன.

இயந்திரக் க/கு

| 19-3 | ரூபா | | |
|---|---|---|---|
| ஜன 1வழங்குனர் (A) | 3000 | | |

வழங்குனர் க/கு

| 19-3 | ரூபா | 19-3 | ரூபா |
|---|---|---|---|
| டிச 31வங்கி (B) | 1206 | ஜன1 இயந்திரம் (D) | 3000 |

| | | | | |
|---|---|---|---|---|
| டிச 31மீதி/ கொ / செ (D) | 2094 | டிச 31 வாடகைக் கொவு வட்டி | 300 |
| | 3300 | | 3300 |
| 19-4 | | 19-4 | |
| டிச 31வங்கி (B) | 1206 | ஜன1 மீதி/கொ/வ (D) | 2094 |
| டிச 31 மீதி கொசெ (D) | 1097 | டிச 31 வாடகைக் கொ/வு வட்டி | 209 |
| | 3303 | | 3303 |
| 19-5 | | 19-5 | |
| டிச 31 வங்கி (B) | 1206 | ஜன1 மீதி / கொ/ வு (D) | 1097 |
| | | டிச 31 வாடகைக் | |
| | | கொ/வு வட்டி (C) | 109 |
| | 1206 | | 1206 |

**வாடகைக் கொள்வனவு வட்டிக் க/கு**

| | | | |
|---|---|---|---|
| 19-3 | ரூபா | 19-3 | ரூபா |
| டிச 31வழங்குனர் Ltd (C) | 300 | டிச 31 இ/ந (E) | 300 |
| 19-4 | | 19-4 | |
| டிச 31வழங்குனர் Ltd (C) | 209 | டிச 31 இ/ந (E) | 209 |
| 19-5 | | 19-5 | |
| டிச 31 வழங்குனர் Ltd (C) | 109 | டிச 31 இ/ந (E) | 109 |

**பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடு - இயந்திரம்**

| | | | |
|---|---|---|---|
| | | 19-3 | ரூபா |
| | | டிச 31 இ/ந (F) | 600 |
| | | 19-4 | |
| | | டிச 31 இ/ந (F) | 600 |
| | | 19-5 | |
| | | டிச 31 இ/ந (F) | 600 |

**31 டிசம்பரில் ஐந்தொகைகள்.**

| | ரூபா | ரூபா | ரூபா |
|---|---|---|---|
| 19-3இ ந்திரம் (கொள்விலையில்) | | 3000 | |
| கழி பெறுமானத் தேய்வு | 600 | | |
| வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் சென்மதி | 2054 | 2694 | 306 |
| 19-4 இயந்திரம் (கொள்விலையில்) | | 3000 | |
| கழி பெறுமானத் தேய்வு | 1200 | | |
| வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் சென்மதி | 1097 | 2297 | 703 |
| 19-5 இயந்திரம் (கொள்விலையில்) | | 3000 | |
| கழி பெறுமானத் தேய்வு | | 1800 | 1200 |

(1) ஓர் சொத்து பெறப்படும் போது காசு விலை சொத்துக்கணக்கில் வரவு வைக்கப்பட்டும் வழங்குனர் கணக்கு செலவும் வைக்கப்படும்.

(2) செலுத்தப்படும் தவணைக் கட்டணங்களானவை வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு வழங்குனர் க/கில் வரவு வைக்கப்படும்.

(3) வட்டியானது வழங்குனர் கணக்கில் ஒவ்வொரு காலமும் செலவு வைக்கப்பட்டு ஓர் செலவுக் கணக்கில் வரவு வைக்கப்படும் இது பின்பு இருப்புக்கணக்கிற்கு சாட்டுதல் செய்யப்படும்.

(4) ஒவ்வொரு வருடமும் மீதி கீழ்க்கொண்டு வரப்படுகின்ற கணக்கு காசு விலையில் இன்னும் செலுத்தப்பட வேண்டிய தொகை ஆகும்.

(5) பெறுமானத் தேய்வு ஏற்பாடானது முழுக்காசு விலையில் கணிப்பிடப்படுகிறது காரணம் ஓர் சொத்தின் பெறுமானத் தேய்வானது அதற்கான கொடுப்பனவு செய்யப்பட்டதா இல்லையா என்பதனைப் பொறுத்து மாறுபடுவதில்லை.

ஐந்தொகையானது (A) மீதியினையும் காசு விலையில் இருந்து கணிக்கப்பட்ட (F) மீதியினையும் (பெறுமானத் தேய்வாக எடுக்கப்பட்ட) காசு விலையின் ஓர் பகுதியிலிருந்து (D) கழிக்கப்பட்ட பின் உள்ள மீதியாகிய ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியிலும் காசு விலையில் சென்மதியாக உள்ள தொகையினையும் வெளிப்படுத்தும்.

1-8 <u>விற்பனையாளர் ஏடு இலாபப் பங்கீடு.</u>

வாடகைக் கொள்வனவு முறையில் பொருட்களை விற்கின்ற ஓர் நிறுவனத்தின் முடிவுக் கணக்குகளை பல்வேறு முறைகளில் தயாரிக்கலாம். இவற்றில் வியாபாரத்திற்கு பொருத்தமான முறையே கையாளப்படல் வேண்டும். விற்பனையாளரின் மொத்த இலாபத்தினை பின்வருமாறு பிரிக்கலாம்.

| | ரூபா |
|---|---|
| விற்கப்பட்ட பொருட்கள் மீதான இலாபம் : | |
| காசுவிலை | xxx |
| வட்டி அறவீட்டினால் உழைத்த இலாபம் | xxx |
| | xxx |

மாதிரி 4 இல் வழங்குனர் லிமிட் ஓர் பொறியினை திரு.தொமசிற்கு விற்பனை செய்தது பொறியானது ரூ 2100 கொள்விலையானது எனக் கொள்க. இறுதித் தவணைக் கட்டணம் செலுத்தப்பட்டபோது பெறப்பட்ட மொத்த இலாபமானது:

| ரூபா | | ரூபா | |
|---|---|---|---|
| பொறி விற்பனை மீதான இலாபம் :காசுவிலை | | 3000 | |
| கொள்விலை | | (2100) | 900 |
| வட்டி அறவீட்டினால் உழைத்த இலாபம்: | 19-3 | 300 | |
| | 19-4 | 209 | |
| | 19-5 | 109 | 618 |
| | | | 1518 |

மூன்று வருடங்களுக்கான இலாபம் :

விற்பனை மீதான இலாபப் பங்கீடு.

இத்தகைய விடயங்களைக் கையாளுவதற்கு இரு பிரதான முறைகள் காணப்படுகின்றன. இங்கு பிரச்சினைக்குரிய விடயமானது பொறியின் விற்பனை இலாபமான ரூ 900 ஐ எவ்வாறு பங்கீடு செய்தல் என்பதாகும்.

(1) முதலாவது முறையின் கீழ் பொறியானது எவ் ஆண்டில் முதன் முதலாக விற்பனை செய்யப்பட்டதோ அவ் ஆண்டிலேயே இலாபத்தினை சாட்டுதல் செய்தல் ஆகும். இம் முறையின் கீழ் ரூபா 900 இலாபமானது 19-3 இற் குரியதாகவே காட்டப்படல் வேண்டும்.

(2) இலாபமானது மூன்று ஆண்டுகளுக்கிடையே பங்கிடப்படல் வேண்டும்.

விகிதமானது பின்வருமாறு கணிப்பிடப்படும்:

$$\frac{\text{குறித்த காலத்துள் பெறப்பட்ட காசு}}{\text{பெறவேண்டிய மொத்தக்காசு}} \quad X \text{ இலாபம்}$$

இதற்கமைய மேற்கூறப்பட்ட இலாபமானது பின்வருமாறு காட்டப்படும்.

19-3 $\frac{\text{ரூ } 1206}{\text{ரூ } 1206 \times 3}$ X ரூ 900 = 1/3 X ரூ900 = ரூ300

19-4 $\frac{\text{ரூ } 1206}{\text{ரூ } 1206 \times 3}$ X ரூ 900 = 1/3 X ரூ900 = ரூ300

19-5 $\frac{\text{ரூ } 1206}{\text{ரூ } 1206 \times 3}$ X ரூ 900 = 1/3 X ரூ900 = ரூ300

3 ஆண்டுகளுக்கான விற்பனை மீதான இலாபம் = ரூ900

இச் சந்தர்ப்பத்தில் 2ம் தவணைக் கட்டணங்களாக இருப்பின் இலாபமும் சமனாக சாட்டுதல் செய்யப்படும். சமமற்ற தவணைக் கட்டணங்களாயின் அது சமமற்ற இலாபத்திற்கும் வழி வகுக்கும்.

இலாபநட்டக் கணக்கிற்கான வட்டியின் ஒதுக்கீடு.

ஒவ்வொரு வருடத்திற்குமான வட்டி நிலுவையானது இலாபக் கணிப்பீட்டிற்குள் சேர்க்கப்படல் வேண்டும் செலுத்தப்பட வேண்டிய தொகை குறையும் போது வட்டியும் குறைவடைகிறது.

| | ரூபா |
|---|---|
| ஆண்டு 19-3 | 300 |
| ஆண்டு 19-4 | 209 |
| ஆண்டு 19-5 | 109 |
| | 618 |

1-9 விற்பனையாளர் ஏடு : தேவைப்படும் கணக்குகள்.

இப்போது நாம் மாதிரி 5 இல் மாதிரி 4 இல் எடுக்கப்பட்ட தகவல்களுக்கேற்ப விற்பனையாளனினது ஏடு எவ்வாறு காட்சியளிக்கும் என நோக்குவோம். விடயங்கள் A முதல் C வரையானவை ஏற்கனவே மாதிரி 4 இல் காட்டப்பட்டுள்ளன.

மாதிரி 5 :

(1) பொறியானது 1 ஜனவரி 19-3 இல் திரு.தொமசிற்கு வாடகைக் கொள்வனவு அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டது.

காசுவிலை ரூ3000 + வாடகைக் கொள்வனவு வட்டி

(2) வாடகைக் கொள்வனவு வட்டி 10% ஆகும்.

(3) ரூ 1206 ஆன 3 தவணைக் கட்டணங்கள் முறையே 31 டிசம்பர் 19-3 19-4 19-5 இல் பெறத்தக்கனவாகும். இவை சரியான திகதிகளில் திரு.தொமசினால் செலுத்தப்பட்டன.

(4) இது தான் மூன்று வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒரெயொரு வாடகைக் கொள்வனவு ஆகும்.

(5) காசு விலையின் மீதான இலாபமானது 19-3 இல் சாட்டுதல் செய்யப்படல் வேண்டும். இவ் வருடத்தில் தான் வாடகைக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது.

(6) இயந்திரத்திற்கான கொள்விலை ரூ 2100

### வாடகைக் கொள்வனவு விற்பனை

| | | | |
|---|---|---|---|
| 19-3 | ரூபா | 19-3 | ரூபா |
| டிச 31வியாபாரம் | 3000 | ஜன1 க.தொமஸ் | 3000 |

### வாடகைக் கொள்வனவு வட்டி

| | | | |
|---|---|---|---|
| 19-3 | ரூபா | 19-3 | ரூபா |
| டிச 31வியாபாரம் | 300 | டிச 31 க.தொமஸ் (B) | 300 |
| 19-4 | | 19-4 | |
| டிச 3வியாபாரம் | 209 | டிச 31 க.தொமஸ் (B) | 209 |
| 19-5 | | 19-5 | |
| டிச 31 வியாபாரம் | 109 | டிச 31 க.தொமஸ் (B) | 109 |

### காசுப்புத்தகம்

| | | | |
|---|---|---|---|
| 19-3 | ரூபா | 19-3 | ரூபா |
| டிச 31 க.தொமஸ் (C) | 1206 | ஜன 1 வாடகைக் கொ/வு பொருள் (F) | 2100 |
| 19-4 | | | |
| டிச 31 க.தொமஸ் (C) | 1206 | | |
| 19-5 | | | |
| டிச 31 க.தொமஸ் (C) | 1206 | | |

### க.தொமஸ்

| | | | |
|---|---|---|---|
| 19-3 | ரூபா | 19-3 | ரூபா |
| ஜன 1விற்பனைகள் (A) | 3000 | டிச 31 வங்கி (B) | 1206 |
| டிச 31 வாடகைக் கொ/வு/ச | | | |
| வட்டி (B) | | மீ/கீ/கொ/செ | 2094 |
| விற்பனை | 300 | | |
| | 3300 | | 3300 |
| 19-4 | ரூபா | 19-4 | ரூபா |
| ஜன 1 மீ/ கீ /கொ/ வ | 2094 | டிச 31 வங்கி | 1206 |
| டிச 31 வாடகைக் கொள் | | | |
| வனவு வட்டி (B) | 209 | டிச 31 மீ/ கீ /கொ/ செ | 1097 |
| 2303 | 2303 | | 2303 |
| 19-5 | ரூபா | 19-5 | ரூபா |
| ஜன1 மீ/ கீ /கொ / வ | 1097 | டிச 31 வங்கி | 1206 |
| டிச 31 வாடகைக் கொ/வு வட்டி(B) | 109 | | |
| | 1206 | | 1206 |

### வாடகைக் கொள்வனவு பொருளின் கொள்விலை

| | | | |
|---|---|---|---|
| 19-3 | ரூபா | 19-3 | ரூபா |
| ஜன1வங்கி (F) | 2100 | டிச 31 வியாபாரம் | 2100 |

### வியாபாரக் கணக்கு 31 டிசம்பர் 19-3 இல் முடிவுற்ற ஆண்டு.

| | | | |
|---|---|---|---|
| | ரூபா | | ரூபா |
| விற்ற சரக்கின் கொள்விலை | 2100 | வாடகைக் கொள்வனவு விற்பனை | 3000 |
| | | வாடகைக் கொ வு வட்டி | 300 |

31 டிசம்பர் 19-4 இல் முடிவுற்ற ஆண்டு

| ரூபா | | ரூபா |
|---|---|---|
| | வாடகைக் கொ/வு வட்டி | 209 |

31 டிசம்பர் 19-5 இல் முடிவுற்ற ஆண்டு

| ரூபா | | ரூபா |
|---|---|---|
| | வாடகைக் கொ/வு வட்டி | 109 |

மாதிரி 5 இல் காட்டப்பட்ட எல்லா இலாபமும் 19-3 இல் உழைக்கப்பட்டதாகும். எப்போது தவனைக் கட்டணம் பெறப்பட்டதோ அப்போதே இலாபமும் ஈட்டப்பட்டது எனக் கொள்ளப்படின் சீராக்கப்பட வேண்டிய ஒரேயொரு கணக்கு வியாபாரக் கணக்கு ஆகும். மற்றைய எல்லாக் கணக்குகளும் மாதிரி 5 இனைப் போன்றே காணப்படும். வேண்டப்படும் சீராக்கங்கள் மாதிரி 6 இல் காட்டப்பட்டுள்ளன.

மாதிரி 6 :

வியாபாரக் கணக்குகள்.

31 12 19 - 3 இல் முடிவுற்ற ஆண்டு

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| விற்பனைக்கிரயம் | 2100 | வாடகைக் கொ/வு விற்பனைகள் | 3000 |
| வாடகைக் கொ/வு மூலம் இன்னும் உழைக்கப்படாத இலாபம் (தொங்கல் இலாபம்) | 600 | வாடகை கொ/வு வட்டி | 300 |

31 12 19 - 5 இல் முடிவுற்ற ஆண்டு

| | | | |
|---|---|---|---|
| | | வாடகைக் கொ/வு தொங்கல் இலாபம் 19-5 இற்கானது(H) | 300 |
| | | வாடகைக் கொ/வு வட்டி | 109 |

வாடகைக் கொள்வனவு இலாபத்தொங்கல்

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| 19-4 | | 19-3 | |
| டிச 31 வியாபாரம(H) | 300 | டிச 31 வியாபாரம்(G) | 600 |
| டிச 31 மீ /கொ /செ | 300 | | |
| 19-5 | 600 | 19-5 | 600 |
| டிச 31 வியாபாரம் (H) | 300 | ஜன 1 மீதி /கொ / வ | 300 |

(G)தேவையான இரட்டைப் பதிவுகள்.

விற்பனை செய்த ஆண்டு:

வரவு :- வியாபாரக் க/கு எதிர்வரும் ஆண்டுகளுக்கு கொண்டு சென்ற இலாபங்களுடன்

செலவு :- வாடகைக் கொள்வனவு இலாபத் தொங்கல் க/கு.

(H) எதிர்வரும் ஆண்டுகள்

வரவு :- வாடகைக் கொள்வனவு இலாபத் தொங்கல் (ஒவ்வொரு வருடமும் உழைக்கப்பட்டது)

செலவு :- வியாபாரக் க/கு

வாடகைக் கொள்வனவு வட்டிக்கான பதிவுகள் மாற்றமடையவில்லை.

1-10 <u>பொருட்களின் மீள் பெறுகை.</u>

வாடிக்கையாளர்கள் தவணைக் கட்டணங்களை அவை செலுத்தப்படாது நிறுத்தப்பட வேண்டிய காலத்திற்கு முன்னர் செலுத்தாமல் நிறுத்தும் போது பொருட்கள் அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்படலாம். இது பொருட்களில் மீள்பெறுகை எனப்படுகின்றது. வாடிக்கையாளரால் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகையானது விற்பனையாளரால் எடுத்துக் கொள்ளப்படும்.

பின் எடுக்கப்பட்ட பொருட்களுக்கான பதிவுகள் விற்பனையாளரின் புத்தகங்களில் மேற்கொள்ளப்படல் வேண்டும். காரணம் அவை இப்போது இருப்பின் ஓர் புதிய பகுதியாகக் காணப்படுதல் ஆகும். ஆனால் அவை ஓர் புதிய இருப்பாகக் மதிப்பிடப்படுவதில்லை. இவை பாவிக்கப்பட்ட பொருள் என்ற வகையிலேயே மதிப்பிடல் வேண்டும். மாதிரி 1 எவ்வாறு கணக்குகள் மாற்றப்பட வேண்டும் என்பதனைக் காட்டுகின்றது.

(1) 1 ஜனவரி 19-4 அன்று நாம் 15 கணிப்புப் பொறிகளை ஒன்று ரூ300 படி வாங்குகின்றோம்.

(2) 1 ஜனவரி 19-4 அன்று நாம் அவற்றில் 12 ஐ ஒவ்வொன்றும் (காசுவிலை ரூ480 + ரூ120 வட்டி) ரூ600 விலைப்படி விற்கின்றோம்.

(3) 24 மாதாந்தக் கட்டணங்கள் ஒவ்வொன்றும் ரூ25 படி செலுத்தப்படல் வேண்டும்.

(4) வட்டியினை ஒதுக்கீடு செய்தலில் ஏற்பட்ட சிரமம் காரணமாக ஒவ்வொரு தவணைக் கட்டணத்துள்ளும் ரூ5 வட்டியினை உள்ளடக்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அதாவது 25 x ரூ5 = ரூ120 வட்டி.

(5) 1 நவம்பர் 19-4 அன்று 10 தவணைக் கட்டணங்கள் பெறப்பட்ட பின்னர் இரு கணிப்புப் பொறிகளை வாங்கிய ஓர் வாடிக்கையாளரால் தொடர்ந்து தவணைக் கட்டணங்களைச் செலுத்த முடியவில்லை இரு கணிப்புப் பொறிகளும் திருப்பப்பட்டன. அவரால் செலுத்தப்பட்ட தவணைக் கட்டணங்ளை நாம் மீளச் செலுத்த தேவையில்லை.

(6) திருப்பப்பட்ட இரு கணிப்புப் பொறிகளும் ஒன்று ரூ140 படி மதிப்பிடப்பட்டன. 31 டிசம்பர் 19-4 ல் காணப்பட்ட இருப்பில் 1 ஜனவரி 19-4 ல் ஒவ்வொன்றும் ரூ300 படி வாங்கப்பட்ட 3 கணிப்புப் பொறிகளும் உள்ளடக்கப்பட்டன.

(7) இலாபமானது செலுத்தப்பட்ட தவணைக் கட்டணங்களின் எண்ணிக்கைக் கேற்ப கணிக்கப்படுகின்றது.

31 டிசம்பர் 19-4ல் முடிவுற்ற ஆண்டிற்கான வியாபாரக் க கு.

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| கொள்வனவுகள் (1) | 4500 | காசு விலையில் விற்பனை (2) | 4800 |
| கழி இருப்பு (5) | 1180 | வாடகைக் கொ/வு வட்டி (3) | 600 |
| விற்பனைக் கிரயம் | 3320 | மீள்பெறுகையின் போது பெறப்பட்ட | |
| | | தவனைக் கட்டணங்கள் (4) | 500 |
| தேறாத இலாப ஏற்பாடு (6) | 900 | | |
| மொத்த இலாபம் | 1680 | | |
| | 5900 | | 5900 |

குறிப்பு : கணித்தல்கள் பின்வருமாறு மேற் கொள்ளப்பட்டுள்ளன.

(1) 15 X ரூ300 ரூ4500

(2) 10 விற்கப்பட்டன (இவை திருப்பப்படவில்லை) காசு விலை ரூ480 X 10 = ரூ4800

(3) விற்கப்பட்ட 10 ற்குமான வட்டி ரூ 5 X 12 மாதங்கள் = ரூ600

(4) 10 தவணைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டன. (வட்டியுட்பட) 2 கணிப்புப் பொறிகள் மீது 10 X ரூ25X2 = ரூ500

(5) இருப்பு புதிய பொறிகள்3 X ரூ300 ரூ900

மீளப்பெற்ற பொறிகள் 2 X ரூ140 ரூ280

ரூ1180

(6) கணிப்புப் பொறி மீதான இலாபம் :

காசு விலை ரூ480 கொள்விலை ரூ300 = ரூ180

செலுத்தப்பட வேண்டியது : 24ல் 12 தவணைக் கட்டண்ஙகள் = 1/2 இலாபம் = ரூ90

திருப்பப்படாது விற்கப்பட்டவை : 10 X ரூ90 = ரூ900

| | | | |
|---|---|---|---|
| பரிசோதிக்கப்படத்தக்க மொத்த இலாபம் : திகதி வழமையானது 10 X ரூ 90 = | | | ரூ900 |
| திகதி வரை உழைத்த வட்டி ரூ5 X 10 X 12 மாதங்கள் = | | | ரூ600 |
| மீள்பெறுகை மீதான இலாபம் : | | | |
| பெற்ற தவனைக் கட்டணங்கள் | | ரூ500 | |
| மீள்பெறுகை பெறுமதி மீதான நட்டம் | | | |
| கிரயம் 2 X ரூ300 = | ரூ600 | | |
| மீள எடுக்கப்பட்ட பெறுமதி | ரூ280 | ரூ320 | ரூ180 |
| | | | ரூ1680 |

உசாத்துணை நூல் :-

Business Accounting 2

{Fifth Edition]

FRANK WOOD

# நிதிப்பகுப்பாய்வில் சில விகிதங்கள்.

செல்வன்.யோ.சிவதர்சன்
ஆண்டு 12C

நிறுவனம் ஒன்றின் செயற்பாட்டுக்கு வேண்டிய அடிப்படை மூலவளங்களில்(Fundamental Resources) ஒன்றாக நிதி (Fund) காணப்படுகின்றது. அதாவது குறித்த நிறுவனம் ஒன்று தனது நாளாந்த செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவும் தனது எதிர்காலச் செயற்பாடுகளை நிறைவு செய்து கொள்ளவும். வர்த்தக உலகில் தனது இருப்பை நிச்சயப்படுத்திக் கொள்ளவும் நிதிவளம் என்பது அடிப்படையானதாகவும் முக்கியமானதாகவும் காணப்படுகின்றது.

இந்த வகையில் குறித்த நிறுவனம் ஒன்றின் நிதிசார் செயற்பாடுகளை திறனாய்வு செய்வது என்பதும் மதிப்பாய்வு செய்வது என்பதும் குறித்த நிறுவனத்திற்கு நன்மையளிக்கும் ஒரு நடவடிக்கையாக அமைவதோடு ஆரோக்கியமான ஒரு வர்த்தகச் சூழ்நிலையினையும் அந்த நிறுவனத்திற்கு ஏற்படுத்திக் கொடுக்கும்.

இந்த வகையிலேயே ஒரு நிறுவனத்தின் நிதிசார்ந்த செயற்பாடுகளை திறனாய்வு செய்யும் நடவடிக்கைகள் வரிசையில் நிதிப்பகுப்பாய்வு (Financial Analysis) என்பது முக்கியமான ஒரு ஆய்வு நடவடிக்கையாக நிறுவன நிதி முகாமையினால் (Financial Management) மேற்கொள்ளப்படுகின்றது.

நிதிப்பகுப்பாய்வு என்பது ஒரு நிறுவனத்தின் நிதிசார் செயற்பாடுகளை ஆய்வு செய்து குறித்த நிறுவனத்தின் நிதிநிலையையும் அதன் செயற்திறனையும் மதிப்பீடு செய்து கொள்கின்ற ஒரு செயன் முறையினைக் குறிக்கின்றது.

ஒரு நிறுவனத்தில் நிதிப்பகுப்பாய்வுச் செயன் முறையானது ஒரு ஒழுங்கு முறையில் மேற்கொள்ளப்படுகின்றது. இவ் ஒழுங்கு முறையானது இன்று படிகளாக வகுத்தீடு செய்யப்பட்டுள்ளன. அவைகள் கீழ் வருமாறு.

(1) பகுப்பாய்வு நோக்கத்திற்காக பொருத்தமான தகவல்களை (Relevant Information) நிதிக்கூற்றுக்களில் இருந்து (Financial Statements) தெரிவு செய்தல்.
(2) ஆய்வு நோக்கத்திற்காக தெரிவு செய்த தகவல்களை ஒரு பொருத்தமான அடிப்படையில் ஒழுங்குபடுத்துதல்.
(3) தெரிவு செய்த தகவல்களுக்கு இடையிலான தொடர்புகளை (Relationships) வியாக்கியானம் (Interpret) செய்தலும் அதிலிருந்து முடிவுகளை வரைந்து கொள்ளலும்

இந்த வகையில் நிதிப்பகுப்பாய்வு என்பது ஒரு நிறுவனத்தின் நிதிச்செயற்பாடுகளை பொருத்தமான தகவல்களைச் சேகரித்து அவற்றைக் கொண்டு அவற்றுக்கு இடையேயான தொடர்புகளை ஆராய்ந்து ஒப்பு நோக்கி மதிப்பீடு செய்து கொள்கின்ற ஒரு செயன் முறையாக (Process) காணப்படுகின்றது.

எனவே இங்கு குறித்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் நிதிப்பகுப்பாய்வு ஆனது குறித்த நிறவனத்துடன் தொடர்புடைய சமூக குழுவினருக்கு பயன்பாடுகள் அதிகம் மிக்க ஒரு நடவடிக்கையாக காணப்படுகின்றது. ஆனால் பகுப்பாய்வின் நோக்கம் (Purpose of Analysis) ஒரு குழுவினருக்கு வேறாகவும் மற்றைய குழுவினருக்கு வேறாகவும் என பல வகையானதாக

வேறுபட்டுக் காணப்படுகின்றது. ஏனெனில் வேறுபட்ட நோக்கங்களைக் கொண்டவர்கள் தமது வேறுபட்ட நோக்கம் சார்ந்த அடிப்படையில் குறித்த நிறுவனத்துடன் இணைந்து இருப்பது என்பதனாலாகும்.

இந்த வகையில் உதாரணமாக குறித்த நிறுவனத்தின் முகாமையானது (Management) முழு நிறுவனத்தினதும் செயற்பாடுகளிலும் அக்கறையினை (Interasted) கொண்டதாக இருக்கும்.குறிப்பாக நிறுவனத்தின் கடன் தீர்க்கும் ஆற்றலை சீராக பேணிக் கொள்ளவும் இலாப உழைப்பை உச்சப்படுத்தவும் அது விருப்பம் கொண்டு இருக்கும்.

மறு புறத்தில் பங்காளர்களும் (Share Holders) முதலீட்டாளர்களும் (Investors) ஒரு பங்குக்கான இலாப உழைப்பில் அக்கறையினைக் கொண்டு இருப்பார்கள். மேலும் நிதி நிறுவனங்கள் (Financial Institutions) தொகுதிக் கடன் தாரர்கள் (Debenture Holders) போன்ற பிரிவினர் நிறுவனத்தின் மூலதனக் கட்டமைப்பிலும் (Capital Structure)நிறுவனத்தின் உழைப்பு இயலளவிலும் அக்கறையினைக் கொண்டு இருப்பார்கள். இதேபோன்று வங்கிகள் (Banks) மற்றும் குறுங்காலக் கடன் வழங்குனர்கள்(Short-term Creditors) நிறுவனத்தின் நடைமுறைச் சொத்துக்கள் (Current Assets) நடைமுறை பொறுப்புக்கள் ((Current liablities) போன்றவற்றில் அக்கறையினைக் கொண்டு இருபபார்கள்.

எனவே ஒரு நிறுவனத்தின் நிதி முகாமையினால் நிதிப்பகுப்பாய்வு ஆனது மேற்கொள்ளப்படும் போது அது நிறுவனத்துடன் தொடர்புடைய வேறுபட்ட நோக்கங்களைக் கொண்ட பிரிவினரின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யக்கூடியதாக இருக்க வேண்டும்.

இந்த வகையில் குறித்த ஒரு நிறுவனம் பின்வரும் முறைகளில் நிதிப்பகுப்பாய்வினை மேற்கொள்ளமுடியும். இவற்றினை நிதிப்பகுப்பாய்வுக் கருவிகள் (ToolsofFinancial Analysis)எனவும் கூறலாம்.

(1) நிதிக்கூற்றுக்களை ஒப்பீடு செய்தல் (Comparative Financial Statments).
(2) பொதுவான ஒரு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் பற்றிய மதிப்பீடு (Common size financial statements).
(3) நிதியோட்ட பகுப்பாய்வு (Funds flow Analysis).
(4) விகிதபபகுப்பாய்வு (Ratio Analysis).

போன்றவையே அவையாகும்.

எனவே இங்கு விகிதப்பகுப்பாய்வில் பல விகிதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ் விகிதங்கள் நிதிப்பகுப்பாய்வில் பெருமளவு முக்கியத்துவம் பெறுகின்றன. அதாவது நிதிசார் செயற்பாடுகளை எண் சார்ந்த பெறுமானங்கள் ரீதியாக (Numerical Wise) திறனாய்வு செய்வது என்பது இலகுவானதும் வழமையானதுமான ஒரு கருமமாகக் காணப்படுகின்றது. எனவே இங்கு எண்சார்ந்த பெறுமானங்கள் என்கின்றபோது அது கணக்கியல் விகிதங்களையே (Accounting Ratios) குறித்து நிற்கின்றது.

இநத வகையில் விகிதம் என்பது ஒரு எண்ணினை மற்றைய ஒரு எண் தொடர்பில் கூறுவதனைக் கருதும் இவ்விகிதங்கள் கணக்கியல் தரவுகள் (Accounting Date)வருமானக் கூற்று (Income Statement) பாய்ச்சல் கூற்று (Flow Statement)மற்றும் அறிக்கைகள் போன்றவற்றில் இருந்து தயாரித்துக் கொள்ளப்படுகின்றன.

மேற் குறித்த மூலாதாரங்களில் இருந்து கணக்கியல் விகிதங்கள் தயாரிக்கப்படுகின்றபோது அவைகள் இன்ன வரையறைக்குள் நின்றுதான் தயாரிக்கப்பட வேண்டும் என்ற நியம

அழுத்தங்களோ சட்ட அழுத்தங்களோ காணப்படுவதில்லை. மாறாக குறித்த நிறுவனத்தின் செயற்பாடு சார்ந்தவகையில் அதனது நோக்கத்தினை மையமாகக் கொண்டும் அதனது எதிர்கால செயற்பாடுகள் மற்றும் நிறுவனத்துடன் தொடர்புடைய மூன்றாம் நபர்களின் தன்மையையும் கவனத்திற் கொண்டு இவ்விகிதங்கள் தயாரிக்கப்படுகின்றன. எனவே இங்கு நிறுவனங்களின் செயற்பாடுகளின் தன்மைக்கு ஏற்றவகையில் விகிதத் தயாரிப்பில் ஒரு சுதந்திரமான கையாளுகைத் தன்மை காணப்படுகின்றது.

இந்த வகையில் விகிதப்பகுப்பாய்வில் பயன்படுத்தப்படும் சில முக்கியமான விகிதங்களை கீழ்வருமாறு விளக்கமுடியும்.

(1) மொத்த இலாப விகிதம் -Gross Profit Ratio

இவ்விகிதமானது நிறுவனத்தின் இலாபத் தன்மையை எடுத்துக் காட்டும் ஒரு விகிதமாகக் கொள்ளப்படும். இங்கு மொத்த இலாபம் என்பது விற்பனைகளில் இருந்து விற்ற சரக்கின் கொள்விலையினைக் கழித்து வரும் பெறுமதியைக் குறிக்கும். இந்த வகையில் மொத்த இலாப விகிதமானது குறித்த நிறுவனத்தின் தேசிய விற்பனைக்கும் (Net Sale)மொத்த இலாபத்திற்கும் இடையிலான தொடர்பை எடுத்துக் காட்டும்.

இவ்விகிதமானது பின்வருமாறு கணிப்பீடு செய்யப்படும்.

$$\text{மொத்த இலாப விகிதம் (Gross profit Ratio)} = \frac{\text{மொத்த இலாபம் (Gross profit)}}{\text{தேறிய விற்பனை (Net Sale)}} \times 100$$

எனவே இங்கு மொத்த இலாபமானது விற்பனை விலை விற்பனை அலகுகள் செலவுகள் போன்றவற்றில் தங்கியுள்ளது.

உயர்வான மொத்த இலாப விகிதமானது பின்வரும் இரண்டு விடயங்களை வெளிப்படுத்தும்.

(1) குறித்த நிறுவனத்தின் சிறந்த முகாமைத்துவ செயற்பாட்டினை

(2) கொள்வனவுகள் தொடர்பான செலவுகள் குறித்த நிறுவன முகாமையினால் தாழ்நிலையில் பேணப்பட்டுள்ளது என்பது போன்ற விடயங்களை தெளிவுபடுத்தும்.

மறுபுறத்தில் குறைவான மொத்த இலாப விகிதமானது நிறுவனம் ஆபத்தான நிலையை எதிர் கொண்டுள்ள ஒரு நிலைமையை எடுத்துக் காட்டும். எனவே இவ்வாறான ஒரு நிலைமை நிறுவன முகாமையினால் கவனத்துடன் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். இத்தகைய ஒரு விரும்பத்தகாத ஒரு நிலைமையானது அதிகரித்த கொள்வனவுச் செலவுகள் மூலமோ, தரக்குறைவான பொருள்களின் விற்பனை மூலமோ அல்லது இது போன்ற பாதகமான செயற்பாடுகள் மூலமோ எழுந்து இருக்கலாம்.எனவே நிறுவன முகாமை இவ் விகிதத்தின் துணை கொண்டு தனது நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொள்ள முடியும்.

(2) தேறிய இலாப விகிதம் -Net profit Ratio

நிதிப்பகுப்பாய்வில் கையாளுகை செய்யப்படும் மற்றொரு விகிதம் இதுவாகும். இதுவும் நிறுவனத்தின் இலாபத் தன்மையை எடுத்துக் காட்டும்.

இவ் விகிதமானது குறித்த நிறுவனத்தின் தேறிய விற்பனைக்கும் தேறிய இலாபத்திற்கும் இடையிலான தொடர்பினை அளவீடு செய்வதாக இருக்கும்.

இது பின்வருமாறு கணிப்பீடு செய்யப்படும்.

$$\text{தேறிய இலாப விகிதம் (Net profit Ratio)} = \frac{\text{தேறிய செயற்பாட்டு இலாபம் (Net operating profit)}}{\text{தேறிய விற்பனைகள் (Net Sales)}} \times 100$$

இங்கு தேறிய செயற்பாட்டு இலாபம் என்பது மொத்த இலாபத்தில் இருந்து செயற்பாட்டு செலவுகளை கழித்துவரும் பெறுமதியினைக் கருதும்.

இவ் விகிதமானது இரண்டு விடயங்களை வெளிப்படுத்தும்.

(1) நிறுவன செயற்பாட்டுச் செலவுகளை நிறுவன முகாமை எவ்வாறு கையாளுகின்றது.

(2) நிறுவன முகாமையின் வினைத்திறனை

இவ்விகிதமானது உயர்வாக இருக்குமாயின் இது நிறுவன செயற்பாட்டு செலவுகள் இழிவுபடுத்தப்பட்டுள்ளது என்பதனை எடுத்துக்கூறும். மாறாக இது உயர்வாக இருக்குமாயின் செயற்பாட்டு செலவுகள் குறைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதோடு வருமானங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதனையும் எடுத்துக் கூறும்.

(3) நடைமுறை விகிதம் Current Ratio

இவ்விகிதமானது தொழிற்படு மூலதன விகிதம் எனவும் அழைக்கப்படும். நடைமுறை சொத்துக்களுக்கும் நடைமுறை பொறுப்புக்களுக்கும் இடையிலான தொடர்பினை இவ்விகிதம் அளவீடு செய்கின்றது.

இது பின்வருமாறு கணிக்கப்படும்.

$$\text{நடைமுறை விகிதம் (Current Ratio)} = \frac{\text{நடைமுறை சொத்து(Current Assets)}}{\text{நடைமுறை பொறுப்பு (Current Liablitias)}}$$

இங்கு நடைமுறைச் சொத்துக்கள் என்பது ஒரு வருடத்திற்குள் பணமாக்கக் கூடிய சொத்துக்களை கருதும். இது காசு, வங்கி மீதிகளையும், முடிவுப்பொருள், மூலப்பொருள், குறைவேலை, இருப்புக்களையும், சந்தைப்படுத்தக்கூடிய பிணைகள், முற்செலுத்திய கொடுப்பனவுகள், வருமதி உண்டியல்கள் போன்றவற்றையும் உள்ளடக்கி இருக்கும்.

அதேபோன்று நடைமுறை பொறுப்புக்கள் என்பது ஒரு வருடத்திற்குள்ளாக பணம் கொடுத்து தீர்க்கக்கூடிய பொறுப்புக்களைக் கருதும். இது வியாபாரக் கடன் கொடுத்தோர், சென்மதி உண்டியல்கள், வங்கிக் கடன்கள், வரிக்கான ஏற்பாடுகள், சென்மதிப் பங்கு இலாபங்கள், சென்மதிக் கொடுப்பனவுகள் போன்றவற்றை உள்ளடக்கி இருக்கும்.

பொதுவாக இவ்விகிதமானது 2:1 என அமைந்து இருப்பது விரும்பத்தக்கது. இவ்வாறான ஒரு நிலைமை என்ன இயல்பை குறித்து நிற்கும் என்றால் ஒவ்வொரு ஒரு ரூபா குறுங்கால கடனை தீர்க்க இரண்டு ரூபா நடைமுறை சொத்துக்கள் இருக்கின்றன என்பதனையே இது கருதும். இவ்வாறான ஒரு நிலைமை நிறுவனத்தின் சுமூகமான செயற்பாட்டை உறுதி செய்யும். மாறாக இவ்விகிதமானது உயர்வாக இருக்குமாயின் அது நிறுவன முகாமையின் ஆற்றலின்மையையே எடுத்துக்காட்டும்.

(4) திரவ விகிதம் / துரிதச் சொத்து விகிதம் - Quick Ratio / Acid Test Ratio

இவ்விகிதமானது குறித்த நிறுவனத்தின் திரவத்தன்மை மிக்க நடைமுறை சொத்துக்களுடன் நடைமுறை பொறுப்புக்களை ஒப்பிடுகின்ற விகிதமாகக் காணப்படும்.

இங்கு திரவத்தன்மை மிக்க சொத்துக்கள் என்பது சொத்தின் பெறுமதியில் எவ்வித குறைவும் இன்றி ஒரு குறுங்கால அறிவித்தலின் மூலம் பெற்றுக்கொள்ளத்தக்க அல்லது காசாக மாற்றக்கூடிய சொத்துக்களையே இது குறிக்கும். நடைமுறை சொத்துக்களில் இருந்து இறுதி இருப்புக்களை கழிப்பதன் மூலம் திரவச் சொத்துக்களை பெற்றுக்கொள்ளமுடியும். இவ்விகிதமானது அமிலப் பரிசோதனை விகிதம் எனவும் அழைக்கப்படும்.

இவ் விகிதமும் நிறுவனத்தின் குறுங்கால கடனை தீர்ப்பதற்கான ஆற்றலை எடுத்துக் காட்டுவதாக அமையும். நிறுவனத்தின் திரவத்தன்மையை அளப்பதற்கு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த முறையாக இது காணப்படுகின்றது. இவ் விகிதமானது ஒரு நிறுவனத்தில் 1 : 1 என அமைந்து இருக்குமாயின் அது ஒரு திருப்திகரமான தன்மையை எடுத்துக்காட்டும்.

இவ் விகிதமானது பின்வருமாறு கணிப்பீடு செய்யப்படும்.

துரித விகிதம் /திரவ விகிதம் (Quick Ratio) = திரவச் சொத்துக்கள் விரைவுச் சொத்துக்கள்(Quick assets) / நடைமுறை பொறுப்புக்கள் (Current liblities)

(5) இருப்பு புரள்வு விகிதம் (Stock Turnover Ratio)

இவ்விகிதமானது இருப்புப் புரள்வானது, தொழிலின் விற்பனைப்பொருள் என்ன வேகத்தில் விற்பனையாகின்றது என்பதனைக் காட்டுகின்றது. இவ் விகிதமானது இருப்பு முகாமைத்துவத்தின் (Inventory Management)வினைத்திறனை அளவீடு செய்வதாக அமையும்.

உயர்வான இருப்புச் சுழற்சியானது குறித்த நிறுவனமானது இருப்பில் குறைந்தளவு முதலீட்டினை செய்துள்ளது என்பதனையும், நிறுவனம் இருப்பின்மை நிலையை அடைய இருப்பதனையும் எடுத்துக் காட்டும். இதேபோன்று குறைவான இருப்புச் சுழற்சியானது இருப்பில் அதிகஅளவு முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பதைக் காட்டும். இந்த வகையில் ஒரு நிறுவனம் ஏற்புடைய ஒரு இருப்புச் சுழற்சியினை பேணிக்கொள்ள வேண்டும்.

இவ் விகிதம் பின்வரும் இரண்டு முறைகளில் கணிக்கப்படலாம்.

(1) இருப்பு சுழற்சி (Stock Turnover) = விற்ற சரக்கின் கொள்விலை (Cost of Goods Sold) / சராசரி இருப்பு (Average Invertory)

(2) இருப்புச்சுழற்சி = விற்பனைகள் (Sale) / சராசரி இருப்பு

இங்கு சராசரி இருப்பு என்பது ஆரம்ப இறுதி இருப்புக்களை கூட்டி இரண்டால் வகுப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும். முதலாவது அணுகுமுறை இங்கு பயன்மிக்கதாகக் கொள்ளப்படும். இரண்டாவது அணுகுமுறையில் விற்பனைகள் சந்தைப் பெறுமதியில் இருக்க, இருப்பானது கிரயப் பெறுமதியில் கணிப்பீடு செய்யப்படும். இந்த வகையில் இரண்டாவது முறை ஏற்ற ஒரு முறையாக காணப்படும்.

இந்த வகையில் மேற்சொன்ன விகிதங்கள் தவிர முதலீடுகள் மீதான சுழற்சி விகிதங்கள், மூலதன சுழற்சி விகிதங்கள் போன்ற விகித வகைகளும் நிதிப்பகுப்பாய்வில் பின்பற்றப்படுகின்றன.

எனினும் விகிதங்கள் தொடர்பில் சில குறைபாடுகள் கூறப்படுகின்ற போதும் அனேகமான நிதிப்பகுப்பாய்வாளர்களால் இவ் விகிதங்கள் பயன்படுத்தப்பகின்றன.

# கணக்கியல் எண்ணக்கருக்கள்

செல்வன்.ச.லவன்
ஆண்டு 12C

கணக்கு செய்முறையிலே பின்பற்றப்படும் அடிப்படையான விதிகள் தத்துவங்கள் கணக்கியல் எண்ணக்கருக்களாகும். கணக்குச் செய்முறைபடிகளில் எழும் சிக்கல்கள், பிரச்சினைகளை இயன்றளவு தவிர்த்துக்கொள்ள இக்கணக்கியல் எண்ணக்கருக்கள் உதவுகின்றன.

இலங்கை கணக்கியல் நியமம் (S.L.A.S) 3இன் படி அடிப்படையான கணக்கீட்டு எண்ணக் கருக்களாக கீழ்வரும் மூன்றும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவையாவன :-

(1) தொடர்ந்து இயங்கும் அமைப்பு
(2) கொள்கை மாறாமை அல்லது இயல்பான எண்ணக்கரு
(3) அட்டுறு அல்லது சேர்வுறல்.

தொடர்ந்து இயங்கும் அமைப்பு எனும் போது எந்த ஒரு வியாபார அமைப்பும் தொடர்ச்சியாக பல வருட காலத்திற்கு இயங்கும் என்ற அடிப்படையிலேயே கணக்குகள் பேணப்படுகின்றன. மாறாக வியாபாரம் அன்மைக் காலத்தில் கலைக்கப்படும். அதன் செயற்பாட்டை நிறுத்த வேண்டிவரும் எனக் கருதுவதில்லை. தொழில் தொடர்ந்து இயங்கும் என்ற அடிப்படையிலேயே வாங்கப்படுகின்ற நிலையான சொத்துக்களின் பெறுமதி முழுவதையும் அந்த ஆண்டு முடிவுக் கணக்கில் நட்டமாக காட்டாது பல வருடங்களில் பெறுமான தேய்வு என்ற அடிப்படையில் பதிவழிக்கப்படும் என்பதே இதன் கோட்பாடாகும்.

இயல்பான எண்ணக்கரு எனும்போது கணக்கு செய்முறைகளில் நிறுவனங்கள் கடைப்பிடிக்கும் கொள்கைகள், கோட்பாடுகள் தொடரும் ஆண்டுகளில் வேறுபடாது இருக்க வேண்டுமென கூறுகிறது. இதன் மூலம் தொடர்ந்து கடைப்பிடிக்கும் கொள்கைகள், கோட்பாடுகள் மூலம் ஏனைய ஆண்டுகளோடு ஒப்பிட முடியும் என்பதே இதன் நோக்கமாகும். பின்பற்ற வேண்டிய சில நிதிமுறைகளை அவசியம் மாற்ற வேண்டி இருப்பின் அதனை மாற்றிய பின்னர் நிதி கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தல் வேண்டும்.

அட்டுறு எண்ணக்கருவை நோக்கும் போது, குறித்த நிதி வருடத்திற்கான வருமானங்கள், செலவுகளை கொள்ளல் கொடுத்தல் என்ற அடிப்படையில் அல்லாது உழைத்தல், ஏற்றுக் கொள்ளல் என்ற அடிப்படையில் நிதி கூற்றுகளில் காட்டப்பட வேண்டும் என்பதே இவ்வெண்ணக்கருவாகும். அதாவது இலாப நட்டம் கணிக்கும் போது வருமானங்கள் செலவினங்கள் சார்பில் முற்பணம் நிலுவைகள் என்பவற்றை கவனத்திற் கொண்டு கணக்கு வைக்கும் முறை இதுவாகும்.

உ.ம் :- மாதம் 2000/= வாடகை செலுத்துதல் என்ற அடிப்படையில் நிறுவனம் கட்டிடம் ஒன்றை வாடகைக்கு எடுத்திருந்தது. அவ்வாண்டு வாடகைக்கு காசாக செலுத்திய தொகை 22,000ரூபா ஆகும். ஆனால் கணக்குகளில் 24,000ரூபா ஆக காட்டப்பட்டு 2000ரூபா வினை வாடகை நிலுவை எனக் காட்ட வேண்டும்.
இவை தவிர பதினொரு எண்ணக்கருக்கள் காணப்படுகின்றன. அவையாவன :-

(1) கிரய எண்ணக்கரு
(2) ஆளுமை எண்ணக்கரு
(3) இரட்டை விளைவு எண்ணக்கரு
(6) கைக்கிட்டிய எண்ணக்கரு
(7) இணைத்தல் எண்ணக்கரு
(8) கால வரைமுறை எண்ணக்கரு

(4) பணரீதியான அளவு எண்ணக்கரு (9) வெளிப்படுத்தல் எண்ணக்கரு

(5) குறைத்து கூறல் எண்ணக்கரு (10) முக்கியத்துவ எண்ணக்கரு

(11) பணத்தின் உறுதி தன்மை எனும் எடுகோள்.

கிரய எண்ணக்கருவை நோக்கும் போது அது வியாபாரத்தில் எழும் நடவடிக்கைகள் அனைத்தும் கொள்விலையிலேயே பேணப்படும். சில சொத்துக்களின் விலை சந்தையில் கூடுதலாக இருந்தாலும் கூட கொள்விலை பெறுமதியே புத்தகங்களில் காட்டப்படும்.

ஆளுமை எண்ணக்கரு எண்ணத்தை பற்றி கூறுகின்றதெனில், நிறுவனம் வேறு அதன் உரிமையாளர் வேறு என்றும் கணக்குகள் மற்றும் கணக்கீட்டு அறிக்கைகளும் தயாரிக்கப்படுகின்றன. சட்டப்படி தனி மனித அந்தஸ்து கம்பனிக்கு வழங்கப்பட்டது. இக் கம்பனிகள் கட்டாயம் இவ் எண்ணக்கருவை கடைப்பிடிக்க வேண்டும். ஆயினும் நடைமுறையில் தனித்துவமில்லாத தனிவியாபாரம், பங்குடைமை போன்ற அமைப்புகளும் இதனை பினபற்றுகின்றன.

இரட்டை விளைவு எண்ணக்கருவை நோக்கும் போது இதுவே கணக்கியலின் இரட்டை பதிவுகள் என்ற கோட்பாட்டை வலியுறுத்துகின்றன. இதன்படி வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் இரண்டு விளைவுகளை ஏற்படுத்தி ஒரு விளைவு சொத்திலும் மற்றைய விளைவு பொறுப்பிலும் தாக்கம் உண்டு பண்ணுகின்றன. இதன் மூலம் பின்வரும் கணக்கியல் சமன்பாடு பெறப்பட்டது.

சொத்துக்கள் = கடன் பொறுப்பு +உரிமை மூலதனம்.

பணரீதியான எண்ணக்கரு என்றால் என்னவென நோக்கில் நிறுவனங்களினால் தயாரிக்கப்படுகின்ற நிதிகூற்றுகளில் பணத்தினால் அளவீடு செய்ய முடியாத நடவடிக்கைகள் தவிர்க்கபடுகின்றன.

குறைத்து கூறல் எண்ணக்கரு எனும்போது குறித்த காலத்திற்கான நிதிகூற்றுக்கள் தயாரிக்கையில் அக்காலத்திற்கான சாத்தியமாகவுள்ள இழப்பீடுகள் சம்பந்தமான ஏற்பாடுகளை செய்தல் வேண்டும் எனக் கூறுகிறது. பொய்த்தகவல்கள் தவிர்க்கப்பட்டு உண்மையான இலாபத்தினையும் நிதி நிலைமையினையும் எடுத்து காட்டுகிறது. கையிருப்பு மதிப்பீடு சம்பந்தமாகக் கொள்விலை அல்லது கைத்தேறத்தக்க பெறுமானம் என்பவற்றில் குறைந்தது என்ற விதியை இக்கோட்பாடு வலியுறுத்துகிறது.

கைக்கிட்டிய எண்ணக்கரு அல்லது தேறல் எண்ணக்கரு எனும்போது கணக்கியலில் ஒரு வியாபார நடவடிக்கை நடந்தேறியதும் அதன் வருமானம் கிடைத்தது என்ற அடிப்படையிலேயே பொதுவாக கணக்குகள் கையாளப்படுகின்றன. இதன் மூலமே சில விற்பனை ஒப்பந்தங்கள், எதிர்கால விற்பனைகள் போன்றவை விற்பனையாக பதியப்பட்டு இறுதியில் அது நிறைவேறாவிடில் சீராக்கம் செய்யப்படுகிறது.

இணைத்தல் எண்ணக்கருவை நோக்கில் குறித்த நிதியாண்டு காலப்பகுதியானது இலாபத்தையோ அல்லது நட்டத்தையோ நிச்சயிக்கும் போது அக்காலப்பகுதியில் வருமானங்கள் வருமான செலவோடு ஒத்துப் பார்க்கப்படுகின்றன. இக்கோட்பாடு இலகுவானதென தோன்றினாலும் கூட சில சிக்கல்கள் எழவும் செய்கின்றன.

கால வரைமுறை எண்ணக்கரு எனும்போது வியாபார நிறுவனமானது தமது கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்ந்த கிரமப்படி பதிந்து கொள்ளப்படுவதுடன் நிதி கூற்று தயாரிக்கும்போது ஒரு

குறிப்பிட்ட காலப்பகுதியுடன் குறிப்பிட்டதாக அமைதல் வேண்டும். இதன் மூலம் நிலையான சொத்துக்களின் பெறுமான தேய்வு கணித்தல் தொடர்பில் அதன் கொள்விலை ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கிடையே சமமாக பகிரப்படும்.

இறுதியாக பணத்தின் உறுதித்தன்மை எனும் எடுகோளை நோக்கின் கணக்கியலில் (Accountancy) பணப்பெறுமதியிலேயே அளவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் பணவீக்கம், பணச்சுருக்கம் என்பன பணத்தின் முழுப்பெறுமதியின் உண்மையான பெறுமானத்தை காட்டாது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். பணத்தின் பெறுமானம் நிலையானது என்ற எடுகோளிலேயே நிதிஅறிக்கைக்ள தயாரிக்கப்படுகின்றன.

இவ் எண்ணகருக்கள் மூலமே நாம் கணக்கியலில் சகல கணக்குகளை அல்லது பதிவுகளையும் மேற்கொள்கிறோம்.

இரட்டை பதிவு எனும் முறையை 1494 இல் இத்தாலியை சேர்ந்த லூக்கா பசி ஒவி என்பவர் அறிமுகப்படுத்தினார்.

மத்தியின் வணிகம் நலமுடன் சிறக்க நல் வாழ்த்துக்கள்.

# ஸாவண்யா

**பல். மூக்குக்கண்ணாடி அகம்**
**175 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்**

வி. ரி. அன் சன்ஸ்
317 மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.
(எழிலகம் முன்)

கிளை :
காங்கேசன்துறை வீதி
சுன்னாகம்.
(இலங்கை வங்கி அருகாமை)

மத்தியின் வணிகத்திற்கு எமது
வாழ்த்துக்கள்

✦
✦

**கல்யாணி குளிரகம்**

(கல்யாணி கிறீம் ஹவுஸ்)

✦
✦
✦

இல 73 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

மத்தியின் வணிகம் சிறக்க நல்
வாழ்த்துக்கள்

*
*

**குகன் களஞ்சியம்**

*
*
*

180 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
தொ.பே 24427

WITH BEST COMPLIMENTS
FROM

✷
✷
✷

**BOSECO**

✳
✳

MODERN MARKT
HOSPITAL ROAD
JAFFNA.

மத்தியின் வணிகம் சிறப்புடன்
விளங்க வாழ்த்துகின்றோம்

☆
☆
☆

**பூபாலசிங்கம்**
**பொத்தகசாலை**

✷
✷
✷

யாழ்ப்பாணம்
தொ.பே. 23631

மத்தியின் வணிகம் சிறப்புடன் விளங்க எமது வாழ்த்துக்கள்

நகரப் பையன் தையலகம்
நகரப் பையன் தையலகம்
நகரப் பையன் தையலகம்
நகரப் பையன் தையலகம்
நகரப் பையன் தையலகம்
நகரப் பையன் தையலகம்
நகரப் பையன் தையலகம்

(சிற்றி போய்)

181 சிவன் பண்ணை வீதி
கொட்டடி
யாழ்ப்பாணம்.

மத்தியின் வணிகம் சிறக்க
வாழ்த்துக்கள்

மக்மிலன்
பொத்தக நிலையம்

3, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

மத்தியின் வணிகம் புதுப் பொழிவுடன்
மிளிர நல் வாழ்த்துக்கள்

லைடன்

புடவை நிலையம்

249 மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்

WITH BEST COMPLIMENTS
FROM

LANKEM

221 POWER HOUSE RD
JAFFNA

மத்தியின் வணிகம் சிறக்க
நல் வாழ்த்துக்கள்

லலிதா
புடவை மாளிகை

6 நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

# பொருளியல் விடயங்கள்

1. திரு. ஆ. செளந்தரலிங்கம்

2. செல்வன். சி. சிறீதரன்

## பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் தலையீடு

ஆ. செளந்தரலிங்கம்
B. A. (Hons) Dip in. Ed.
ஆசிரியர்
யாழ் மத்திய கல்லூரி

### முன்னுரை

சந்தைப் பொருளாதாரங்களில் வழிகாட்டியாக விளங்கும் விலைப்பொறிமுறையானது சில வேளைகளில் பொருளாதாரங்களைத் தவறான பாதையிலே இட்டுச் சென்று விடுகிறது. சந்தைப் பொருளாதாரங்கள் சில வேளைகளில் தனியுரிமை நிலை (Monopoly), வெளிவாரிவிளைவுகள் (Externalities) போன்ற சந்தைத் தோல்விகளினால் (Market failure), பாதிக்கப்படுகின்றன. பணவீக்கம், வேலையின்மை போன்ற நடைமுறைப் பிரச்சினைகளினால் பீடிக்கப்படுகின்றன. வருமான ஏற்றத்தாழ்வு நிலைமையையும் இங்கே நாம் காணக்கூடியதாக உள்ளது. விலைப்பொறிமுறையில் காணப்படும் இத்தகைய குறைபாடுகளினால்தான் இன்றைய நவீன பொருளாதாரங்கள் சந்தை முறையுடன் வரிகள், அரசாங்க செலவினங்கள் அரசாங்கக் கட்டுப்பாடுகள் என்பன ஒன்று சேர்ந்த ஒரு கலப்புத்தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றன. இக்கட்டுரையானது பொருளாதாரமொன்றிலே, சிறப்பாகக் கூறுவதானால் தனியார் முயற்சிப் பொருளாதாரமொன்றிலே அரசாங்கத்தின் பங்கு பணிகள் என்ன? அத்தகைய பணிகளுக்கான காரணங்கள் என்ன? என்பவற்றைச் சுருக்கமாக ஆராய்கிறது.

முக்கியமான மூன்று பணிகள்

ஒரு அரசாங்கம் தனது நாட்டின் பொருதாரத்தில் மிக முக்கியமான மூன்று பொருளாதாரப் பணிகளை மேற்கொள்வதனூடாக தலையீட்டினை ஏற்படுத்துகிறது. அவற்றைப் பின்வருமாறு கூறலாம்.

1. திறமையினை (Efficiency), ஏற்படுத்தும் பணிகள்

11. சமத்துவத்தை (Equity), ஏற்படுத்தும் பணிகள்

111. உறுதிப்பாட்டினை (Stability), ஏற்படுத்தும் பணிகள்

நாட்டின் உற்பத்தி, வர்த்தகம் போன்ற துறைகளில் தனியுரிமை நிலைமைகள் தோன்றுகின்றன.

சந்தைமுறை இயக்கத்தில் ஏற்படுகின்ற தவறுதல்களால் அல்லது தோல்விகளினால் இத்தகைய தனியுரிமை நிலை ஏற்படுகிறது. இச்சந்தைத் தோல்விகளைச் சீர்செய்யும் நடவடிக்கைகளையே திறமையினை ஏற்படுத்தும் பணிகள் என்று கூறுகிறோம். நாட்டில் வாழும் வறிய மக்களைக் கருத்தில் கொண்டு வருமான, செல்வ ஏற்றத்தாழ்வினை நீக்கும் வகையில் வருமான மறுபங்கீட்டினை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் சமத்துவத்தை ஏற்படுத்தும் பணிகளாக அமைகின்றன. வர்த்தக சகடவோட்டத்தில் இடம்பெறும் மந்தம் செழிப்பு நிலைமைகளைச் சீர் செய்யும் நடவடிக்கைகள் அதாவது வேலையின்மையையும் பணவீக்கத்தையும் குறைத்து பொருளாதார வளர்ச்சியை உயர்த்தும் முயற்சிகளை நாம் உறுதிப்பாட்டினை ஏற்படுத்தும் பணிகள் என்று கூறிக் கொள்ளலாம் இனி இவற்றை ஒவ்வொன்றாக ஆராய்வோம்.

## 1. திறமையினை ஏற்படுத்தும் பணிகள் (Efficiency)

சந்தை முறைப் பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற சந்தைத் தோல்விகள் (Market failure), திறமையற்ற உற்பத்தி முறைக்கும் நுகர்வுக்கும் வழி கோலுகின்றன. சந்தைத் தோல்வியென்பது இங்கு சந்தையானது தனது நிறைபோட்டித்தன்மையில் இருந்து விலகிச் செல்லுதலைக் குறிக்கும். அவ்வாறு விலகிச் செல்வது பொருளாதாரத்தில் திறமையற்ற ஒரு தன்மையை (Inefficiency) உருவாக்கி விடுகிறது. பல்வேறு வழிகளில் ஏற்படும் சந்தைத் தோல்விகளினால் பல்வேறு தன்மை கொண்ட திறமையின்மை நிலைமைகள் பொருளாதாரத்தில் தோற்றம் பெறுகின்றன. அத்தகைய நிலைமைகளையும், அந்நிலமைகளில் அரசாங்கத்தின் தலையீட்டினையும் கீழே நோக்குவோம்.

### 1.1 தனியுரிமை நிலை. (Monopoly)

ஒரு நிறைபோட்டிச்சந்தையில் அதிகளவு நிறுவனங்கள் காணப்படும். எனவே எந்த ஒரு நிறுவனமும் குறிப்பிட்ட் பொருளின் விலையில் பாதிப்பை ஏற்படுத்த முடியாது ஆனால் நிறைவில் போட்டியில் ஒரு நிறுவனம் அத்தகைய பாதிப்பை ஏற்படுத்த முடியும். நடைமுறையில் எல்லா உற்பத்தியாளர்களும் நிறைவில் போட்டியாளர்களே. இந்நிறைவில் போட்டியின் ஒரு எல்லையாகவே தனியுரிமையாளர் காணப்படுகிறார். ஒரு குறிப்பிட்ட பொருளின் தனிவழங்குநர் இவரேயாவர். பொருளாதாரத்தில் இந்தத் தனியுரிமைநிலை தோன்றும்போது. அதாவது தனியொரு பெரிய நிறுவனமானது குறிக்கப்பட்ட சந்தையிலே விலைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் வல்லமையைப் பெறும்போது, அது பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகிறது. தனியுரிமை நிலை தோன்றும் போது விலைகள் திறமை மட்டத்தை விட மேல் நோக்கிச் செல்லுகின்றன. கேள்வி மற்றும் உற்பத்தி அமைப்புக்களில் ஒழுங்கற்ற தன்மைகள் காணப்படுகின்றன. அசாதாரண இலாபத்தினை உற்பத்தியாளன் அநுபவிக்கிறான். இந்த அசாதாரண இலாபமானது நுகர்வோரைத் தவறாக வழிநடத்தும் விளம்பரம் போன்ற செயற்பாடுகளுக்கு வழி வகுத்து விடுகின்றன. ஆனால் அரசாங்கங்கள் இந்த நிலையை அனுமதிப்பதில்லை. பல்வேறு சட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் சுமத்தி பொருளாதாரத்தில் தலையீட்டினை மேற்கொண்டு தனியுரிமை நிலையைக் கட்டுப்படுத்தி வருகின்றன.

### 1.2 வெளிவாரி விளைவுகள் (Externalities)

பொருளாதாரத்தில் இடம் பெறுகின்ற உற்பத்தி நடவடிக்கைகளின்போது வெளிவாரி விளைவுகள் ஏற்படுகின்றன. இவ்வெளிவாரி விளைவுகளினாலும் சந்தைப் பொறிமுறையானது திறமையற்ற ஒரு நிலைக்கு இட்டுச்செல்லப்படலாம். இந்த நிலையிலும் அரசாங்கமானது பொருளாதாரத்தில் தலையிடவேண்டி ஏற்படுகிறது. வெளிவாரி விளைவுகளைப் பின் வருமாறு வரையறை செய்யலாம். மற்றவர்கள் பொருத்தமான பெறுகைகள் எதையும் பெற்றுக் கொள்ளாத நிலையில் ஒரு நிறுவனமானது அவர்கள் மீது செலவுகளைச் சுமத்தும் போது அங்கு வெளிவாரி விளைவுகள் ஏற்படுகின்றன. உதாரணமாக ஒரு நிறுவனம் ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தினைப் பணம் கொடுத்து வாங்குகிறது. பின்னர் அதில் உற்பத்தியை மேற்கொள்ளும் போது நீரும், காற்றும்

மாசடைகிறது என எடுப்போம். சூழலை மாசுபடுத்துவதற்காக அந்த நிறுவனம் அங்கு வாழும் மக்களுக்குக் கொடுப்பனவாக எதுவித பணமும் கொடுப்பதில்லை. தான் இலாபத்தை உழைப்பதற்காக அது சூழலை மாசுபடுத்துகிறது. இதனை எதிர்மறை வெளிவாரி விளைவு என்று அழைப்பர்.

அதேபோல மற்றவர்கள் செலவுகள் எதனையும் செலுத்தாமல் இருக்கும் நிலையில் அவர்கள் மீது நன்மைகள் சுமத்தப்படும் போதும் வெளிவாரிவிளைவுகள் ஏற்படுகின்றன. உதாரணமாக ஒரு நிறுவனம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்கின்றது. என எடுப்போம். அதற்காகப் பணம் செலவழித்துள்ளது. அத்தொழிற்சாலைக்குப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் தனது செலவில் நியமிக்கிறது. இந்தப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் செயற்பாடு காரணமாக அத்தொழிற்சாலையை அண்டி வாழ்பவர்களும் பாதுகாப்பு பெறுகிறார்கள். இது எவ்வித செலவுமின்றி அவர்கள் பெற்றுக் கொண்ட நன்மையாகும். மேற்குறிப்பிட்ட நன்மைகளும், தீமைகளும் சந்தைச் செயற்பாட்டிற்கு அப்பாறப்பட்ட முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டபடியினால் வெளிவாரி விளைவுகள் என்று அழைக்கப் படுகின்றன.

நாடுகளில் சனத்தொகை பெருகி வருவதனாலும், உற்பத்திச் செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டு வருவதனாலும் இவ் வெளிவாரி விளைவுகள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில் அரசாங்கமானது காற்று மாசுபடல், நீர் மாசுபடல், கதிர் வீச்சுத்தாக்கம், பாதுகாப்பற்ற மருந்து மற்றும் உணவு வகைகள் போன்ற எதிர்மறை வெளிவாரி விளைவுகளைக் கட்டுப் படுத்த பொருளாதாரத்தில் தலையீடு செய்கிறது. இதேபோல, பொருட்களை நிறைகுறைத்து விற்றல், குழந்தைகளை வேலைக்கு அமர்த்தல், போதை வஸ்து விற்பனை போன்றவற்றைக் கட்டுப்படுத்தல் வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளும் அரசின் தலையீட்டைக் காட்டுகின்றன. இவை பாதகமான வெளிவாரி விளைவுகளை கட்டுப் படுத்துகின்றன.

### 1.3 பொதுப் பொருட்களின் உற்பத்தி (Public Goods)

போட்டிச்சந்தை முறையானது பொதுப் பொருட்களின் உற்பத்திக்கு இடம் கொடுப்பதில்லை. பொதுப் பொருட்களைத் தனியாற் துறையினரை உற்பத்தி செய்யும்படி தூண்டுவது மிகக்கடினமானது. சமுதாயத்திற்கு நலன்களைத் தருவிக்கும் இந்தப் பொதுப் பொருட்களின் உற்பத்தியை அப்படியே தனியார்துறையினரிடம் விட்டு விட முடியாது. தேசிய பாதுகாப்பினையும், சட்டத்தையும் ஒழுங்கையும் பராமரித்தல், நெடுஞ்சாலைகளை அமைத்தல், பொது சுகாதாரத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் ஆதரவு அளித்தல் போன்றன இதற்கு உதாரணங்களாகும். இந்தப் பொருட்களால் கிடைக்கும் நன்மைகள் மக்களிடையே மிகவும் பரந்த முறையில் பரவிச் செல்வதினால் அதாவது தனியொரு நிறுவனமோ அல்லது தனிநபரோ இவற்றை வழங்குவதற்கு ஊக்குவிப்பு ஏதும் இல்லையென்பதனால் பொதுப் பொருட்களைப் பொறுத்தவரை தனியார் துறையினர் இதன் உற்பத்தியில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். எனவே பொதுப் பொருட்களினை உற்பத்தி செய்து வழங்குவதற்கு அரசாங்கத்தின் தலையீடு அவசியமாகின்றது.

### 1.4 வரிகளை விதித்தல் (Tax)

பெரும்பாலான அரசாங்க செலவுகள் வசூலிக்கப்படும் வரிகளினால் ஈடு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு மனிதனும் வரிச்சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவனாகின்றான். அந்த வகையில் அரசாங்கத்தினால் வழங்கப்படும் பொதுப் பொருட்களுக்கு ஏற்படும் செலவுகளைப் பொதுமக்களே பகிர்ந்து கொள்கின்றனர். இங்கு அரசாங்கம் வரிகளை வசூலிப்பதன் ஊடாக பொருளாதாரத்தில் தலையிடுகிறது.

எனவே ஒரு அரசாங்கம் தனியுரிமை நிலைமை ஏற்படுவதைக் கட்டுப்படுத்துவதற்காகவும், எதிர்மறை வெளிவாரி விளைவுகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும், பொதுப்பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடுவதற்காகவும், அதற்காக வரியினை வசூலிப்பதற்காகவும் பொருளாதாரத்தில்

தலையீட்டினை மேற்கொள்கிறது. அவற்றின் மூலமாக சந்தைத் தோல்விகளின் விளைவுகள் நீக்கப்பட்டுப் பொருளாதாரத்தில் திறமைநிலை நிலைநாட்டப்படுகிறது.

11. சமத்துவத்தை ஏற்படுத்தும் பணிகள் (Equity)

ஒரு பொருளாதாரமானது பூரணமான திறமை நிலையில் (Complete efficiency) இயங்குகிறது என்று எடுத்துக் கொள்வோம். அதாவது சந்தை முறைமையானது மிகவும் திறமையான முறையில் இயங்குகின்றது என்று எடுப்போம். ஆனால் இந்த நிலைகூட ஒரு சிறந்த இலட்சியபூர்வமான நிலை என்று பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. காரணம் சந்தை முறைமையில் வருமான, செல்வ ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதுதான். ஒரு பணக்காரனின் நாய்க்குட்டியானது உணவினை பெற்றுக் கொள்ளக்கூடிய நிலை இருக்கும் போது, அதே உணவினை தான் உயிர்வாழ்வதற்கு ஒரு பையன் பெற்றுக்கொள்ள முடியாத நிலை சந்தைப் பொருளாதாரத்தில் காணப்படலாம். அதாவது ஒரு சந்தைப் பொருளாதார முறைமையில் வருமான ஏற்றத்தாழ்வுகள் பெருமளவுக்குக் காணப்படும். இங்கு வருமானப் பங்கீடு சமனற்ற முறையில் அமைந்து விடுகிறது. மறைவுகரமானது ஒரு பொருளாதாரத்தை உற்பத்திச்சாத்திய வளைகோட்டின் வெளி எல்லைக்கு இட்டுச் செல்லலாம். ஆனால் அது எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒருவகையில் வெளியீட்டினைப் பங்கீடு செய்யவேண்டிய அவசியத்தைக் கொண்டிருப்பதில்லை. இதன் விளைவாகவே அரசு மறுபங்கீட்டுக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. இன்று புதிய தொழில் நுட்பக் கண்டுபிடிப்புக்கள் சந்தை முறைமையில் வருமானப் பங்கீட்டினைத் தீர்மானித்து வருகின்றன. தொழிலாளர் பலர் சேர்ந்து செய்கின்ற உற்பத்திகளைப் புதிய இயந்திரங்கள் செய்யும் போது காரணி வருமானங்கள் தொழிலாளர் வர்க்கத்திற்குச் செல்லாமல் இயந்திரங்களின் உரிமையாளர்களையே சென்றடைகிறது. தேசிய வருமானத்தில் பெரும்பகுதி மூலதனம் படைத்தோரைச் சென்றடைகிறது. இது வருமான ஏற்றத்தாழ்வை உருவாக்கி விடுகிறது. இந்த ஏற்றத்தாழ்வு நிலையை நீக்கிச் சமத்துவ நிலையை ஏற்படுத்த பொருளாதாரத்தில் அரசு தலையிடுகிறது.

அரசாங்கம் எவ்வழிகளில் தலையிடுகிறது? அரசாங்கம் விருத்திமுறை வரிகளை விதிக்கிறது. அதிலிருந்து பெற்றுக்கொள்ளும் வருமானத்தினைக் கொண்டு மானியங்களை மக்களுக்கு வழங்குகிறது. வயோதிபர்கள்? அனாதைகள், உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்டோர்க்கு உதவிப் பணம் வழங்குதல், வறியவர்க்கு உணவு முத்திரை வழங்குதல் போன்ற மாற்றுக் கொடுப்பனவுகள் மூலம் அரசாங்கம் மானியங்களை வழங்குவனூடாக வருமான ஏற்றத்தாழ்வை நீக்கி சமத்துவத்தை ஏற்படுத்த பொருளாதாரத்தில் தலையிடுகிறது. மேலும் பொருளாதாரவளர்ச்சிச் செயற்பாடுகள், இலவசக் கல்வி, இலவச மருத்துவம் போன்ற சமூகநலச் செயற்திட்டங்கள் என்பவற்றின் ஊடாகவும் சமத்துவத்தை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் பணிகள் பொருளாதாரத்தில் இடம் பெறுகின்றன.

111. உறுதிப் பாட்டினை ஏற்படுத்தும் பணிகள் (Stability)

மேலே குறிப்பிடப்பட்ட திறமை, சமத்துவம் என்பவற்றை ஏற்படுத்தும் பணிகளில் மட்டுமன்றிப் பொருளாதார உறுதிப்பாட்டினை ஏற்படுத்தும் வகையில் பேரினப் பொருளாதாரத் தொழிற்பாடுகளிலும் ( Macro economic function) அரசாங்கம் ஈடுபடுகிறது. முதலாளித்துவ முறைமையானது காலத்திற்குக்காலம் பணவீக்கம், வேலையின்மை , மந்தநிலை போன்றவற்றினால் பாதிக்கப்படுகிறது. 1930 களில் ஏற்பட்ட உலகப் பொதுமந்தம் இதற்கு நல்ல ஒரு உதாரணமாகும் இதனின்றும் விடுபடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அப்போதைய அரசியல் தலைவர்களால் முடியவில்லை. ஏனெனில் அவர்களுக்குப் பொருளாதாரம் பற்றிச் சரியான விளக்கம் இருந்திருக்கவில்லை. ஆனால் ஜே.எம்.கெயின்ஸ் அவர்களும், அவரின் வழிவந்தவர்களும் வழங்கிய பொருளியச் சிந்தனைகளின் விளைவாக இன்று வர்த்தக சகடவோட்டத்தினைக்

கட்டுப்படுத்தும் வகையில் பொருளாதாரம் பற்றிச் சரியான விளக்கம் ஏற்பட்டுள்ளது. அரசாங்கங்கள் தமது நாணயக் நடைமுறைக் கொள்கை (Monetary Policy). இறைக் கொள்கை (Fiscal Policy) என்பவற்றை அவதானமான முறையில் பயன்படுத்துவதனூடாக நாட்டின் உற்பத்தி மட்டம், வேலைவாய்ப்பு, பணவீக்கம் என்பவற்றில் அரசாங்கம் செல்வாக்குச் செலுத்தக்கூடியதாக இருக்கிறது. நாட்டின் நாணயமுறை, வங்கிமுறை என்பவற்றை ஒழுங்கு படுத்துதல், அவ்வாறு செய்வதன் மூலம் நாட்டின் வட்டி வீதத்தையும், கொடுகடன் நிலைமையையும் தீர்மானித்தல் என்பன நாணய நடைமுறைக் கொள்கையில் இடம் பெறும் விடயங்களாகும் வரி விதித்தல், செலவீட்டினை மேற்கொள்ளல் என்பன அரசாங்கத்தின் இறைக் கொள்கையில் உள்ளடங்குகின்றன. இத்தகைய இரண்டு பிரதான பேரினப் பொருளியல் கொள்கைக் (Macro economic policy) கருவிகளின் ஊடாக அரசாங்கம் ஒரு பொருளாதாரத்தின் வெளியீடு, வேலைவாய்ப்பு, விலைமட்டம் என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது.

முடிவுரை

இவ்வாறு பொருளாதாரத்தில் திறமை, சமத்துவம், உறுதிப்பாடு என்ற மூன்று அம்சங்களையும் ஏற்படுத்தும் பணிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. சந்தைப் பொறிமுறையானது விலைகளையும், உற்பத்திகளையும் தீர்மானிக்கும் போது அரசாங்கமானது தனது வரி, அரசாங்க செலவு, ஏனைய கட்டுப்பாடுகள் என்பவற்றினூடாக சந்தையை ஒழுங்குபடுத்துகிறது. இந்தவகையில் ஒரு பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் தலையீடு முக்கியமானதொன்றாகக் காணப்படுகிறது.

✧✧✧

# திறந்த பொருளாதாரக் கொள்கையும் இலங்கையும்

செல்வன்.சி. சிறீதரன்
ஆண்டு 12C

இலங்கை தனது பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு காலத்திற்குக் காலம் பல்வேறு கொள்கைகளை அமுலாக்கம் செய்து வந்துள்ளது. நெருக்கடி நிலமைகளுக்குத் தீர்வு காணும் வேறுபட்ட யுக்திகளில் ஒன்றாக இத் திறந்த பொருளாதாரக் கொள்கை அமைகின்றது. இது ஒரு வெளி நோக்கியதும் உலக பொருளாதாரத்துடன் இலங்கையின் பொருளாதாரத்தை இணைக்கும் ஒரு முயற்சியாகவும் அமைந்தது. அரசாங்கத்தின் உற்பத்தி முயற்சிகளை குறைப்பதன் மூலமாக தனியார் உற்பத்தி முயற்சிகளை ஊக்குவித்து சந்தைச் சக்திகளின் வழியாக வளங்களை ஒதுக்கீடு செய்தல் என்ற பொருளாதார தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இது ஒரு அரசாங்க மாற்றத்துடன் பின்னிப் பிணைந்த ஒன்றாகவுள்ளது. இக் கொள்கை இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஒரு விடிவா? அல்லது முடிவா? என்ற வாதப் பிரதிவாதம் இன்று வரை ஓயவில்லை. திறந்த பொருளாதாரக் கொள்கை சிறப்பாக இயங்கக் கூடிய வகையில் ஏற்ற சீர் திருத்தங்களையும் மேற் கொள்ள வேண்டி இருந்தது. இறக்குமதி கட்டுப் பாடுகள் நீக்கம். அக் கட்டுப்பாடுகளின் சீராக்கம் இரட்டை நாணய மாற்று வீத நீக்கம் மாற்றத் தக்க ரூபா கணக்கு முறை நீக்கம் மிதக்க விடப் பட்ட நாணய மாற்றுவீத அறிமுகம். விலைக் கட்டுப்பாடுகள் நீக்கம், பங்கீட்டு முறைகள் அகற்றல், வெளி நாட்டு வங்கிக் கிளைத் திறப்பு முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள், வெளிநாட்டு முதலீட்டைக் கவருதல் போன்ற பல நட வடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்கு ஏற்ற வகையில் நிதியமைப்பு, நிதிச்சந்தை பணச் சந்தை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன.

தாராள மயமாக்கல் கொள்கை அறிமுகப் படுத்தப் பட்டதும் அதனைச் சீராக்குவதற்கான செலவுகளும் அதிகரித்துச் சென்றன. நுட்பவகைத் திறனுள்ள ஊழியப் பற்றாக் குறை, முகாமைத்துவ திறன் கொண்டவர்கள் குறைவாக இருந்தமை. நிறுவன அமைப்புக்கள் போதிய அளவிற்கு திறந்த பொருளாதாரக் கொள்கையை நெறிப்படுத்த முடியாமை. நிறுவன வளர்ச்சி குறைவாக இருந்தமை. தேசிய ரீதியில் நெறிப் படுத்துவதில் இருந்த சிக்கல்கள், அரசியல் எதிர்தாக்கல்கள் போன்றவை இக் கொள்கையின் சிறப்பானசெயற்பாட்டிற்கான தடைகளாக இருந்தன. சடுதியாக மேற்கொள்ளப்பட்ட இக் கொள்கை மாற்றத்தை ஜீரணித்துக் கொள்வதில் இலங்கை திக்கு முக்காடியது உண்மையே.

1977 - 1990 வரையாக காலத்தை எடுத்து ஆராயின் மெய் ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி சராசரி 4.8% ஆக அமைந்துள்ளது முன்னைய ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் இதுஉயர்வானதே 1970 - 1977 க்கு இடையில் சராசரி வளர்ச்சி நிலை 2.5 - 3.5% இடையே தான் இருந்துள்ளது. நிக் (NIC) நாடுகளின் வளர்ச்சியோடு ஒப்பிடுகையில் இலங்கையின் வளர்ச்சி வீதம் குறைவேயாகும். அந் நாடுகளில் இக் கொள்கை மாற்றம் கைத் தொழில் துறையில் 6% - 9% வளர்ச்சியைக் காட்டியுள்ளது. இலங்கையில் ஏற்பட்ட இவ் வளர்ச்சியும் கூட கைத் தொழிலில் இருந்தும் சேவைகள் துறையில் இருந்தும் எடுத்த ஒரு வளர்ச்சியாகவே இருக்கிறது.

பின் வரும் அட்டவணை துறைசார்ந்த வளர்ச்சிப் போக்கினை 1970 - 1990க்கு இடையே காட்டுகின்றது.

| துறைகள் | சராசரி வளர்ச்சி வீதம் |
|---|---|

| | |
|---|---|
| விவசாயம் கட்டுத் தொழில் | 3.6% |
| மீன்பிடி விவசாயம் | 3.8% |
| பெருந் தோட்ட விவசாயம் | 1.3% |
| பெருந்தோட்டமல்லா விவசாயம் | 5.2% |
| தயாரிப்புத் தொழில் | 5.3% |
| சேவைகள் துறைகள் | 5.4% |
| பண்ட உற்பத்திகள் | 4.3% |

மொத்த உள் நாட்டு மூலதன ஆக்கம் இக்காலப் பகுதியில் வளர்ந்துள்ளது. 1970-77க்கு இடையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 10% ஆக இருந்த மூலதன ஆக்கம் 78 - 90 காலப் பகுதியில் 25.5% அமைந்துள்ளது. வெளிநாட்டு நேரடி முதலீடுகள் இதற்குப் பிரதான காரணமாகும். விலை வீக்கம் இக் காலப் பகுதியில் மிக வேகமாக அதிகரித்துள்ளது. உலகப் பொருளாதாரத்தோடு இலங்கைப் பொருளாதாரம் இணைக்கப் பட்டமையால் உலக வீக்க நிலமைகள் இலங்கையினுள் தாக்கம் செய்துமுள்ளன என்பதும் உண்மையாகும் . குறை நிலைப் பதிலீடுகளின் தாக்கம், விலைக்கட்டுப் பாடுகளின் நீக்கம் தேசிய மறை முக வரி அதிகரிப்பு, போன்றவை விலை வீக்கத்திற்குக் காரணமாகும். சாதாரணமாக எதிர் பார்க்கக் கூடியதற்கு மேலதிகமாக சராசரி 14% மாக இது அமைந்துள்ளது. ஆயினும் பாரிய முதலீட்டுத் திட்டங்களை அறிமுகப் படுத்துகின்ற போது விலை வீக்கம் தவிர்க்க முடியாத ஒரு நிலையாகவும் அமைந்து விடுகின்றது. என்பது உண்மையாகும். ஒரு வெற்றியை தாராளக் கொள்கை மேற் கொண்டது எனக் கூற முடியாது.

வருமானப் பங்கீடு வறுமை என்பவை ஒரு பாதகமான போக்கையே வெளிப் படுத்தியுள்ளன. இக் காலங்களில் கணிக்கப் பட்ட கினிக் குணகம் இதனை வெளிப் படுத்துகின்றது. 1953, 1963, 1973, 1978, 1979 காலப் பகுதியில் கினிக் குணகம் முறையே 0.50, 0.49, 0.41, 0.49 என்ற வகையில் இருந்தது. 1985, 86ல் இக் குணகம் 0.59 ஆக அமைந்துள்ளது. தாராள பொருளாதாரக் கொள்கை பொருளாதார அபிவிருத்தியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ள போதிலும் எதிர்பார்த்த வெற்றியை அளிக்க வில்லை. கைத்தொழில் முயற்சியாளர் வர்க்கம் ஒன்றை உருவாக்குவதில் இக் கொள்கை பெருமளவில் முன்னேற்றத்தைக் காட்டவில்லை. சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்பு அதிகம் இல்லாத சேவைகள், துறைகளில் சுமாரான வளர்ச்சியைக் காட்டியுள்ளது. காரணிகளை ஒதுக்கீடு செய்வதில் ஒரு சமமான தன்மை இல்லை என்பதை இது காட்டுகின்றது. ஏற்றுமதி நிலுவையின் குறைநிலை அதிகரித்துச் சென்றன. வீக்க நிலமை, வேலை இன்மை அதிகரிப்பு, அரசுக்குரிய வருமானத்தை திரட்டமுடியாமை போன்ற சூழ் நிலைகள் இக் கொள்கையின் செயற்திறனைப் பாதித்துள்ளன.

✧✧✧

மத்திய வணிகம் சிறக்க
நல்வாழ்த்துக்கள்

வீடியோ படத்துறையில் அனுபவம் மிக்க முன்னோடிகளான தொழில் நுட்பம் மிக்க வீடியோ கலப்பு (MIXING) W - J -MX 50 - 287 மாதிரி வடிவங்களில் உங்கள் விருப்பத்திற்கேற்ப சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்து தருபவர்கள்

# புலவர் வீடியோ

கோண்டாவில் வடக்கு
கோண்டாவில்

EVERY SUCCESS AND PROSPERITY BE YOURS

# LINGAM BAKE HOUSE

555 NAVALAR ROAD
JAFFNA

மத்தியின் வணிகம் சிறக்க நல்
வாழ்த்துக்கள்.

தரன் ஸ்ரூடியோ

றபர் சீல்

*189 மின்சாரநிலைய வீதி*
*யாழ்நகர்.*

**EVERY SUCCESS AND**
**PROSPERITY BE YOURS**

**THIRUPATHY**
**TEX**

**33 NEWMARKET**
**JAFFNA**

மத்தியின் வணிகம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

அபிராமி நகை மாடம்

தங்கப்பவுண் நகை வியாபாரம்
220 சந்தோசம் தெரு
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

ABIRAMY JEWELLERS

220 A, Santhosam Road,(Kasthuriar Road), JAFFNA.

# இ.ச. பேரம்பலம் சக நிறுவனம்

50 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

லுமாளா ஏசியா துவிச்சக்கரவண்டிகள் அதன் உதிரிப்பாகங்களும் பெயின்ற் மற்றும் பல் பொருள் வாணிபம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

# RAJU STORES

**Dealers In:**

Fancy Goods, Presentation Articles, Electrical Goods,Stainless Steel Wares, Glass, Enamal & Aluminium Wares,Statinless steel wares, Glass, Enamal & Aluminium Wares, Stationeries, Groceries, Oilman Good, Sports Goods, Readymade- Garments, Rice Huller, Grinder &Spare Parts, Essences, Fruit Drinks & Sundries Etc, Etc.

**"Raju Building", 67, 69 Kasthuriar Road, JAFFNA.**
**Phone: 22372. Grams: "RAju"**

மத்தியின் வணிகம் சிறக்க நல் வாழ்த்துக்கள்

## தங்கத் தொலைக்காட்சி வாணிப நிறுவனம்.

2, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

# அளவையியல் விடயங்கள்

1. செல்வன்.தி.நடனசபேசன்.
2. செல்வன்.இ.பார்த்தீபன்.
3. செல்வன்.இ.சசிக்குமார்

## வென் வரைபடம்.

செல்வன். தி. நடனசபேசன்
ஆண்டு 12C

எடுப்புகளில் வரும் எழுவாய் வகுப்புக்கும் பயனிலை வகுப்புக்கும் இடையிலான தொடர்புகளை விளக்குவதற்கு என சேர்.ஜோன்.வென் என்பவரால் வரைந்து காட்டப்பட்ட படமே வென்வரைபடமாகும்.

சேர்.ஜோன்.வென் என்பவர் ஆங்கிலேய நாட்டைச் சேர்ந்த ஓர் அளவையியல் அறிஞரும் கணித அறிஞரும் ஆவார். இவர் ஓயிலரின் வரை படத்திலுள்ள சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அதனை நீக்கும் வகையில் தெளிவான படத்தை அமைத்துத் தந்தார்.

இவ் வரைபடம் பின்வரும் இரு வழிகளில் பாரம்பரிய அளவையியலில் முக்கியத்துவம் பெறுகிறது.
1.எடுப்புகளில் வரும் எழுவாய் வகுப்பிற்கும் பயனிலை வகுப்பிற்கும் இடையிலான தொடர்புகளைக் காட்டுவதற்கு
2.நியாயத் தொடை வாதங்களின் வாய்ப்பினை வென்வரைபட உதவியால் மதிப்பீடு செய்வதற்கு.

### எழுவாய் வகுப்பிற்கும் பயனிலை வகுப்பிற்கும் இடையிலான தொடர்புகளை வென்வரைபடத்தில் காட்டுவதற்கான சில குறிப்புக்கள்




1. நீள் சதுரம் ஒன்றினை வரைந்து அதனுள் ஒன்றை ஒன்று வெட்டக்கூடியவாறு இரண்டு வட்டங்கள் வரைதல் வேண்டும். அவற்றிற்கு A, B எனப் பெயர்குறித்தல் வேண்டும். A எழுவாய் வகுப்பையும் B பயனிலை வகுப்பையும் குறிக்கும்.
2. இப்பட அமைப்பு முழுவதும் U எனும் எழுத்தினால் குறிக்கப்படும் இதன் பொருள் உலகமுழுமை அல்லது அகிலத்தொடை ஆகும்.
3. இப்பட அமைப்பில் நான்கு பகுதிகள் காணப்படும்
அவையாவன AB, AB, AB, AB

4. இப்பட அமைப்பில் உள்ள நான்கு பகுதிகளில் ஏதேனும் ஒரு பகுதியில் ஒன்றிற்கு மேற்பட்ட பகுதிகள் சமாந்தரக் கோடுகளால் நிறந்தீட்டப்பட்டிருப்பதால் அவை வெற்று வகுப்புக்கள் ஆகும்.

5. இப்பட அமைப்பில் உள்ள நான்கு பகுதிகளில் ஏதேனும் ஒரு பகுதியில் ஒன்றிற்கு மேற்பட்ட பகுதியில் புள்ளடிகள் இடப்பட்டிருக்குமாயின் அவை வெற்று அல்லாத வகுப்புக்கள் எனப்படும்.

வெவ்வேறு வகையான எடுப்புகளுக்குரிய வென்னின் வரை படங்கள்

1. A எடுப்பு (நிறைவிதி எடுப்பு)

உ.ம் :- எல்லா நாய்களும் குரைப்பன ஆகும்.




A - நாய்கள் வகுப்பு

B - குரைப்பன வகுப்பு

$A\bar{B} = \phi$

2. E எடுப்பு (நிறைமறை எடுப்பு)

உ.ம் :- எந்த நாய்களும் குரைப்பன அல்ல.




U

A - நாய்கள் வகுப்பு

B - குரைப்பன வகுப்பு

$AB = \phi$

3. I எடுப்பு (குறைமறை எடுப்பு)

உ.ம் :- சில நாய்கள் குரைப்பன ஆகும்.

~~$AB = \phi$~~




U

A - நாய்கள் வகுப்பு

B - குரைப்பன வகுப்பு

$\bar{A}B = \phi$

$AB \neq \phi$

4. O எடுப்பு (குறை மறை எடுப்பு)

உ.ம் :- சில நாய்கள் குரைப்பன அல்ல




U

A - நாய்கள் வகுப்பு

B - குரைப்பன வகுப்பு

$A\bar{B} \neq \phi$

குறிப்பு :- A,E,I,O எனும் நான்கு வகை எடுப்புக்களுக்குமான வென்வரைபட வடிவத்தை

ஞாபகத்தில் வைத்திருக்கும் முறை வருமாறு.




(அ) A, E எடுப்புக்களின் வகுப்புக்கள் சமாந்தரக் கோட்டினால் காட்டப்படல் வேண்டும்.

(ஆ) I,O எடுப்புக்களின் வகுப்புக்கள் புள்ளடியினால் காட்டப்படல் வேண்டும்.

(இ) எடுப்புக்களுக்கு நடுப்பகுதியில் (AB பகுதி) அங்கத்தவங்கள் காட்டப்படல் வேண்டும்.

(ஈ) எடுப்புக்களுக்கு முன் பகுதியில் (AB பகுதி) அங்கத்தவங்கள் காட்டப்படல் வேண்டும்.

5. முழுவதும் மட்டுப்படுத்தப்பட்ட எடுப்பு

உ.ம் :- நாய்கள் மட்டுமே குரைப்பன ஆகும்.

I ~~நாய்கள் குரைப்பன ஆகும்.~~ குரைப்பன எல்லாம் நாய்களாகும்

II நாய்களைத் தவிர பிறிதெதுவும் குரைப்பன அல்ல.

III நாய்கள் ஆயினே குரைப்பன ஆகும்.




A- நாய்கள் வகுப்பு

B- குரைப்பன வகுப்பு

$\bar{A}B = \phi$

6.ஒரு பகுதி மட்டுப்படுத்தப்பட்ட எடுப்பு

உ.ம் :- சில நாய்கள் மட்டுமே குரைப்பன ஆகும்.




A- நாய்கள் வகுப்பு

B- குரைப்பன வகுப்பு

$AB \neq \phi$ உம், $\bar{A}B = \phi$ உம்,

7. புறநடை A எடுப்பு

இவ் எடுப்பின் இயல்புகள்

1. எழுவாய் வகுப்பும் பயனிலை வகுப்பும் சமானாகும்.
2. எழுவாயும் பயனிலையும் வியாத்தி உடையது.

உ.ம் :-

1. எல்லா மனிதரும் பகுத்தறிவுடையவர் ஆவார்.
2. எல்லா மனிதரும் பகுத்தறிவுடையவர் என்பதோடு பகுத்தறிவுடையவர் எல்லோரும் மனிதர் ஆவார்.
3. மனிதர் ஆயின் ஆயினே பகுத்தறிவுடையவர் ஆவார்.




A- மனிதர் வகுப்பு

B-பகுத்தறிவுடையவர் வகுப்பு

$A\bar{B} = \phi$ உம் $\bar{A}B = \phi$ உம்

8. தனிவிதி எடுப்பு

உ.ம் :- ராதா நடிகை




A- நடிகை வகுப்பு
X- ராதா
$X \in A$

9. தனிமறை எடுப்பு

உ.ம் :- ராதா நடிகை அல்ல.




A- நடிகை வகுப்பு
X- ராதா
$X \notin A$

நியாயத் தொடை வாதங்களின் வாய்ப்பினை வென்வரைபட உதவியால் மதிப்பிடல்.

(இதை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கலாம்)

உ.ம் :-

எல்லா (மலர்களும்) (அழகானவை) ஆகும் - நிறைவிதி A எடுப்பு
(ரோஜாக்கள்) எல்லாம் (மலர்கள்) ஆகும் - நிறைவிதி A எடுப்பு
ஆகவே (ரோஜாக்கள்) எல்லாம் (அழகானவை) ஆகும் :- நிறைவிதி (A) எடுப்பு.

இந்நியாயத்தொடையில் உள்ள மூன்று பதங்களும் A,B,C எனும் எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ளன. இம்மூன்று (A) எடுப்புக்களுக்கான சுருக்கத்திட்டமும், குறியீட்டு ஆக்கமும் வருமாறு.

சுருக்கத்திட்டம்
A- மலர்கள் வகுப்பு
B- அழகானவை வகுப்பு
C - ரோஜாக்கள் வகுப்பு

குறியீட்டாக்கம்
$A\bar{B} = \phi$
$C\bar{A} = \phi$
$C\bar{B} = \phi$

இவ் வாதத்திற்கான வென்வரை படம் வருமாறு.




வாதம் வாய்ப்பானதாகும். ஏனெனில் $C\bar{B} = \phi$ என்பதை வரைபடம் தெளிவாக பிரதிபலித்துள்ளது.

வாய்ப்பானதா வாய்ப்பற்றதா என்பதை துணிவதற்கான விளக்கம் நியாயத் தொடையின் எடுகூற்றுக்களுக்கு வரையப்படும் வென்வரைபடமானது முடிவு கூற்றைப் பிரதிபலித்தால் அது வாய்ப்பான வாதமாகக் கொள்ளப்படும். மாறாக நியாயத் தொடையின் எடு கூற்றுக்களுக்கு வரையப்படும் வெண் வரைபடமானது முடிவு கூற்றை பிரதி பலிக்க வில்லை ஆயின் அல்லது சந்தேக மானதாகக் காணப்பட்டால் அது வாய்ப்பற்ற வாதமாகக் கொள்ளப்படும்.

# தூய அறுதி நியாயத் தொடை விதிகள்.

செல்வன்.இ.பார்த்தீபன்
ஆண்டு 12C

மூன்று கூற்றுக்களையும் அறுதி எடுப்பாக கொண்டமைந்த நியாயத்தொடையே தூய அறுதி நியாயத்தொடை ஆகும். அதாவது பேரெடு கூற்றையும், சிற்றெடு கூற்றையும் முடிவு கூற்றையும் அறுதி எடுப்புகளாகக் கொண்டமைந்த நியாயத் தொடையே தூய அறுதி நியாயத்தொடை ஆகும். தூய அறுதி நியாயத்தொடை வாதம் ஒன்று வாய்ப்பானதாக அமைய வேண்டுமாயின் சில விதிகளைப் பின்பற்ற வேண்டும். இவ் விதிகள் அளவையியலில் "தூய அறுதி நியாயத்தொடை விதிகள்" எனப்படும். இவ்விதிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது மீறப்படுமாயின் அவ்வாதம் வலிதற்றதாகிறது. எனவே தூய அறுதி நியாயத் தொடை வாதங்களின் வாய்ப்பினை மதிப்பிடுவதற்கு தூய அறுதி நியாயத்தொடை விதிகள் உண்டு. இவற்றுள் பிரதான விதிகள் ஆறும் கிளை விதிகள் மூன்றும் ஆக மொத்தம் ஒன்பது விதிகள் உண்டு. இவ்விதிகளிள் ஒன்பதும் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| (அ) அமைப்பு பற்றிய விதிகள் | ......................... | 2 |
| (ஆ) அளவு பற்றிய விதிகள் | ......................... | 2 |
| (இ) பண்பு பற்றிய விதிகள் | ......................... | 2 |
| பிரதான விதிகள் | ......................... | 6 |
| (ஈ) கிளை விதிகள் | ......................... | 3 |
| மொத்த விதிகள் | ......................... | 9 |

(அ) அமைப்பு பற்றிய விதிகள் :-

1ம் விதி "தூய அறுதி நியாயத்தொடை ஒன்றில் மூன்று பதங்கள் மட்டுமே இருத்தல் வேண்டும்." அதாவது சிறுபதம், மத்தியபதம், பெரும்பதம் என மூன்று பதங்கள் இருத்தல் வேண்டும்.இப் பதங்கள் ஒவ்வொன்றும் இரண்டு இடங்களில் வருதல் வேண்டும். மாறாக மூன்று பதங்களுக்கு மேலாக காணப்படுமாயின் மேற் கூறிய விதி மீறப்பட்டு நாற்பத போலி ஏற்பட்டு வாதம் வாய்ப்பற்றதாகிறது. சிறுபதம் என்றால் முடிவு கூற்றின் எழுவாயாகும். பெரும்பதம் என்றால் முடிவு கூற்றின் பயனிலையாகும். மத்தியபதம் என்றால் எடு கூற்றுகளில் காணப்படும் பொதுவான அம்சமாகும்.

உதாரணம் :-

எல்லா மலர்களும் மொட்டில் இருந்து வருவன ஆகும்.
எல்லா மொட்டுக்களும் மரத்தில் இருந்து வருவன ஆகும்.
ஆகவே எல்லா மலர்களும் மரத்தில் இருந்து வருவன ஆகும்.

இவ்வாதத்தில் மலர்கள், மொட்டுக்கள்,மொட்டில் இருந்து வருவன, மரத்தில் இருந்து வருவன என்னும் நான்கு பதங்கள் காணப்படுவதால் மேற்கூறிய விதி மீறப்பட்டு நாற்பதப் போலி ஏற்பட்டு வாதம் வாய்ப்பற்றதாகிறது.

2ம் விதி

"தூய அறுதி நியாயத்தொடை ஒன்றில் மூன்று கூற்றுக்கள் இருத்தல் வேண்டும்." அதாவது பேரெடு கூற்று, சிற்றெடு கூற்று, முடிவுகூற்று என்னும் மூன்று கூற்றுக்கள் காணப்பட வேண்டும். பேரெடு கூற்றானது பெரும்பதத்தையும், மத்திய பதத்தையும் கொண்டமைந்தது. சிற்றெடு கூற்றானது சிறுபதத்தையும், மத்திய பதத்தையும் கொண்டமைந்துள்ளது. முடிவுக் கூற்றானது சிறுபதத்தையும், பெரும் பதத்தையும் கொண்டு அமைந்தது ஆகும். மாறாக மூன்று கூற்றுக்கள் இல்லாது இருக்குமாயின் மேற்கூறிய விதி மீறப்பட்டு வாதம் வலிவற்றதாகும்.

உதாரணம் :- பறவைகள் எல்லாம் பறப்பவை ஆகும். காகம் ஒரு பறவை ஆகும். ஆகவே பறவைகள் எல்லாம் பறக்கும்.

இவ்வாதத்தில் இரண்டு கூற்றுக்கள் மட்டுமே உள்ளன. எனவே மேற்கூறிய விதி மீறப்பட்டு வாதம் வாய்ப்பற்றதாகிறது.

(ஆ) அளவு பற்றிய விதிகள் :-

3ம் விதி "எடு கூற்றுக்களில் ஒன்றிலாயினும் மத்திய பதம் வியாப்தி அடைந்து இருத்தல் வேண்டும்." எனவே எடு கூற்றுக்கள் இரண்டிலும் மத்தியபதம் வியாப்தி அடையாது இருக்குமாயின் மேற்கூறிய விதி மீறப்பட்டு மத்தியபதம் வியாப்தி அடையாப் போலி ஏற்பட்டு வாதம் வாய்ப்பற்றதாகிறது.

உதாரணம் :- எல்லா நாய்களும் பாலூட்டிகள் ஆகும்.

எல்லா குதிரைகளும் பாலூட்டிகள் ஆகும்.

ஆகவே எல்லா குதிரைகளும் நாய்கள் ஆகும்.

மேற்கூறிய வாதத்தில் எடு கூற்றுக்கள் இரண்டிலுமே பாலூட்டிகள் என்ற மத்தியபதம் வியாப்தி அடை யவில்லை. எனவே இங்கு மேற்கூறிய விதி மீறப்பட்டு மத்தியபதம் வியாப்தி அடையாப்போலி ஏற்பட்டு வாதம் வாய்ப்பற்றதாகிறது.

4ம் விதி

"எடு கூற்றில் வியாப்தி அடையாத எப்பதமும் முடிவு கூற்றில் வியாப்தி அடையக்கூடாது." இவ்விதியானது பின்வரும் இரண்டு விடயங்களை உள்ளடக்கியது ஆகும்.

(1) சிற்றெடு கூற்றில் வியாப்தி அடையாத சிறுபதம் முடிவுகூற்றில் வியாப்தி அடையக்கூடாது.

உதாரணம் :- எல்லா மலர்களும் அழகானவை ஆகும்.

மென்மையானவை சில மலர்கள் ஆகும்.

ஆகவே மென்மையானவை எல்லாம் அழகானவை ஆகும்.

இவ்வாதத்தில் மென்மையானவை என்னும் சிறுபதம் எடுகூற்றில் வியாப்தி அடையாது முடிவுகூற்றில் வியாப்தி அடைந்துள்ளது. எனவே மேற்கூறிய விதி மீறப்பட்டு சிறுபத சட்ட விரோதப்போலி ஏற்பட்டு வாதம் வாய்ப்பற்றதாகிறது.

(2) "பேரெடு கூற்றில் வியாப்தி அடையாத பெரும்பதம் முடிவுகூற்றில் வியாப்தி அடையக்கூடாது."

உதாரணம் :- சில குதிரைகள் கொம்புடையவை ஆகும்.

எந்த முயல்களும் கொம்புடையவை அல்ல.

ஆகவே எந்த முயல்களும் குதிரைகள் அல்ல

இவ்வாதத்தில் குதிரைகள் என்னும் பெரும்பதம் பேரேடு கூற்றில் வியாப்தி அடையாது முடிவுகூற்றில் வியாப்தி அடைந்துள்ளது. எனவே மேற்கூறிய விதி மீறப்பட்டு பெரும்பத சட்ட விரோதப் போலி ஏற்பட்டு வாதம் வாய்ப்பற்றதாகிறது.

(இ) பண்பு பற்றிய விதிகள் :-

5ம் விதி "எடு கூற்றுக்களில் ஒன்றேனும் விதி எடுப்பாக இருத்தல் வேண்டும்." அதாவது எடு கூற்றுக்கள் இரண்டுமே மறை எடுப்பாக இருத்தல் கூடாது. மாறாக மறை எடுப்பாக அமையுமாயின் மேற்கூறிய விதி மீறப்பட்டு இரு எதிர்மறை எடு கூற்றுப் போலி ஏற்படும்.

உதாரணம் :- மலர்கள் எவையும் அழகானவை அல்ல.

ரோஜா எவையும் மலர்கள் அல்ல

ஆகவே எல்லா ரோஜாக்களும் மலர்கள் ஆகும்.

இவ்வாதத்தில் எடு கூற்றுக்கள் இரண்டுமே மறை எடுப்பாக அமைந்துள்ளதால் மேற்கூறிய விதி மீறப்பட்டு இரு எதிர்மறை எடுகூற்றுப்போலி ஏற்பட்டு வாதம் வாய்ப்பற்றதாகிறது. எனவே இரு மறையான வாதத்தில் இருந்து எதுவித முடிவினையும் அனுமானிக்க முடியாது.

6ம் விதி

"எடு கூற்றுக்களில் ஒன்று மறையாய் அமையும் போது அதன் முடிவும் மறையாய் அமைதல்

வேண்டும்." அதாவது எடுகூற்றுக்களில் ஒன்று மறையாய் உள்ளபோது முடிவுகூற்று விதியாய் அமையுமாயின் மேற்கூறிய விதி மீறப்பட்டு விதி முடிவு எதிர்மறை எடுகூற்றுப்போலி ஏற்பட்டு வாதம் வாய்ப்பற்றதாகிறது.

உதாரணம் :- எந்த கனிகளும் இனிப்பவை அல்ல.

எல்லா மாம்பழங்களும் இனிப்பவை ஆகும்.

ஆகவே எல்லா மாம்பழங்களும் கனிகள் ஆகும்.

இவ்வாதத்தில் பேரெடு கூற்று மறையாய் அமைந்துள்ள அதேவேளை முடிவுகூற்று விதியாய் அமைந்துள்ளது. எனவே இங்கு மேற்கூறிய விதி மீறப்பட்டு விதி முடிவு எதிர்மறை எடுகூற்றுப் போலி ஏற்பட்டு வாதம் வாய்ப்பற்றதாகிறது.

(ஈ) கிளை விதிகள்

நியாயத் தொடையின் பிரதான விதிகளில் இருந்து பெறப்பட்ட விதிகளே கிளைவிதிகள் ஆகும்.

7ம் விதி

" இரு குறை எடுகூற்றுக்களில் இருந்து வாய்ப்பான முடிவு எதனையும் அனுமானிக்க முடியாது." இக் குறை எடுகூற்றுக்களைக் கொண்ட நியாயத்தொடை பின்வருமாறு நான்கு வடிவில் அமையும்.

| | (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| பேரேடு கூற்று:- | I | O | I | O |
| சிற்றெடு கூற்று:- | I | O | O | I |

(1)எடுகூற்றுக்கள் இரண்டும் I -எடுப்பாக அமையுமாயின் வியாப்தி அடையாத நடுப்பதப்போலி ஏற்பட்டு வாதம் வலிவற்றதாகிறது. எனவே இக்குறை எடுகூற்றுக்களில் இருந்து வலிதான முடிவு எதனையும் அனுமானிக்க முடியாது.

(2) எடு கூற்றுக்கள் இரண்டும் O எடுப்பாக அமையுமாயின் எடு கூற்றுக்களில் ஒன்றேனும் விதி எடுப்பாக அமைதல் வேண்டும் என்னும் விதி மீறப்பட்டு இரு எதிர்மறை எடுகூற்றுப் போலி ஏற்படும் இதனால் வலிதான முடிவு எதனையும் அனுமானிக்க முடியாது.

(3)மூன்றாது நிலையின் படி I,O என எடுகூற்றுக்கள் அமையுமாயின் பேரேடு கூற்றில் வியாப்தி அடையாத பெரும்பதம் முடிவுகூற்றில் வியாப்தி அடைந்து காணப்படும் இதனால் "எடு கூற்றில் வியாப்தி அடையாத எப்பதமும் முடிவுகூற்றில் வியாப்தி அடையக்கூடாது" என்றும் விதி மீறப்பட்டு பெரும்பத சட்ட விரோதப் போலி ஏற்படும் இதனால் வலிதான முடிவை அனுமானிக்க முடியாது.

(4) நான்காவது நிலையின்படி O I எடு கூற்றுக்கள் அமையுமாயின் எடு கூற்றில் மொத்தமாக ஒரு பதம் மட்டுமே வியாப்தி அடைந்து காணப்படும் வியாப்தி அடைந்த அப்பதம் பேரேடு கூற்றில் அமைவதால் அது மத்திய பதமாகவோ அல்லது பெரும்பதமாகவே அமையலாம். அப்பதம் மத்திய பதமாக அமையுமாயின் பெரும்பத சட்ட விரோதப் போலி ஏற்படும். பெரும்பதமாக அமைந்தால் மத்திய பதம் வியாப்தி அடையாப் போலி ஏற்படும். இதனால் இச் சேர்க்கையில் இருந்து வலிதான முடிவு எதனையும் அனுமானிக்க முடியாது.

8ம் விதி

" எடு கூற்றுக்களில் ஒன்று குறையாய் அமையுமாயின் அதன் முடிவும் குறையாய் அமைதல் வேண்டும்". எடு கூற்றுக்களில் ஒன்று குறையாய் அமையுமாயின் பின்வருமாறு எட்டு வடிவங்களில் காணப்படும்.

| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|---|---|---|---|---|
| பேரேடு கூற்று :- | A | I | E | O | A | O | E | I |
| சிற்றெடு கூற்று :- | I | A | O | E | O | A | I | E |

(1) முதலாம் இரண்டாம் நிலைகளின்படி (AI,IA) எடுகூற்றுக்கள் அமையுமாயின் எடுகூற்றுகக்ளில்

ஒரு பதம் மட்டுமே வியாப்தி அடைந்துள்ளது அது மத்திய பதமாக இருத்தல் வேண்டும் இல்லாவிடில் மத்தியபதம் வியாப்தி அடையாப்போலி ஏற்படும். வியாப்தி அடைந்த பதம் மத்திய பதம் எனக் கொண்டால் சிற்றெடு கூற்றில் சிறுபதம் வியாப்தி அடைந்திராது. இந்நிலையில் முடிவுகூற்று நிறையாக அமைந்தால் சிறுபதம் வியாப்தி அடைந்து இருக்கும். இதனால் சிறுபத சட்டவிரோதப்போலி ஏற்படும் இந்நிலையைத் தவிர்ப்பதற்கு முடிவுகூற்றை குறையாய் அமைத்தல் வேண்டும்.

(2) EO ,OE என கூற்றுக்கள் அமையுமாயின் எடுகூற்றுக்களில் ஒன்றேனும் விதி எடுப்பாக இருத்தல் வேண்டும் என்னும் விதி மீறப்பட்டு எதிர்மறை எடுகூற்றுப்போலி ஏற்படும்.

(3) AO,OA,IE என எடு கூற்றுக்கள் அமையுமாயின் முடிவுகூற்று குறையாய் அமைதல் வேண்டும். ஏனெனில் எடுகூற்றுக்களில் ஒன்று மறையாய் அமையுமாயின் முடிவுகூற்று மறையாய் அமைதல் வேண்டும். முடிவுகூற்று மறையாய் அமையுமாயின் பெரும்பதம் வியாப்தி அடைந்து காணப்படும்.இந்நிலையில் எடுகூற்றில் மொத்தமாக இரண்டுபதம் மட்டுமே வியாப்தி அடைந்துள்ளது. இதில் ஒன்று பெரும்பதமாக அமைதல் வேண்டும் மற்றையது மத்திய பதமாக இருத்தல் வேண்டும் இல்லையேல் பெரும்பத சட்ட விரோதப்போலி, மத்தியபதம் வியாப்தி அடையாப்போலி ஏற்படும். எனவே வியாப்தி அடைந்த அப்பதம் மத்தியபதம், பெரும்பதம் என்க்கொண்டால் சிற்றெடு கூற்றில் சிறுபதம் வியாப்தி அடைந்திராது. இந்நிலையில் முடிவை நிறையாக அமைத்தல் சிறுபதம் வியாப்தி அடைந்து இருக்கும் எனவே சிறுபத சட்டவிரோதப்போலி ஏற்படும். இந்நிலையைத் தவிர்ப்பதற்கு முடிவுகூற்றை குறையாக அமைத்தல் வேண்டும்.

(4) I E என எடுகூற்றுக்கள் அமையுமாயின் எடுகூற்றில் வியாப்தி அடையாத பெரும்பதம் முடிவுகூற்றில் வியாப்தி அடைந்து காணப்படும் அதனால் பெரும்பத சட்டவிரோதப்போலி ஏற்படும். இதனால் இச்சேர்க்கையில் இருந்து வலிதான முடிவு எதனையும் அனுமானிக்கமுடியாது.

9ம் விதி

“பேரெடு கூற்று குறையாகவும் சிற்றெடு கூற்று மறையாகவும் இருப்பின் எதுவித முடிவையும் அனுமானிக்க முடியாது.” பின்வருமாறு இச் சேர்க்கையை நான்கு விதமாக கூறலாம்.

| | (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| பேரேடு கூற்று:- | O | O | I | I |
| சிற்றெடு கூற்று:- | E | O | E | O |

(1) "OE,OO என எடு கூற்றுக்கள் அமையுமாயின் எடுகூற்றில் ஒன்றேனும் விதி எடுப்பாக இருத்தல் வேண்டும்”என்னும் விதி மீறப்பட்டு இரு எதிர்மறை எடுகூற்று போலி ஏற்படும் இதனால் வலிதான முடிவு எதனையும் அனுமானிக்க முடியாது.

(2) IE,IO என எடுகூற்றுக்கள் அமையுமாயின் முடிவு கூற்று மறையாய் அமைதல் வேண்டும். ஏனெனில் எடு கூற்றுக்களில் ஒன்று மறையாக அமையுமாயின் முடிவுகூற்று மறையாய் அமைதல் வேண்டும் என்பது விதி. முடிவு மறையாய் அமைந்தால் பெரும்பதம் வியாப்தி அடைந்து காணப்படும். இந்நிலையில் பேரேடு கூற்று I எடுப்பாக அமைவதால் பெரும்பதம் வியாப்தி அடைந்திராது எனவே பெரும்பதசட்ட விரோதப்போலி ஏற்படும். இதனால் இச் சேர்க்கைகளில் இருந்து வலிதான முடிவு எதனையும் அனுமானிக்க முடியாது.

✦✦✦

# உடன் அனுமானம்

செல்வன்.இ. சசிக்குமார்
ஆண்டு 12 C

தரப்பட்ட எடுகூற்றிலிருந்து அல்லது எடுகூற்றுக்களிலிருந்து பிறிதொரு முடிவினைப் பெறும் சிந்தனை நெறியே அனுமானம் எனப்படும்.

உதாரணம் :-

1. குரங்குகள் எவையும் வாலுடையவை அல்ல
∴ வாலுடையவை எவையும் குரங்குகள் அல்ல
2. எல்லா மனிதரும் அறிவாளி
காந்தன் ஒரு மனிதன்
∴ காந்தன் அறிவாளி.

அனுமானம் இருவகைப்படும் அவையாவன

(1) உடன் அனுமானம்
(2) ஊடாக அனுமானம்

## உடன் அனுமானம்

ஓர் தனி எடுப்பின் உட்கிடையை அல்லது உட்பொருளை வெளிப்படுத்தும் நெறியே உடன் அனுமானம் எனப்படும்.

உடன் அனுமானத்தில் வேறெந்த எடுப்புக்களினதும் உதவியும் இன்றி ஒரே எடுப்பிலிருந்து முடிவு அனுமானிக்கப்படுகின்றது.

உதாரணம் :- கழுதைகள் அனைத்தும் நாலுகால் உடையவை ஆகும்
∴ நாலுகால் உடையவை சில கழுதை ஆகும்.

உடன் அனுமானத்தை இரு வகையாகப் பிரிக்கலாம்.

(1) எடுப்பு முரண்பாடு
(2) வழிப்பெறுகை அனுமானம் அல்லது வெளிப்பெறுகை அனுமானம்.

## எடுப்பு முரண்பாடு

ஒரே எழுவாயையும், ஒரே பயனிலையையும், கொண்ட ஏதேனும் இரு எடுப்புகளுக்கு இடையே நிலவும் உண்மை,பொய்,தொடர்பு பற்றிய அனுமானமே எடுப்பு முரண்பாடு ஆகும். அல்லது A,E,I,O ஆகிய நால்வகை எடுப்புக்களில் எவையேனும் இரண்டு எடுப்புகளுக்கு இடையே நிலவும், உண்மை பொய் தொடர்பு பற்றி கூறுவதே எடுப்பு முரண்பாடு ஆகும்.

உதாரணம்:- காகங்கள் அனைத்தும் கறுப்பு நிறம் உடையவை என்பது உண்மை எனில்,
∴ காகங்கள் சில கறுப்பு நிறமுடையவை என்பது உண்மை ஆகும்.

எடுப்பு முரண்பாடு நான்கு வகைப்படும் அவையாவன.

(1) வழிப்பெறுகை எடுப்பு முரண்பாடு
(2) எதிர்மறை எடுப்பு முரண்பாடு
(3) மறுதலை எடுப்பு முரண்பாடு
(4) உப மறுதலை எடுப்பு முரண்பாடு

எடுப்பு முரண்பாட்டில் வரும் இந்நான்கு வகையான பிரிவுகளையும் பின்வருமாறு எடுப்பு முரண்பாட்டுச் சதுரம் அல்லது எதிர்ப்பு சதுரம் என்னம் படம் ஒன்றின் மூலம் காட்டலாம்.

(1) வழிப்பெறுகை எடுப்பு முரண்பாடு

அளவால் வேறுபட்டதும்,பண்பால் ஒன்று பட்டதுமான இரு எடுப்புகளுக்கு இடையே நிகழும் உண்மை,பொய் தொடர்புகள் பற்றிய அனுமானமே வழிப்பெறுகை எடுப்பு முரண்பாடு ஆகும். அதாவது நிறை எடுப்புகளுக்கும் அதே பண்புடைய குறை எடுப்புக்களுக்கும் இடையே நிகழும் உண்மை,பொய் தொடர்புகள் பற்றிய அனுமானமே வழிப்பெறுகை எடுப்பு முரண்பாடு ஆகும். இது A,I என்னும் இரு எடுப்புக்களுக்கிடையேயும், E,O என்னும் இரு எடுப்புக்களுக்கிடையேயும் நிகழுவது ஆகும்.

வழிப்பெறுகை எடுப்பு முரண்பாட்டினை இரண்டாக பிரிக்கலாம்

(1) கீழ்திசை நோக்கிய தொடர்பு (வழிப்படுத்தியிலிருந்து கீழ் நோக்கி முடிவடையும்)

(2) மேல்திசை நோக்கிய தொடர்பு (வழிப்பேற்றிலிருந்து மேல் நோக்கி முடிவுபெறல்)

உதாரணம் :-

A உண்மையாயின் I உண்மை
A பொய் ஆயின் I சந்தேகம்
E உண்மை ஆயின் O உண்மை
E பொய் ஆயின் O சந்தேகம்
I உண்மை ஆயின் A சந்தேகம்
I பொய் ஆயின் A பொய்
O உண்மை ஆயின் E சந்தேகம்
O பொய் ஆயின் E பொய்

மேற்கூறப்பட்ட தொடர்புகளில் A,E, தொடர்புகள் கீழ்திசை நோக்கிய தொடர்புகள் ஆகும். ஏனைய, I,O மேல்திசை நோக்கிய தொடர்புகள் ஆகும்.

(2) எதிர்மறை எடுப்பு முரண்பாடு

அளவு, பண்பு என்னும் இரண்டாலும் வேறுபட்ட இரு எடுப்புகளுக்கு இடையே நிலவும் உண்மை,பொய்மை பற்றிய அனுமானமே எதிர்மறை எடுப்பு முரண்பாடு ஆகும். எதிர்மறை எடுப்பு முரண்பாடானது A,O என்னும் இரு எடுப்புக்களுக்கிடையேயும் E,O என்னும் இரு எடுப்புக்களுக்கிடையேயும், நிகழுவது ஆகும்.

உதாரணம் :-

A எடுப்பு உண்மை ஆயின் O எடுப்பு பொய் ஆகும்
A எடுப்பு பொய் ஆயின் O எடுப்பு உண்மை ஆகும்
E எடுப்பு உண்மை ஆயின் I எடுப்பு பொய் ஆகும்
E எடுப்பு பொய் ஆயின் I எடுப்பு உண்மை ஆகும்
I எடுப்பு உண்மை ஆயின் E எடுப்பு பொய் ஆகும்
I எடுப்பு பொய் ஆயின் E எடுப்பு உண்மை ஆகும்
O எடுப்பு உண்மை ஆயின் A எடுப்பு பொய் ஆகும்
O எடுப்பு பொய் ஆயின் A எடுப்பு உண்மை ஆகும்

(3) மறுதலை எடுப்பு முரண்பாடு

பண்பால் வேறுபட்ட அல்லது முரண்பட்ட இரு நிறை எடுப்புக்களுக்கிடையே நிகழும் உண்மை,பொய் பற்றிய அனுமானமே மறுதலை எடுப்பு முரண்பாடு ஆகும்.

அதாவது A,E, க்கும் இடையிலான தொடர்பு அல்லது E,A க்கும் இடையிலான தொடர்பு மறுதலை எடுப்பு முரண்பாடு எனப்படும்.

உதாரணம் :-

A எடுப்பு உண்மை ஆயின் E எடுப்பு பொய் ஆகும்
A எடுப்பு பொய் ஆயின் E எடுப்பு சந்தேகம் ஆகும்
E எடுப்பு உண்மை ஆயின் A எடுப்பு பொய் ஆகும்
E எடுப்பு பொய் ஆயின் A எடுப்பு சந்தேகம் ஆகும்.

(4) உபமறுதலை எடுப்பு முரண்பாடு

பண்பால் வேறுபட்ட அல்லது முரண்பட்ட இரு குறை எடுப்புக்களுக்கு இடையே நிகழும் உண்மை, பொய் தொடர்புகள் பற்றிய அனுமானமே உபமறுதலை எடுப்பு முரண்பாடு எனப்படும்.

அதாவது I,O க்கும் இடையிலான தொடர்பு அல்லது O,I க்கும் இடையிலான தொடர்பு உபமறுதலை எனப்படும்.

உதாரணம்:-

I எடுப்பு உண்மை ஆயின் O எடுப்பு சந்தேகம் ஆகும்

I எடுப்பு பொய் ஆயின் O எடுப்பு உண்மை ஆகும்

O எடுப்பு உண்மை ஆயின் O எடுப்பு சந்தேகம் ஆகும்

O எடுப்பு பொய் ஆயின் O எடுப்பு உண்மை ஆகும்

மேலே குறிப்பிடப்பட்ட எடுப்புக்களுக்கிடையே உள்ள உண்மை, பொய் பற்றிய தொடர்புகளை பின்வரும் அட்டவணையில் மூலம் காட்டமுடியும்.

| உண்மை | A | E | I | O | பொய் |
|---|---|---|---|---|---|
| A | T | F | T | F | O |
| E | F | T | F | T | I |
| I | D | F | T | D | E |
| O | F | D | D | T | A |

T- உண்மை
F- பொய்
D- சந்தேகம்

(2) வெளிப்பேறு அனுமானம்

உண்மை என ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மூல எடுப்பின் எழுவாயிலோ பயனிலையிலோ அல்லது இரண்டிலுமோ மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் அதன் கருத்து மாறாத (உட்கிடையான) பிற எடுப்புகளை அனுமானித்தலே வெளிப்பேறு அனுமானம் எனப்படும்.

வெளிப்பேறு அனுமானத்தை ஏழு வகையாகப் பிரிக்கலாம்.

1. மறுமாற்றம்
2. எதிர்மாற்றம்
3. மறுமாற்ற எதிர்மாற்றம்
4. எதிர்வைக்கை அல்லது எதிர்வைப்பு
5. மறுமாற்ற எதிர்வைக்கை
6. நேர்மாற்றம்
7. மறுமாற்ற நேர்மாற்றம்

(1) மறுமாற்றம்

ஓர் மூல எடுப்பின் பயனிலையை மறையாக்கி பண்பை மாற்றுவதன் மூலம் அதன் கருத்து மாறாத (உட்கிடையான) பிற எடுப்புக்களை அனுமானித்தலே மறுமாற்றம் எனப்படும். தரவாக தரப்பட்ட ஓர் மூல எடுப்பினை மறுமாற்றம் செய்ய வேண்டும் ஆயின் மறுமாற்ற விதிகள் மூன்றினை பிரயோகிக்க வேண்டும். அவையாவன.

1. மூல எடுப்பின் பயனிலையை மறையாக்க வேண்டும்
2. மூல எடுப்பின் பண்பை மாற்ற வேண்டும்
3. மூல எடுப்பின் அளவு மாறக்கூடாது.

A,E,I,O என்னும் நால்வகை எடுப்புக்களுக்கும் அனுமானித்த மறுமாறுகளை பின்வருமாறு சுருக்கமாக அட்டவணை மூலம் காட்ட முடியும்.

| மூல எடுப்பு | SAP | SEP | SIP | SOP |
|---|---|---|---|---|
| மறுமாறு | SEP' | SAP' | SOP' | SIP' |

S- எழுவாய் P- பயனிலை S1- எழுவாயின் மறை P1- பயனிலையின் மறை

(2) எதிர்மாற்றம்

ஓர் மூல எடுப்பின் பதங்கள் இரண்டையும் இடம் மாற்றம் செய்வதன் மூலம் அதன் கருத்து மாறாத (உட்கிடையாக) பிற எடுப்புக்களை அனுமானித்தலே எதிர்மாற்றம் எனப்படும். தரவாக தரப்பட்ட ஓர் மூல எடுப்பினை எதிர்மாற்றம் செய்யவேண்டும் ஆயின் எதிர்மாற்ற விதிகள் மூன்றினை பிரயோகிக்க வேண்டும் அவையாவன.

1.மூல எடுப்பின் பதங்கள் இரண்டையும் இடம் மாற்றம் செய்தல் வேண்டும்

2.மூல எடுப்பில் வியாப்தியடையாத பதம் எதுவும் முடிவில் வியாப்தி அடையக்கூடாது.

3. மூல எடுப்பின் பண்பு மாறக்கூடாது.

A,E,I,O என்னும் நால்வகை எடுப்புக்களுக்கு அனுமானித்த எதிர்மாறுகளை பின்வருமாறு சுருக்கமாக அட்டவனை மூலம் காட்டமுடியும்.

| மூல எடுப்பு | SAP | SEP | SIP | SOP |
|---|---|---|---|---|
| எதிர்மாறு | SIP | SEP | SIP | இல்லை |

O எடுப்பின் எதிர்மாறு இல்லை

உ.ம் :- மூல எடுப்பு:- மலர்கள் சில அழகானவை அல்ல

எதிர்மாறு:- இல்லை.

(3) மறுமாற்ற எதிர்மாற்றம்

ஓர் மூல எடுப்பின் எழுவாயின் மறையை பயனிலையாகக் கொண்ட புதிய ஓர் எடுப்பினை அம்மூல எடுப்பிலிருந்து கருத்து மாறாத வகையில் (உட்கிடையாக) அனுமானித்தலே மறுமாற்ற எதிர்மாற்றம் எனப்படும்.

தரவாக தரப்பட்ட ஓர் மூல எடுப்பினை முதலில் எதிர்மாற்றம் செய்து பின்னர் மறுமாற்றம் செய்வதன் மூலம் "மறுமாற்ற எதிர்மாறு" பெறப்படும்.

| மூல எடுப்பு | SAP | SEP | SIP | SOP |
|---|---|---|---|---|
| மறுமாற்ற எதிர்மாற்றம் | POS' | PAS' | POS' | இல்லை |

உதாரணம் :- O மின்னுபவை எல்லாம் பொன் அல்ல

எதிர்மாறு :- இல்லை

மறுமாற்றம் :- இல்லை

(மறுமாற்ற எதிர்மாற்றம்)

(4) எதிர்வைக்கை

ஓர் மூல எடுப்பின் பயனிலையின் மறையை எழுவாயாக கொண்ட புதிய ஓர் எடுப்பினை அம்மூல எடுப்பிலிருந்து கருத்து மாறாத வகையில் (உட்கிடையாக)அனுமானித்தலே எதிர்வைக்கை எனப்படும்.

தரவாக தரப்பட்ட ஓர் மூல எடுப்பினை முதலில் மறுமாற்றம் செய்து பின்னர் எதிர்மாற்றம் செய்வதன் மூலம் எதிர்வைக்கை பெறப்படும்.

உதாரணம் :-A எடுப்பின் எதிர்வைக்கை E ஆகும்.

மூல எடுப்பு A :- எல்லா விவசாயிகளும் பலசாலிகள் ஆவார்.

மறுமாற்றம் E :- எந்த விவசாயிகளும் பலமில்லாதவர் அல்லர்.

எதிர்மாற்றம் E :- பல மில்லாதவர் எவரும் விவசாயிகள் அல்ல

| மூல எடுப்பு | SAP | SEP | SIP | SOP |
|---|---|---|---|---|
| எதிர்வைக்கை | P'ES' | P'IS | இல்லை | P'IS |

I வகை எடுப்புக்களை மறுமாற்றம் செய்தால் O வகை எடுப்பு பெறப்படும். O வகை எடுப்பை

எதிர்மாற்றுதல் செய்தல் முடியாது ஆகவே I வகை எடுப்புகளுக்கு எதிர்வைக்கை இல்லை.

(5) மறுமாற்ற எதிர்வைக்கை

ஓர் மூல எடுப்பின் எழுவாயினது மறை பயனிலையின் இடத்திற்கும் ,பயனிலையானது மறை எழுவாயின் இடத்திற்கும் வரக்கூடியதான புதிய ஓர் எடுப்பினை அம்மூல எடுப்பிலிருந்து கருத்து மாறாத வகையில் (உட்கிடையாக) அனுமானித்தலே "மறுமாற்ற எதிர்வைக்கை" ஆகும்.

எதிர்வைக்கையாக பெறப்பட்ட ஓர் எடுப்பினை மறுமாற்றம் செய்வதன் மூலம் மறுமாற்ற எதிர்வைக்கை பெறப்படும்.

உதாரணம் :- A எடுப்பின் மறுமாற்ற எதிர்வைக்கை A ஆகும்.

மூலஎடுப்பு A :- எல்லாக் கோள்களும் வட்டமானவை ஆகும்.

மறுமாற்றம் E :- எந்தக் கோள்களும் வட்டமில்லாதவை அல்ல.

எதிர்மாற்றம் E :- வட்டமில்லாதவை எவையும் கோள்கள் அல்ல.

(எதிர்வைக்கை)

மறுமாற்றம் A :- வட்டமில்லாதவை எல்லாம் கோள்கள் அல்லாதவை ஆகும்.

(மறுமாற்ற எதிர்வைக்கை)

| | | | | |
|---|---|---|---|---|
| மூல எடுப்பு | SAP | SEP | SIP | SOP |
| மறுமாற்ற எதிர்வைக்கை | PSA | POS | இல்லை | P'OS' |

I வகை எடுப்புக்களை மறுமாற்றம் செய்தால் O பெறப்படும். O க்கு எதிர்மாற்றம் இல்லை.

(6) நேர்மாற்றம்

ஓர் மூல எடுப்பின் எழுவாயின் மறையை எழுவாயாகக் கொண்ட புதிய ஓர் எடுப்பினை அம்மூல எடுப்பிலிருந்து கருத்துமாறாத வகையில் உட்கிடையாக அனுமானித்தலே நேர்மாற்றம் எனப்படும்.

A எடுப்பிற்கு மறுமாற்றத்திலும், E எடுப்பிற்கு எதிர்மாற்றத்திலும் ஆரம்பிக்கப்படவேண்டும். A எடுப்பை நேர்மாற்றம் செய்ய வேண்டுமாயின்,மறுமாற்ற நெறியில் தொடங்கி,மறுமாற்றம்,எதிர்மாற்றம் ஆகிய இரண்டு நெறிகளையும் மாறி மாறி ஐந்து தடவை பிரயோகிப்பதன் மூலம் நேர்மாற்றம் பெறப்படும்.

உதாரணம் :- A எடுப்பின் நேர்மாறு O ஆகும்.

மூல எடுப்பு A :- எல்லா நூல்களும் தரமானவை ஆகும்.

மறுமாற்றம் E :- தரமற்றவை எவையும் நூல்கள் அல்ல.

எதிர்மாற்றம் E :- தரமற்றவை எவையும் நூல்கள் அல்ல.

மறுமாற்றம் A :- தரமற்றவை எல்லாம் நூல்கள் அல்லாதன ஆகும்.

எதிர்மாற்றம் I :- நூல்கள் அல்லாதன சில தரமற்றவை ஆகும்.

மறுமாற்றம் O :- நூல்கள் அல்லாதன சில தரமானவை அல்ல.

(நேர்மாற்றம்)

| | | | | |
|---|---|---|---|---|
| மூல எடுப்பு | SAP | SEP | SIP | SOP |
| நேர்மாற்றம் | S'OP | S'IP | இல்லை | இல்லை |

(7) மறுமாற்ற நேர்மாற்றம்

ஓர் மூல எடுப்பின் எழுவாயினது மறை எழுவாயின் இடத்திற்கும், பயனிலையினது மறை பயனிலையின் இடத்திற்கும் வரக்கூடியதான புதிய ஓர் எடுப்பினை அம்மூல எடுப்பில் இருந்து கருத்து மாறாத வகையில் (உட்கிடையாக) அனுமானித்தலே மறுமாற்ற நேர்மாற்றம் எனப்படும்.

A,E, நிறை எடுப்புக்களுக்கு மாத்திரமே மறுமாற்ற நேர்மாற்றம் சாத்தியம் ஆகும். I,O எனும் குறை எடுப்புக்களுக்கு மறுமாற்ற நேர்மாற்றம் சாத்தியம் இல்லை. நேர்மாறாக பெறப்பட்ட எடுப்பினை மறுமாற்றம் செய்வதன் மூலம் அனுமானித்தலே, மறுமாற்ற நேர்மாற்றம் ஆகும்.

உதாரணம் :- A எடுப்பின் மறுமாற்ற நேர்மாறு I ஆகும்.

மூல எடுப்பு A :- எல்லா மலர்களும் அழகானவை ஆகும்.
மறுமாற்றம் E:- எந்த மலர்களும் அழகல்லாதன அல்ல.
எதிர்மாற்றம் E :- அழகல்லாதன எவையும் மலர்கள் அல்ல.
மறுமாற்றம் A :- அழகல்லாதன எல்லாம் மலர்கள் அல்லாதன ஆகும்.
எதிர்மாற்றம் I :- மலர்கள் அல்லாதன சில அழகானவை அல்ல.
மறுமாற்றம் O :- மலர்களல்லாதன சில அழகானவை அல்ல.
எதிர்மாற்றம் I :- மலர்களல்லாதன சில அழகல்லாதன ஆகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| மூல எடுப்பு | SAP | SEP | SIP | SOP |
| மறுமாற்ற நேர்மாற்றம் | S'IP' | S'OP' | இல்லை | இல்லை |

O எடுப்பின் மறுமாற்றம் I ஆகும். I எடுப்பின் எதிர்மாற்றம் I ஆகும். எனவே I எடுப்பின் மறுமாற்றம் O ஆகும். O எடுப்பிற்கு எதிர்மாற்றம் இல்லை. ஆகவே முடிவினை அனுமானிக்க முடியாது.

I எடுப்பின் மறுமாற்றம் O ஆகும், O எடுப்பிற்கு எதிர்மாற்றம் இல்லை எனவே மறுமாற்ற நேர்மாற்றம் பெறமுடியாது.

✦✦✦

*With Best Compliments*
*From*

# S.M. FERNANDO OPTICIANS

SIGHT TESTED - PRESCRIPTIONS
ACCURATELY DISPENSED

**580, Hospital Road,**
**Jaffna. (Near Bank Of Ceylon)**

மத்தியின் வணிகம் சிறக்க
வாழ்த்துக்கள்

# ஜீவாகாரம்

வளர்ந்து வரும் குழந்தைகளுக்கும்
கர்ப்பத் தாய்மார்களுக்கும்
பாலூட்டும் தாய்மார்களுக்கும்
போசாக்கு குறைவான
குழைந்தைகட்கும்
யாழ் போதனா வைத்தியசாலையின்
ஆரம்ப பராமரிப்பு பிரிவின்
ஆராச்சியின் அதி உன்னத
கண்டுபிடிப்பு

தயாரிப்பாளர்:-

**அண்ணா தொழிலகம்**

இணுவில்

WITH BEST COMPLIMENTS FROM

**GNANAMS STUDIO**

CLOCK TOWER ROAD
JAFFNA

மத்தியின் வணிகம் சிறக்க நல் வாழ்த்துக்கள்

**கந்தன் களஞ்சியம்**

322C மருத்துவமனை வீதி
யாழ்ப்பாணம்

பவள விழா மலர் சிறக்க

உதயன் நாளிதழின்

உள்ளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

உதயன் நாளிதழ்

உதயன் நாளிதழ்

உதயன் நாளிதழ்

உதயன் நாளிதழ்

உதயன் நாளிதழ்

உதயன் நாளிதழ்

உதயன் நாளிதழ்

உதயன் நாளிதழ்

உதயன் நாளிதழ்

உதயன் நாளிதழ்

உதயன் நாளிதழ்

நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

மத்தியின் வணிகம் வளமுடன் சிறக்க வாழ்த்துகின்றோம்.

*

*

*

*

# நிரூ ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட்

கோண்டாவில்

---

மத்தியின் வணிகம் புதுப் பொழிவுடன் மிளிர எமது வாழ்த்துக்கள்.

இன்றைய நிகழ்வுகளை நாளைய நினைவுகளாக்கி நவீன தொழில் நுட்ப முறையில் புதிய உத்திகளில் வீடியோ படம் பிடித்திட

**'நீகல் வீடியோ'**

எண்ணங்கள் எழுத்து வடிவில் - கலை சின்னங்கள் - சிலை உருவில் - எழில் வண்ணங்களோ-

**'எம் வீடியோ பதிவில்'**

இத்துடன் அலங்கார பந்தல்கள் (சொக்கட்டான்) கதிரைகள் - டம்ளர்கள் - சமையல் பாத்திரங்கள் - மணவறை - சோடனை வகைகள் - மற்றும் உங்கள் வைபவங்களுக்கு தேவையானவற்றை ஒரே இடத்தில் நீங்கள் வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கும்.

தற்போது புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட புறடக்ஷன் - MX-50 மிக்ஸர், AV-5 மிக்ஸர் மூலமும் புதிய கமராக்கள் பொருத்தி சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்திட

**'நீகல் வீடியோ'**

தலைமை அலுவலகம் – கடற்கரை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

கிளை – இல:65 ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை, கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

*With Best Compliments from*



# N.C.T. TRANSPORT

## 58, Old Moor Street
## Colombo -12

## &

# Murugan Stores

27, Stanley Road
Jaffna.

EVERY SUCESS AND PROSPERITY BE YOURS

GLOBAL ENGINEERING TECHNOLOGY SERVICE

NO - 32 KACHCHERI NALLUR ROAD
JAFFNA

மத்தியின் வணிகம் வளமுடன் சிறக்க நல் வாழ்த்துக்கள்

நாதன் ஓட்டுத் தொழிற்சாலை

27 சங்கிலியன் வீதி
நல்லூர்.

## இந்து நாகரீக விடயம்

1. செல்வன் செ. கமலக்கண்ணன்

# பகவத் கீதையும் அது வலியுறுத்தும் முக்கியமான மூன்று யோகங்களும்

செ.கமலக்கண்ணன்
ஆண்டு 12E

பிரஸ்தான திரயங்களில் ஒன்றாக விளங்கும் பகவத் கீதை வீஸ்ம பருவத்தில் வரும் 18 அத்தியாயங்களையும் 700 சுலோகங்களையும் கொண்டு காணப்படுகின்றது. இது இகபர வாழ்விற்குரிய பல தத்துவக் கருத்துக்களை தன்னகத்தே உள்ளடக்கி உள்ளதுடன் இப் பகவத் கீதையானது அல்லல் நிறைந்த அமர்க் களத்திலே கண்ணனால் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டது. பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் மகா பாரதப்போர் மூண்டதும் அர்ச்சுனனின் தேர்ப்பாகனான கண்ணன் அர்ச்சுனனின் தேரினை கௌரவ சேனையின் முன்பாக கொண்டு வந்து நிறுத்தினான். எதிர் தரப்பு சேனையை உற்று நோக்கிய அர்ச்சுனன் அங்கு தன் உறவினர்களும் நண்பர்களும் வணக்கத்துக்குரிய பெரியவர்களும் நிற்பதைக் கண்டு இவர்களைக் கொன்று கிடைக்கும் அரசாட்சியால் யாது பயன்? என்ற தத்துவவிசாரணை இவன் மனதில் தோன்றியது. இதனால் இவன் மனதில் ஓர் சோர்வு உண்டாகியது. உடனே அர்ச்சுனன் தன் காண்டீபத்தை (வில்) தேர்க்கட்டில் போட்டு விட்டு உட்கார்ந்து விட்டான். இதைப் பார்த்த பகவான் பார்த்தனை நோக்கி பார்த்தா அலியின் இயல்பை அடையாதே அது உனக்கு பொருந்தா எதிரியை வாட்டுபவனே இழிவான உள்ளத்தளர்வை துறந்து விட்டு எழுந்திராய் என்று கூறுகின்றார்.

பின்பு அர்ச்சுனன் செய்வது தர்மமான வழி என்பதையும் தன் அவதார நோக்கையும் உணர்த்துவதற்காக "பரித்ஞானாய சதுனம் வினாசாய சதுஷ்க்ருதாம் தர்ம ஸம்ஸ்தா பார்த்தாய ஸம்ப்வாமி யுகே யுகே" (பாரதா எப்பொழுது எல்லாம் அறம் அழிந்து மறம் மேல் எழுகின்றதோ அப்பொழுது எல்லாம் என்னை நான் பிறப்பித்துக் கொள்கிறேன்.) என்று கூறுகின்றார். அதாவது பாரதா இப்பொழுது அறம் அழிந்து விட்டது. மறமே தலை தூக்கித் தாண்டவம் ஆடுகின்றது. ஆகவே நான் மறத்தை அழித்து அறத்தை நிலைநாட்ட தோன்றி உள்ளேன் என்கிறார். பின்பு பகவானே எல்லோரும் ஒரு கடவுளை வழிபடுபவர்கள் அல்லர். வேறு வேறு கடவுள்களையே மனதில் வைத்து வழிபடுகிறார்கள். கடவுளை ஆராதிப்பவன் எந்த வடிவத்திலும் எக்கடவுள்களையும் ஆராதிக்கலாம். எல்லோர் வடிவிலும் நானே வருகிறேன் என்கிறார். இதிலிருந்து சமய வாழ்விற்குத் தேவையான முழுமையான பரம்பொருள் பற்றிய கருத்தை கீதை சிறப்பாகத் தந்து நிற்பதையும் எச்சமயமும் பரம்பொருளாகிய நாதனை அடையும் வேறு வேறு மார்க்கங்கள் என்பதனை சிறப்பாகச் சுட்டி நிற்பதை அறியக் கூடியதாக உள்ளது. ஆகவே ஒரு கடவுட் கொள்கையும் கீதையில் போதிக்கப்படுகின்றது.

பகவத்கீதையில் உள்ள 18 அத்தியாயமும் யோகம் எனும் இறுதி அடியை தலைப்பாகக் கொண்டு காணப்படுகின்றது. (உ+ம்) : அர்ச்சுனன் விஷாத யோகம், சாங்கிய யோகம், யோகம் என்றால் முழுமையடைவதற்குரிய மார்க்கமாகும். இவ் யோகங்க்ளின் சாரமாக உள்ள கன்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம் என்பன இறைவனோடு சேர்வதையே முடிந்த முடிவாகக் கொண்டு காணப்படுகின்றது. இதில் கன்ம யோகம் என்றால் செயல்வழியால் இறைவனை அடைதல் ஆகும். பக்தியோகம் என்றால் அன்பு வழியால் இறைவனை அடைதல் ஆகும். ஞான யோகம் என்றால் அறிவு வழியால் இறைவனை அடைதல் ஆகும். இவ்மூன்று வகை யோகங்களிலும் ஏற்றத் தாழ்வுகள் இல்லை. எல்லாமே சம ஆற்றல் உடையனவே.

நாம் முதலில் கன்ம யோகம் பற்றி ஆராய்ந்தால் கன்ம யோகம் ஆவது செயல் வழியால் இறைவனை அடைதல் ஆகும். அதாவது ஒருவன் சுயநலப் பற்று இல்லாமல் கன்மத்தைச் செய்வானாயின் இறைவனை அடைவதற்குரிய பரிபக்குவ நிலையை எய்துவான். இதனைப் பகவான் பார்த்தனுக்கு "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்று கூறுகின்றார். கன்ம யோகம் என்பது தன்னலமற்ற சேவை மார்க்கமாகும். ஓர் செயலைச் செய்யும் போது அதன் பலன் தன்னைப் பாதிக்காதவாறு செயலைச் செய்யவேண்டும். அத்துடன் கடமையைச் செய்யாமலும் பின் வாங்கக் கூடாது. கன்ம யோகியானவன் விருப்பு வெறுப்பு அடைவதில்லை. இவன் சமனான மனத்துடனே செயலைச் செய்கிறான். அத்தகைய சமனான உள்ளமே யோகமாகும். (சமத்துவம் யோக உச்யதே)

பகவத்கீதையின் பிரதான உபதேசம் "பலனிற் பற்று வையாது கடமை புரி" என்பதே ஆகும். பற்றே அறியாமைக்கும் பிறவிக்கும் காரணமாகும் ஆன்மா தற்பேதமும், தற்செயலும் அற்றது. அதனை இயக்குபவன் பரமான்மாவே இவ்வுண்மையை பகவான் "நித்திய கன்மத்தை நீ செய் செயலின்மையை விடச் செயல் சிறந்தது செயலில்லாதவனுக்கு உடலை பேணுதல் கூட இயலாது." என்கிறார்.

---கன்ம யோகம், 8----

கன்மத்தை நாம் செய்து வந்தால் ஒரு நிலையிலே கன்மத்தின் தளையினாலே பக்குவ ஆன்மா கட்டுப்படாது விலகி நிற்கும். உன்னத பரிபக்குவ நிலை ஏற்படும் என்று கீதாசாரியார் போதிக்கின்றார். அதாவது "ஆத்மாவில் இன்புற்று ஆத்மாவில் திருப்தியடைந்து ஆத்மாவில் மகிழ்ந்திருப்பவனுக்கு வினையாற்றும் கடமை இல்லை."

---கன்ம யோகம், 17---

இவ்வுலகிலே பிறந்தான பின்பு செயல் புரியாமல் இருப்பது என்பது நடக்க முடியாத ஒன்று ஆனால் செயல்கள் பற்றை வளர்த்து மேலும் பிறவிக்கு காரணமாக இருப்பதால் மனிதன் செயலில் இருந்து விலகி புலன்களை அடக்கி குடும்பத்தினின்றும் சமூகத்தினின்றும் வேறாகி நிற்க வேண்டும். இது நடைமுறையிலே சாத்தியம் அற்றது என்பதையும் இதனாலே ஒருவகையான போலித்தன்மை உண்டாகி வாழ்க்கை அர்த்தமற்றதாகி விடுகிறது என்பதையும் பகவான் உணர்த்த வேண்டியதாயிற்று. "புருஷன் கருமங்களை அருஷ்டிக்காமையால் கர்மாதிதத்தை அடைவதில்லை. வெறும் சந்நியாசத்தால் நிறை நிலையைப் பெறுவதில்லை."

---கன்ம யோகம், 4---

பின்பு மனதை அடக்காமல் பொறிகளை மட்டும் அடக்க முற்பட்டு அதனாலே இடைவிடாது பாவம் புரிபவர்க்ள் பலர் உள்ளனர். இவர்களை பகவான் மூடர் என்று இழிந்துரைக்கின்றார். "கர்மேந்திரியங்களை அடக்கி இந்திரிய விஷயங்களை மனதால் எண்ணிக் கொண்டிருக்கும் மூடன் பொய் ஒழுக்கமுடையவன் என்று பகரப்டுகிறான். இதனை வள்ளுவர் புதரிலே மறைந்திருந்து பறவைக்கு இலக்கு வைக்கும் புல்லிய வேடருக்கு பின்வருமாறு உவமையாக்குகிறார்.

"தவமறைந்தல்லாவை செய்தல் புதர் மறைந்து வேட்டுவன் புள் சிமிழ்த் தற்று"

அடுத்து பக்தி யோகம் பற்றி நோக்கினால் பக்தி சூத்திரங்களை எழுதிய நாரதர் பக்திக்கு ஆழ்ந்த இறைபற்று உள்ளது என்கிறார். பக்தனானவன் தனக்கென எதையும் வைத்துக்கொள்ளாது தன் அனைத்தையுமே பரம் பொருளுக்கு சமர்ப்பித்து அந்த அர்பணத்திலேயே திருப்தி அடைய வேண்டும் என்பதையே பகவான் "என்னிடத்தே பக்தி வைத்து என்னிடத்தே புத்தியை செலுத்துக பின்பு என்னிடத்தே வசிப்பாய் என்பதில் சந்தேகமில்லை" என்கிறார்.

பக்தியோகம் ,8

பின்பு பகவான் பக்தியால் ஆகாதது இல்லை தம்மை எளிதில் அடைவதற்கு பக்தி ஒன்றே வழி என்று பகவான் போதித்தல் காணலாம். "என்னிடத்து மனதை வைத்து யோகத்தில்

நிலைத்தவராய் பெரும் சிரத்தை உடையவராய் யாரென்னை உபயோகிக்கிறார்களோ அவர்கள் யோகத்தில் மேம்பட்டவர்கள் என்று கருத்து.

பக்தியோகம் 2

மேலும் 9ம் அத்தியாயம் 26ம் பாடலிலே பகவான் "யாரெனெக்கு இலை மலர் கனி அல்லது நீர் என்பவற்றை பக்தியோடு படைக்கிறார்களோ அத்தூய மனத்தாரது அன்பளிப்பை நான் இன்பத்துடன் அருந்துகிறேன் என்று பக்தியின் முக்கியத்துவத்தைக் கூறுகின்றார். 9ம் அத்தியாயம் 27ம் பாடலில் "எதைச் செய்தாலும் யாது புசித்தாலும் எந்த ஹோமம் பண்ணினாலும் எதை ஜயமிட்டாலும் எவற்றைப் புசித்தாலும் அதை எனக்கு அர்ப்பணமாகச் செய்" எனக் கூறுகின்றார். இங்கு ஆசார பக்தி முக்கிய பக்தி என்பன பற்றி சிறப்பாகக் கூறப்படுகின்றன. ஆசார பக்தி என்பது சடங்குகளோடு கூடிய பக்தி நெறியாகும். முக்கிய பக்தி என்பது இறைவனோடு நேரடித் தொடர்பு கொள்வதாகும். இவற்றுடன் பிரபக்தி பற்றியும் கூறப்படுகின்றது. பிரபக்தி என்றால் இறைவனிடம் பூரண சரணாகதி அடைதலாகும். இந்நிலையில் அடியவர்கள் இறைவனிடம் ஆறு வகையான தொடர்புகளை வைக்கின்றனர். அவை

(1) தாஸ்ய பாவம் - அடிமை எஜமான் தொடர்பு (உ.ம்) அனுமான் இராமன்
(2) சகிய பாவம் - தோழமை தொடர்பு (உ.ம்) குசேலர் கண்ணன்
(3) பாஸ்சல்ய பாவம் - குழந்தை மேல் தாய்க்குள்ள தொடர்பு (உ.ம்) இராமன் கோசலை
(4) சாந்த பாவம் - தாய் மேல் குழந்தைக்குள்ள தொடர்பு (உ.ம்) பிரகலாதன்
(5) காந்த பாவம் - மனைவி கணவன் மேலுள்ள தொடர்பு (உ.ம்) சீதை ராமன்
(6) மதுர பாவம் - காதலன் காதலி தொடர்பு (உ.ம்) ராதை கிருஷ்ணன்

அடுத்து ஞான யோகம் பற்றி நோக்கினால் ஞானம் என்று இங்கே பேசப்படுவது பிரம்ம ஞானம் ஆகும். பிரம்மம் பற்றிய அறிவை ஒருவன் பெற ஞான நூல்களைக் கற்றுத் தெளிய வேண்டும். ஞானம் ஒருவனை இயற்கையாகவும் செயற்கையாகவும் சென்று அடையலாம். கீதை ஞானம் என்பதை இறுதியிலே பற்றுகின்ற பற்று எல்லாம் துறந்து தாம்வேறு இறை வேறு என்ற வேறுபாட்டுணர்வும் அற்றுப்போய் இரண்டர நிற்கும் உன்னத நிலையே ஞானம் என்கின்றது. ஞானத்தை உயர்த்திப் பேசும் பகுதிகள் பல கீதையிலே வருகின்றன. தமக்கு மிக விருப்பமானவன் ஞானி என்றும் ஞானியும் தானும் ஒன்றே என்று கிருஷ்ண பகவான் கூறுகிறார். ஞான யோகிக்கு விருப்பு வெறுப்பு கிடையாது. இன்ப துன்ப பந்த பாசங்களோ, ஆசா பாசங்களோ கிடையாது. ஞான யோகி ஒளியுள் ஒளியாகத் திகழ்வான் என்று கீதை கூறுகின்றது.

கீதை பரமபொருளை ஆராய்ச்சிக்கும் பக்தி வழிபாட்டிற்கும் பயன்படுத்தி இந்துமத நூல்களில் சிறப்பிடம் பெறுகிறது.

✡✡✡

## வளமாக்கி உதவுதொகை

குமார் சுதாகரன்
A/L 95E

வளமாக்கியின் சந்தை நிலையைக் குறைக்க அரசால் வழங்கப்படும் உதவு தொகை இதுவாகும். விவசாயிகளின் உற்பத்திச் செலவை குறைத்து இலாபத்தை உச்சப்படுத்துவதன் மூலம் விவசாய உற்பத்திகளை அதிகரிக்க முடியும் என்ற அடிப்படையில் இது வழங்கப்படுகின்றது. இது 1983 இல் இருந்து தேசிய உரமானிய செயலகத்தால் வழங்கப்பட்டு வந்தது. 1962 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் செலவுகள் அரசு வரவு செலவுத் திட்டத்தின் நடப்பு மாற்றலில் இடம் பெறும்.

31.12.89இல் நிறுத்தப்பட்ட இவ் உதவு தொகை 1994 இல் பதவி ஏற்ற பொது மக்கள் ஐக்கிய முன்னனி அரசால் வழங்கப்பட்டு வருகின்றது. அண்மையில் சமர்ப்பிக்கப்பட்டு வரவு செலவுத் திட்டம் மூலமும் இது அங்கீகரிக்கப்பட்டது.

2. ரூபாய்ப் பிணைகள்

அரசு தன் வரவு செலவுத் திட்டம் பற்றாக்குறைக்கு உள்நாட்டுச் சந்தையில் நிதி பெற ஒதுக்கிட்டுச் சட்டம் 021ம் பிரிவின் கீழ் மத்திய வங்கியின் பொதுப்பட கடன் திணைக்களத்தால் வெளியடப்படும் ஒரு நடுத்தர நீண்டகால கடன்பத்திரம் இதுவாகும்.

1. சந்தை நிலைக்கு ஏற்ப முதிர்ச்சிக் காலம், வட்டிவீதம் என்பன வேறுபடும். வட்டி ½ ஆண்டுக்கு ஒரு முறை பெறப்படும்.
2. இது திரண்ட நிதியில் இருந்து வழங்கப்படுவதனால் பாதுகாப்பான ஓர் முதலீடு ஆகும்.
3. சந்தைக் கடன் கருவிகளில் இது முதன்மையானது
4. தற்போது வங்கித்துறை 25% வங்கி சாதாரத்துறை 75% கொள்வனவு செய்துள்ளது. இதனைக் கொள்வனவு செய்த வங்கி சாரத்துறைகளில் காப்புறுதி நிறுவனம், ஊழியர் சேமலாபநிதியம், தேசிய சேமிப்பு வங்கி என்பன முக்கியமானவை ஆகும்.

வங்கித் துறைக் கொள்வனவு செய்யின் பயவீக்கம் ஏற்படும் வங்கி சாரா துறை கொள்வனவு செய்யின் பணவீக்கம் ஏற்படாது.

## தேசிய அபிவிருத்திச்சபை.

இலங்கை அரசின் பொருளாதார அபிவீரத்தி திட்டங்களை தயாரிக்கவும் அவற்றை செயற்படுத்தவும் என உருவாக்கப் பட்டுள்ள ஓர் அமைப்பு இதுவாகும் இது நாட்டின் அபிவிருத்தி முயற்சிகளை ஒன்றினைக்கும் இது பின்வரும் துறைகள் துணைச்சபைகளைக் கொண்டது.

1. உள்நாட்டு விவசாயம்
2. ஏற்றுமதி விவசாயம்

3. கடற்றொழில் அபிவருத்தி
4. கைத்தொழில் அபிவிருத்தி
5. சேவைகள் இதனுள் சுற்றுலா காப்புறுதி என்பன உள்ளடங்கும்
6. பொருளாதார கீழ் கட்டமைப்பு வசதிகள்
7. சமூக கீழ் கட்டமைப்பு வசதிகள்
8. வறுமை ஒழிப்பு :- தேசிய சுபீட்ச இயக்கமும் சமுர்த்தி இயக்கமும் இன் நோக்கத்திற்காக இணைந்து செயற்படும்.

துணைச் சபைகளின் திட்டங்களை தேசிய அபிவிருத்தி சபை ஆராய்ந்து செயற்படுத்தும். இது திட்டமிடல் அமைச்சரால் செயற்படுத்தப்படும். நிதி அமைச்சர் என்ற ரீதியில் தற்போதைய ஜனாதிபதி இதன் தலைவர் ஆவார். அரச தனியார் தொழிற்சங்கம் மற்றும் அவைபோன்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து செயற்படுவர்.

## பெறுமான விகிதவரி ( Valueadded Tax)

ஒரு பொருளின் சேர்க்கப்பட்ட பெறுமதி மீது விதிக்கப்படும் ஒருவகை வரி இதுவாகும். அதாவது வாடகை, வட்டி, கூலி, இலாபம், பெறுமானத் தேய்வு என்னும் கூட்டிய பெறுமதிகளின் மீது இவ்வரி விதிக்கப்படுகின்றது. எனவே இது இறுதி நுகர்வு மட்டத்தில் விதிக்கப்படும் ஒருவகைகளின் உற்பத்திக்காக தன் சொந்த அல்லது ஏனைய நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்த ஊதியம் தவிர்ந்த உள்ளீடுகளுக்கு விற்பனைக்கு முன் விதிக்கப்படும் ஒரு வகை வரி இதுவாகும்.

இவ்வரி முறைமை ஒருமுறை மட்டுமே விதிக்கப்படுகின்றது மொத்த விற்பனை வரியைப் போல் பலதடவை விதிக்கப்படுவதில்லை. மேலும் நிர்வாக ரீதியாக இலகுவாக இருப்பதுடன் நெகிழ்ச்சித்தன்மையையும் கொண்டிருக்கின்றது. இதனால் வறிய மக்களுக்கும் ஏனைய வரிகளான தனி நபர் வருமான வரி நிறுவன வருமானவரி என்பவற்றை செலுத்துபவர்களுக்கும் நிவாரணம் அளிக்க முடியும் இவை அனுகூலங்கள் ஆகும்.

இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் சுய தொழில் முயற்சிகள், கறுப்புச் சந்தை நடவடிக்கைகள் அதிகம் காணப்படுவதுடன் இவை பூரணப்படுத்தப்படாத பதிவேடுகளையும் கொண்டிருப்பதனால் இவ் வரிமுறையை செயற்படுத்துவது சிக்கல் என்பது இவ்வரி முறையின் பிரதி கூலம் ஆகும்.

**புவியியல் விடயம்** 1) திரு.ம.மரியதாஸ் B.A

## புவியியற் பாடத்தின் முக்கியத்துவமும் அதன் அவசியமும் -

திரு.ம.மரியதாஸ் B.A
புவியியல் ஆசிரியர்
யாழ் மத்திய கல்லூரி.

புவியியல் பற்றிய அறிவானது ஒவ்வொருவரும் பெறவேண்டிய பெற்றிருக்க வேண்டிய மிக முக்கியமான அம்சமாகும். மனிதன் தான் வாழும் பிரதேசத்தை, நாட்டை, உலகத்தை, பிரபஞ்சத்தைப் பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். காரணம் அவன் இப் புவியுடன் பின்னிப் பிணைந்திருப்பதேயாகும். மேலும் மனிதன் தான் தோன்றிய காலம் முதல் தனதாளுகைக்குட்படுத்தி மிக இறுக்கமான பிணைப்பை அதனுடன் ஏற்படுத்திக் கொண்டான். ஆயினும் அன்றுமுதல் இன்று வரை புவியின் பல்வேறு காரணிகளின் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டுள்ளதோடு அவற்றிற் பல வற்றிற்கு அடிமைப்பட்டும் சிலவற்றிற்கு தன் முயற்சியால் வெற்றி கண்டும் வந்துள்ளமை கண்கூடு.

மனிதனுக்கும் புவிக்கும் உள்ள பிணைப்பானது ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றதாகும். ஒன்றில் இருந்து ஒன்றை பிரிக்க முடியாவண்ணம் ஒன்றிற்காக ஒன்று இறைவனால் படைக்கப்பட்டுள்ளது. எனவே புவியையும் மனிதனையும் பற்றி ஆராயும் அறியும் புவியியல் பாடத்தை ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமும் அவசரமுமாகும். இக் காரணத்தினாலேயே சில பத்து ஆண்டுகளுக்கு முன்னர் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு புவியியல் ஒரு பாடமாக போதிக்கப்பட்டு வந்தது. பின் அது நீக்கப்பட்டு க.பொ.த உயர்தர பிரிவில் மட்டும் புவியியல் ஒரு பாடமாக போதிக்கப்படலாயிற்று.

மேலும் க.பொ.த சாதாரண பிரிவில் புவியியல் ஒரு பாடமாக காணப்பட்டதால் அது க.பொ.த உயர்தரத்தில் புவியியல் கற்கும் மாணவருக்கு ஒரு அடிப்படையாக அமைந்ததோடு ஆர்வமுடன் அப்பாடத்தை கற்கவும் முடிந்தது. இதனால் புவியியல் பாடத்தை விரும்பி கற்கும் மாணவர் எண்ணிக்கையும் அதிகமாக காணப்பட்டது. இந்நிலையில் தாம் வாழும் பிரதேசத்தினதும் முழு உலகினதும் பௌதீக பொருளாதார நிலைமைகளை விளங்கிக் கொள்ளக்கூடிய ஆற்றலைப் பெற்றிருப்பதோடு அதை மற்றவர்களுக்கு எடுத்து விளக்கும் தகுதியையும் கொண்டிருந்தனர்.

புவியியல் பாடமானது சகல விதமான துறைகளுக்கு அடிப்படையாக விளங்கும் ஒரு அத்தியாவசியகல்வியாகும். குறிப்பாக விஞ்ஞான ஆராட்சிகளுக்கு கூட புவியியல் அறிவு இல்லாவிடில் இத்தனை முன்னேற்றத்தை அடைந்திருக்க முடியாது. மேலும் விவசாயத் துறையிலும் கைத்தொழிற் துறையிலும் இன்று அளவுக்கதிகமான முன்னேற்றத்தை அடைய அடிப்படையாய் அமைவது புவியியலே. உதாரணமாக விவசாய முன்னேற்றம் தங்கியிருப்பது மண், மண்ணின் தன்மை, நீர், காலநிலை. என்பவையே மேலும் கைத்தொழில் அமைவிடத்தை தீர்மானிப்பதுலும் கனிப்பொருளும் நிலத்தின் அமைப்பும் கூட முக்கியம் பெறுகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக இவ்வுலகில் சகல ஜீவராசிகளின் உயிர்வாழ்க்கைக்கும் சூழல் சமநிலை மிக மிக அவசியமான தொன்றாக விளங்குகின்றது.

மேற் கூறப்பட்ட விடயங்கள் மாத்திரமன்றி கடல் வழிப் போக்குவரத்திற்கும் ஆகாய வழிப் போக்குவரத்திற்கும் தரை கீழ் போக்குவரத்திற்கும் புவியியல் அறிவு மிக முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகிறது. இத்தனைக்கும் அடிப்படையாக விளங்கும் புவியியல் பற்றிய அறிவானது

ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டிய கற்கவேண்டிய அதுவும் ஆர்வமுடன் கற்க வேண்டிய பாடமாக அமைகின்றது.

இப் புவியியல் பாடத்தை க.பொ.த உயர் வகுப்பிற்கு கலைப் பிரிவில் தெரிவாகும் மாணவர் தமது பாடங்களில் ஒன்றாக தெரிவு செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் எடுத்துக் கூற வேண்டியது சகல ஆசிரியர்களினதும் கடமையாகும். முக்கியமாக ஆண்டு ஒன்பதில் இருந்தே சமூகக் கல்விப் பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர் இந்த நாட்டத்தை மாணவரில் ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். குறிப்பாக சமூகக் கல்விப் பாடத்தில் மாணவரைக் கவரக் கூடிய பல்வேறு அம்சங்கள் உண்டு. அவனது எதிர்கால வாழ்க்கைக்கு உதவக்கூடிய வழி காட்டக்கூடிய பல்வேறு அம்சங்கள் உண்டு. இதனை மாணவர் அறிந்து கொள்ளவும் அதை நாடவும் செய்யவேண்டியது ஆசிரியரின் கடமையாகும். இன்னும் குறிப்பாக ஆண்டு பதினொன்றில் கற்கும் மாணவரில் பெரும்பாலானவர்கள் கலைப்பிரிவிலேயே நாட்ட முள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.இது வரவேற்கக்கூடிய ஒரு அம்சமாகும். இந்நிலையில் அவர்கள் அத்துறையில் ஆர்வமுடன் நாடக்கூடிய பாடமாக புவியியலை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

மேலும் க.பொ.த உயர்பிரிவிற்கு மாணவர்கள் வரும்பொழுது அவர்களில் இரண்டு சதவீதம் மட்டுமே புவியியலை ஒரு பாடமாக கற்க ஆர்வம் மிக்கவர்களாக காணப்படுகின்றனர். இது மிகவும் வருத்தத்திற்குரியதாகும். காரணம் இவர்கள் தெரிவு செய்யும் ஏனைய பாடங்களில் பல தனதும் தனது சமூகத்தினதும் நாட்டினதும் வளர்ச்சிக்கு எவ்விதத்திலும் பயனளிக்கக்கூடிய வழிகாட்டக்கூடிய பாடங்களாக அமையாமையே. இருந்தும் சில சமயங்களில் உயர்வகுப்பு படிக்கவேண்டும் பரீட்சை எடுக்கவேண்டும் என்ற போலி கௌரவத்திற்காகவும் போதிய பாடங்கள் இன்மையும் தமது க.பொ.த சாதாரணதர பரீட்சை முடிவுகளுக்கு அமைவான பாடங்கள் கிடைக்காமையாலும் புவியியலை ஒரு பாடமாக எடுக்க முன்வருகின்றனர். இது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக இருப்பினும் இப்பாடத்தை அவர்கள் பயில எவ்வகையிலும் தகுதி அற்றவர்கள் என்றே கொள்ளப்படவேண்டும். காரணம் இப்பாடத்தை கற்பதற்கு வேண்டிய அடிப்படை அறிவு எதனையும் அவர்கள் கீழ் வகுப்புகளில் பெற்றுக் கொள்ளாமையே. குறிப்பாக தமிழ் சமயம் விஞ்ஞானம் கணிதம் முதலிய பாடங்கள் ஆரம்ப வகுப்புகளில் இருந்து கற்பிக்கப்படுகின்றது. இது மாணவர்களுக்கு நல்ல அடிப்படையை தோற்றுவிக்கின்றது. இதேவேளை புவியியல் பாடத்திற்கு அடிப்படையாக சமூகக்கல்விப் பாடம் அமைந்த போதும் கூட புவியியல் பாடத்தை பிற்காலத்தில் படிக்க வேண்டும் அல்லது அதற்கு உதவ வேண்டும் என்ற அடிப்படையில் கற்பிக்கப்படுவதில்லை.மாணவர்களும் உயர்வகுப்பிற்கு இது எமக்கு உதவும் என்று தெரியாத காரணத்தினால் அதை விரும்பிக் கற்பதுமில்லை. இதுவே புவியியல் பாடத்தை அவர்கள் நாடாமைக்கும் அதை ஒரு சுமை நிறைந்த தமக்கு பொருத்தமற்ற பாடமாகவும் நினைத்து ஒதுக்குவதற்கு காரணமாகும்.

மேற்கூறிய காரணங்களைத் தவிர்க்கும் வண்ணமும் உயர்வகுப்பிற்கு வந்ததும் புவியியற் பாடத்தை விரும்பித் தெரிவு செய்து கொள்ளவும் அதை ஆர்வமுடன் கற்கவும் அதன் மூலம் தான்வாழும் பிரதேசத்தினதும் நாட்டினதும் முழு உலகினதும் பௌதீக அமைப்பு தன்மை இயல்புகளை அறிந்து கொள்ளவும் இது எவ்வளவு தூரம் மனித நடவடிக்கைக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும், அபிவிருத்தி என்பவற்றிற்கும் உதவுகின்றது. என்பதை கண்டறிந்து தனது பங்கை தெரிந்து கொள்ளவும் ஏற்ற வகையில் ஆசிரியர்கள் சரியான அடிப்படையை மாணவர்களுக்கு ஆண்டு 9, 10, 11 வகுப்புகளில் தொடர்ச்சியாக ஏற்படுத்திக் கொடுப்பதோடு அவர்கள் உயர்தர வகுப்பில் பாடங்களை தெரிவு செய்யும்போது அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து இப்பாடத்தை தேர்ந்தெடுக்க அறிவுரை வழங்க வேண்டும். அப்பொழுது தான் புவியியற் பாடத்தைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அதன் மூலம் எதிர்காலத்தில் புவியியலை கற்பிப்பதற்கு போதிய ஆசிரியர்களை உருவாக்கக்கூடியதாக இருக்கும். அதேவேளை தனது

வாழ்க்கையை பல்வேறு துறைகளில் ஈடுபடுத்துவதன் மூலம் தன்னை ஒரு முழு ஆளுமை வளர்ச்சி உள்ளவனாக மாற்றிக் கொள்வதோடு நாட்டின் அபிவிருத்தியிலும் பங்கு கொள்ளக்கூடியதாக தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவும் முடியும்.

புவியியற் பாடத்தின் முக்கியத்துவத்தையும் அதன் அவசியத்தையும் அறிந்து உணர்ந்துள்ள நாம் சிலவேளைகளில் அதை கற்ப்பிப்பதற்கு முன்வருவதில்லை பல பாடசாலைகளில் புவியியற் பாடத்தை கற்க மாணவர்கள் ஆர்வம் கொண்டுள்ளபோதிலும் பட்டப்படிப்பில் புவியியலை ஒரு பாடமாக கற்ற ஆசிரியர்கள் அப்பாடத்தை கற்ப்பிக்க முன்வராமல் ஏனைய பாடங்களில் நாட்டம் கொள்வதால் மாணவர்களின் விருப்பும் நாட்டமும் மழுங்கடிக்கப்பட்டு பொருத்தமற்ற பாடங்களை தெரிவு செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். அல்லது பாடசாலையில் இருந்து விலகி புவியியற் பாடம் கற்ப்பிக்கப்படும் வேறு பாடசாலைகளை நாடிச் செல்கின்றனர். இந்நிலை தவிர்க்கப்பட்டு புவியியற் பாடத்தை ஒரு பாடமாக கற்ற பொதுப் பட்டதாரி ஆசிரியர்களும் சிறப்புப் பாடமாக கற்ற பட்டதாரிகளும் புவியியற் பாடத்தின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் உணர்ந்து அதை கற்பிக்க முன்வருவார்களேயானால் இது தொடர்பாக எழும் சகல பிரச்சினைகளையும் இலகுவாக தீர்த்துக்கொள்ளமுடியும். அதே நேரம் இத்தகைய ஆசிரியர்களே ஆண்டு 9, 10, 11 சமூகக்கல்வி பாடத்தினைக் கற்ப்பிக்க தம்மை ஈடுபடுத்துகின்ற பொழுது இப்படி எதிர்காலத்தில் மிகச் சுலபமான தொன்றாக ஆசிரியருக்கும் மாணவருக்கும் காணப்படும். இதேவேளை பாடசாலை நிர்வாகத்தினரும் புவியியற் பாடத்தை பாடசாலைகளில் மாணவர்கள் கற்பதற்கும், ஆசிரியர்கள் கற்பிப்பதற்கும் ஏற்ற வசதிவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பார்களே ஆனால் இத்துறை சார்ந்த அனைவராலும் வரவேற்கப்படுவார்கள் என்பது திண்ணம்.

✧✧✧

மத்தியின் வணிகம் வளமுடன் சிறக்க வாழ்த்துக்கள்.

# கிறில்ஸ் சைனிஸ்

124 முதலாம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்

1. 1816 - 08- 01 எமது கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
2. 1881 எமது கல்லூரியில் கிரிக்கற் விளையாட்டு ஆரம்பிக்கப்பட்டது.
3. 1894 எமது கல்லூரியில் உதைப்பந்தாட்ட விளையாட்டு ஆரம்பிக்கப்பட்டது.
4. 1916 எமது கல்லூரியில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
5. 1920 எமது கல்லூரியில் வர்த்தகக் கல்வி ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாண்த்தில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட எமது கல்லூரியே இவை அனைத்தையும் யாழ்ப்பாணத்திற்கு அறிமுகம் செய்து வைத்தது.

# தமிழ்த் தட்டெழுத்தச்சின் தந்தை இராமலிங்கம் முத்தையா.

கா. மாணிக்கவாசர்
நூலகர்
யாழ். மத்திய கல்லூரி

இக்கட்டுரை சென்னையிலிருந்து வெளிவந்த சரஸ்வதி 1959 இதழில் பிரசுரமாகி மஞ்சரி ஆவணி 1959 இதழில் பிரசுரம் செய்யப் பட்டதன் சுருக்கம்.



ஆங்கிலத்தில் 26 எழுத்துக்களே இருக்கின்றன. தமிழில் உயிர் எழுத்துக்கள் 12, மெய்எழுத்துக்கள் 18, உயிர்மெய் எழுத்துக்கள் 216, ஆயுத எழுத்து 1, ஆக 247 எழுத்துக்கள் இருக்கின்றன. மேலும் வட மொழிமூலம் தமிழ் மொழியில் இடம் பெற்று விட்ட எழுத்துக்களும் குறியீடுகளும், எண்களும் விசைப்பலகையில் இடம் பெற வேண்டும். ஆங்கிலத்திலும் பார்க்க ஐந்து மடங்கு கூடுதலான எழுத்துக்களையுடைய தமிழ் மொழியை அதே எண்ணிக்கையுள்ள விசைகளில் அமைக்க வேண்டும். ஆங்கில மோகம் வானளாவி நின்ற அந்நாளில் இதை நிறைவேற்றும் தமிழ்ப்பற்றும், திறமையும், பணமுதலீடு செய்யும் துணிவும் உள்ளவர்கள் இருந்தவர் போலும் பண முதலீடு செய்யினும் தட்டச்சு விற்பனையாகுமா? இருந்தும் எண்ணித் துணிந்த கருமம் நிறைவானது.

யாழ்ப்பாணத்தின் சுண்டுக்குளியில் 24.02.1886 ல் பிறந்த முத்தையாவின் தந்தை இராமலிங்கம் சைவத் தமிழ்ப் பண்பாடுடையவராயிருந்தார் இராமலிங்கத்தின் ஐந்து ஆண், நான்கு பெண் பிள்ளைகளுள் கடைசிப் பிள்ளையே தமிழ்த்தட்டச்சைக் கண்டு பிடித்த இரா. முத்தையா இவர் ஏழு வயதாயிருந்த போதே இவரது தந்தையார் இவ்வுலக வாழ்வை நீத்தார். இதனால் தாயாரின் பராமரிப்பில் வளர்ந்து கல்விபயின்று வந்த சில வருடங்களில் தாயாரும் காலமானார். குடும்பத்தில் இளையவனான போதிலும் சுறுசுறுப்பான வயதாகையால் 1907 ஆம் ஆண்டு மலாயா நோக்கிப் புறப்பட்டார். சிங்கப்பூரை அடைந்ததும் போர்னியோ தேசம் போக இவர் முயற்சித்த போது டானியல் போதகர் என்பவர் இவரை புகையிரத இலாகாவில் வேலைக்கு அமர்த்தினார். தனது தனித்துவத்தை வெளிப்படுத்தவும், வளர்க்கவும் முடியாதிருந்த காரணத்தால் ஐல்ஸ்பெரி அரசு கார்லண்ட் என்ற பிரபல வர்த்தக ஸ்தாபனத்தில் வேலையேற்று இரண்டு வருடங்களில் அதன் பிரதம இலிகிதராகப் பதவி உயர்வு பெற்று 1930 ஆம் ஆண்டு வரையில்பணி புரிந்தார்.

இக்காலத்தில் இவர் உயர்தர கணக்கியல், பொருளியல், தட்டெழுத்து, சுருக்கெழுத்து, ஆகிய வேலைகளைக் கற்றார். 1913 ஆம் ஆண்டில் நடைபெற்ற "ஸ்லோன்டுப்னோயன்" சுருக்கெழுத்துப் போட்டியில் அனைத்துலக வெள்ளிப்பதக்கம் இவருக்குக் கிடைத்தது. இவர் சமய நூல்கள், கைத்தொழில் நூல்களையும் கற்றிட்டார். திறமையுடையவராக சுய முயற்சியில் அதிக நம்பிக்கையும், முன்னேற்றமும் உடையவராக இருந்தார். எவ்விடயத்தையும் சீர்தூக்கிப் பார்த்த பின் அதனை எடுத்துச் செல்வதற்கு துணிவு இவரை ஆட்கொண்டுவிடும்.

இவர் கடமையாற்றிய ஸ்தாபனத்தில் இருந்த ஒழுங்கும், நிர்வாகமும், திறமையும் இவரைப் பெரிதும் கவர்ந்ததால் தமிழ்மொழி மூல நிர்வாகத்திற்கு தட்டச்சு இல்லாக் குறையையும் கண்டார். ஆகவே தமிழ்த்தட்டச்சு விசைப்பலகையை வடிவமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு 247 எழுத்தின் வடிவத்தை ஒரு புறமும் தட்டச்சின் 46 விசைகளை மறுபக்கத்திலும் வைத்து இத்தனை

எழுத்துக்களையும் எவ்வாறு இவ்விசைகளில் அமைக்கலாம் என மீண்டும், மீண்டும் யோசித்தார். தனது ஆங்கிலேயப் பொறியியல் நண்பர்களிடம் ஆலோசனை கோரினார். அபிப்பிராயங்கள் கிடைத்த போதிலும் போதிய எழுத்து விசைகள் கிடைக்க வில்லை.

ஆகவே 72 எழுத்துக்கள் வரையில் குறைக்க முடிந்ததால் வெற்றியுடன் தட்டச்சை நிர்மாணிக்கும் பணியை மேற்கொண்டார். தாம் வடிவமைத்த தட்டச்சை "ஸ்ராண்டேட்" பெரிய தட்டச்சு என பெயரிட்டார். அது சிறப்பான பல அம்சங்களை உடையதாயிருந்தது. தமிழிழ் 247 எழுத்துக்கள் இருப்பதால் அவை எல்லாவற்றையும் நான்கு வரிசைகளில் உள்ள 46 விசைகளில் அமைக்க முடியாது. எனவே பல எழுத்துக்களுக்குப் பொதுவாயுள்ள குறியீடுகளைத் தனித்தனி விசைகளில் அமைந்தது. எனவே பல எழுத்துக்களுக்குப் பொதுவாயுள்ள குறியீடுகளைத் தனித்தனி விசைகளில் அமைத்து அவைகளைத் தேவையான எழுத்துக்களுடன் சேர்த்து அச்சடிக்ககூடியதாக விசைபலகையை அமைக்க வேண்டும். இரண்டு விசைகளை அழுத்திய பின்பே அச்சை நகரச்செய்யவேண்டும். நகராவிசை சிலருக்கு கைகொடுத்தது. அதாவது "தீ" என்ற எழுத்திலுள்ள விசிறியை அடிக்கும் பொழுது அச்சு நகராது. எஞ்சி உள்ள "த" வை அடித்த பின் அச்சு நகரும். மெய்யெழுத்துக்களும் இப்படியே அச்சாகின்றன. இவர் உபயோகித்த நகரா விசையை இன்றும் தட்டச்சு உற்பத்தியாளர் உபயோகிக்கின்றனர்.

ஆங்கில தட்டச்சைப் போலல்லாது தமிழ் தட்டச்சுக்களின் விசைப்பலகை அமைப்பு வெவ்வேறு விதமாக இருக்கிறது. ஒரு யந்திரத்தில் பழகியவர் அதே முறையில் வேறொரு யந்திரத்தில் அச்சடிக்க முடியாது. இதை ஒருமைப்படுத்த எண்ணிய சென்னை அரசினர் 1955 ஆம் ஆண்டில் ஒரு குழுவை நிறுவினார்கள். அதன் சிபார்சுப்படியும் பிறருடைய ஆலோசனையின் பேரிலும் இப்பொழுது விசைப்பலகையமைப்பில் ஒருமைப்பாடு ஏற்பட்டிருக்கிறது. ஆயினும், முத்தையா அவர்களின் கண்டு பிடிப்பிலிருந்து அதிக மாற்றம் புதிய முறையில் இல்லை. புதிய அமைப்பிலில்லாத சில சிறப்பான அம்சங்களும் இவருடைய தட்டச்சில் உண்டு. நு,நூ ஆகிய எழுத்துக்கள் முத்தையாவின் தட்டச்சில் இருக்கின்றன. இவை புதிய அமைப்பில் சேரவில்லை. இப்பொழுது கி,தி ஆகிய எழுத்துக்களிலுள்ள விசிறிகள் அந்த எழுத்துக்களின் மேற்கோட்டின் நுனியில் இருக்கின்றன. இது தமிழ் எழுத்தைப் பிழையாக்குவதாகும். முத்தையா அவர்களின் விசைப்பலகை அமைப்பில் கி,தி எழுத்துக்களுக்கு ஒரு விசிறியும் நி, னி முதலிய எழுத்துக்களுக்கு வேறு ஒரு விசிறியும் அமைத்திருப்பது குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

சில தட்டச்சுகள் இரண்டு கை விரல்களுக்கும் சமமாக வேலை கொடுக்கவில்லை. இந்தக் குறையைத் தம் தட்டச்சில் இவர் நீக்கியிருக்கிறார். தமிழெழுத்துக்களில் ய,ள,க,ப,ர,ம,ட,ந,ச,ல,ர,ன,டி, ஆகிய எழுத்துக்கள் அடிக்கடி உபயோகமாகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டார்கள். ஆகவே, அரசினருடைய விசைபலகையின் கீழ் இடத்தில் இவை அமைந்திருக்கின்றன. முத்தையா அவர்களின் விசை பலகை அமைப்பும் இதையொட்டியே இருக்கின்றதெனில் இவர் எத்தகைய ஆராய்ச்சியின் பின் அதை உருவாக்கியிருக்க வேண்டுமென நாம் ஊகிக்கலாம்.

முதலாவது உலக யுத்தம் முடிந்த பின்பு, தாம் கண்டுப்பிடித்த விசைப்பலகையை ஜெர்மனியிலுள்ள "சைடல் அன் நௌமான்" என்ற வியாபார ஸ்தாபனத்திடம் இவர் ஒப்புவித்து அச்சுக்களை உருவாக்கினார். பெருமளவில் அதை இறக்குமதி செய்து விற்றும் வந்தார். இதோடு இவருடைய இவருடைய முயற்சி முற்றுப் பெறவில்லை. தாம் அமைத்த விசைப் பலகையில் சில குறைகள் இருக்கக் கண்டார். அவைகளை நீக்கி "பிஜோ", "ஐடியல்" ஆகிய "போர்ட்டபிள்" தட்டச்சுக்களை உருவாக்கினார். இவைகளை பின்பற்றியே "ஆர்.ஸி.", "எரிகா", "யுரேனியா", "ஹல்டா" போன்ற தட்டச்சுகள் உருவாக்கபட்டன.

முத்தையா அவர்கள் சிறந்த சமூக சேவையாளராகவும் விளங்கினார். காலஞ்சென்ற தெய்வசிகாமணி ஆசாரியாருடன் சேர்ந்து குடிசைக் கைத்தொழிலின் அபிவிருத்திக்கு முயற்சிகள் பல செய்தார்.

# பல்கலைக் கழக அனுமதிக்கு தகுதிபெற்றோர் – 1994

1. S. ஆகாஷ்
2. P. ஆனந்தராசா
3. M. ஜெகன் மோகன்
4. R. லோகநாதன்
5. J. நிரோஷாநந்
6. A. ஜெயபாலன்
7) N. அருந்தவன்
8) R. இர்ராஜேஸ்வரன்
9) N. ராஜ்குமார்
10) S. ராஜேஸ்வரன்
11) A. ராமதேவன்
12) Y. ரமேஸ்
13) T. ரதீஸ்குமார்
14) K. சபாநாதன்
15) S. சதீஸ்தரன்
16) B. சத்தியகுமார்
17) V. சிவபாலன்
18) S. சிவாஸ்கரன்
19) K. சொரூபநாதன்
20) S. தயாகரன்
21) M. திருக்குமரன்
22) K. உமாகஜன்
23) V. வீரகுணசிங்கம்
24) K. விஜயகுமார்
25. P. விஜயநாதன்
26) S. விமலகுமார்
27) J. பென்சமின்
28) N. கனிஷ்டஉமாகாந்
29) A.டின்ஸ் ராஜ்குமார்
30) S. யசோதரன்
31) R. ஜெயரட்ணம்
32) S. கமலதாசன்
33) P. கணேஷ்குமார்
34) T. கரிகரன்
35) V. கேதீஸ்வரசர்மா
36) R. கிரிதரன்
37) I. கிரிதாஸ்
38) N. மயூரன்
39) N. நிர்மலாநந்தம்
40) L. நிக்ஸன்
41) M. நிஸ்சன்ராஜ்குமார்
42) K. பரராசலிங்கம்
43) G. பிரதாபன்
44) V. பிரபாகரன்
45) M. பிரபாகர்
46) J. பிறேமதாஸ்
47) P. ரதிரூபன்
48) K. சரச்சந்திரா
49) S. செல்வரமேஸ்
50) K. சிவகணேஷா
51) S. சிவரூபன்
52) S. சிவனேசன்
53) T. சிவரூபன்
54) S. கிரிகரன்
55) T. சுஜேந்திரன்
56) K. சுதர்சன்
57) T. சுவேந்திரராஜா
58) V. வரதராஜன்
59) K. வேலநாதன்
60) K. முகுந்தன்
61) S. விஜிதரன்
62) K. யோகேஸ்வரன்
63) M. சிறிக்கந்தராசா

# பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் – 1993

1. N. கனிஷ்ட உமாகாந்
2. A. டீன்ஸ் ராஜ்குமார்
3. S. யசோதரன்
4. S. கமலதாசன்
5. P. கணேஸ்குமார்
6. T. கரிகரன்
7. A. கிரிதரன்
8. N. குமணதாஸன்
9. N. மயூரன்
10. B. நிமலன்
11. N. நிக்ஸன் ராஜ்குமார்
12. K. பரராசலிங்கம்
13. M. பிரபாகரன்
14. G. பிரதாபன்
15. V. பிரபாகர்
16. J. பிரேமதாஸ்
17. P. ரதிரூபன்
18. S. சரச்சந்திரா
19. S. செல்வரமேஸ்
20. S. சண்முகதாசன்
21. K. சிவகணேசா
22. S. சிவகுமாரன்
23. S. சிவநேசன்
24. T. சிவரூபன்
25. S. சிறீகரன்
26. K. சுரேஸ்
27. T. சுவேந்திரராஜா
28. N. தவேந்திரராஜ்
29. S. திருக்குமாரன்
30. V. வரதராஜன்
31. K. வேலநாதன்
32. R. விக்னராஜ்
33. S. அன்பழகன்
34. S. பாஸ்கரன்
35. S. இந்திரகுமார்
36. S. ஜீவராஜ்
37. G. காண்டீபன்
38. S. மோகனதாஸ்
39. N. முகுந்தன்
40. N. பிரபாகரன்
41. G. சிறீதரன்
42. V. தவப்புதல்வன்
43. N. விஜியகுமார்
44. K. வின்சன்
45. S. வெஸ்லி ரவீந்திரன்

# அன்பளிப்பாளர்கள்

| | | |
|---|---|---|
| 1) | வர்த்தக மாணவ மன்றம் [ 1994-95]<br>யா. ம. க | 21 885/= |
| 2) | யோ. சிவரஞ்சன் | 500/= |
| 3) | சி. வரதராஜன் | 500/= |
| 4) | அண்ணா வர்த்தக நிறுவனம் | 250/= |
| 5) | செ. இலட்சுமணன் | 100/= |
| 6) | மழலை புகைப்பட நிலையம் | 100/= |
| 7) | வே. பொண்ணம்பலம் | 100/= |
| 8) | S.R. கமலோதயன் | 100/= |

## நன்றிகள் ஆயிரம் உங்களுக்கே

பவள விழாக் காணும் எமது கல்லூரியின் வர்த்தகக் கல்வியை வாழ்த்திடும் முகமாகவும் வளர்த்திடும் நோக்குடனும் வெளியிடப்படும் மத்திய வணிகம் 3 என்ற மலர் பவள விழா சிறப்பு மலராக வெளிவருகின்றுது. இம் மலர் வெளிவர உதவிய .........................

★ எமது கல்லூரியின் பழைய மாணவரும் ராஜன்ஸ் இசைக்குழுவின் அமைப்பாளரும் ஆகிய யாழ் ரமணன் அவர்கள் குறைந்த கட்டணத்தில் இன்னிசைக் கானத்தை நடாத்தி எமக்குத் தேவையான நிதியுதவியைச் சேகரிக்க உதவியமைக்கும்.

★ இம் மலரை வெளியிடுவதற்கான நிதியுதவியைச் சேகரிப்பதற்காக உதவிபுரிந்த க. பொ. த உயர்தர 95ம் ஆண்டு மாணவர்களுக்கும்,

★ நாம் இம் மலரினை வெளியிடுவதற்கு அனுமதி கேட்டவுடன் எதுவித மறுப்பும் இன்றி அனுமதி வழங்கியதுடன் இம் மலரிற்கான உதவிகளைச் செய்து தந்த எமது கல்லூரியின் அதிபர் அவர்கட்கும்,

★ இம் மலர் சிறப்புறவெளிவர ஆசிகளை வழங்கிய அனைவருக்கும்

★ யாழ்ப்பாணத்தில் வர்த்தகக் கல்வி பற்றி எழுதிய திரு.சி.பிலிப்நேரி, எமது கல்லூரியில் வர்த்தகக் கல்வி பற்றி எழுதிய செல்வி. பொன். செல்லையா, கலைப்புலவர் பற்றி எழுதிய திரு.ஆ.சின்னத்தம்பி ஆகிய மூவருக்கும்,

★ இந்த பவள விழா சிறப்பு மலரின் சிந்தனைக்கு விருந்தாகத்திழும் கட்டுரைகளை எமக்கு வழங்கிய பழைய மாணவர்கள்,ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும்,

★ தனது தேவைகளையும் பாராது எமக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்கி எம்மை வழிநடத்திய எமது மன்றக் காப்பாளர் அவர்கட்கும்,

★ இக் கட்டுரைகளை சிறந்த முறையில் சரிபார்த்துத் தந்த எமது கல்லூரி ஆசியர்களுக்கும்,

★ இம் மலரை கொழும்பில் கணணி முறையில் அச்சிட உதவிய *Color Graphic* அச்சகத்திற்கும் அச்சக ஊழியர்களுக்கும்.

★ கொழும்பில் இம் மலரை அச்சிடுவதற்கு உதவிய எமது மன்ற செயற்குழு உறுப்பினர்களின் உறவினர்களுக்கும் அவர்தம் நண்பர்களுக்கும் மற்றும் பழைய மாணவர்கள் ஆசிரியர்களுக்கும்.

★ எமக்கு உதவி புரிந்தவர்களில் இங்கு குறிப்பிடத் தவறிய அத்தனை பேர்களுக்கும்.

★ எமது உள்ளங்கனிந்த ஆயிரமாயிரம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*செயலாளர்.*
*வர்த்தக மாணவ மன்றம்*
*யாழ். மத்திய கல்லூரி.*

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

மத்தியின் வணிகம் சிறப்புற நல்
வாழ்த்துக்கள்

# இலங்கை வங்கி

பெரும்பாலும் உயர்ந்த வட்டியும் உச்ச தன்மைகளும் ஒன்றாகச் செல்வதில்லை. ஆனால் இலங்கை வங்கி சிறுவர் சேமிப்புத்திட்டத்தில் இவை வந்து செல்கின்றன. சிறுவர் சேமிப்புக் கணக்கின் பிரதான தன்மைகள்

❋ சாதாரண சேமிப்பு கணக்கை விட 2 வீதம் அதிகரித்த வட்டி
❋ கணக்கு வைத்திருப்பவர்களுக்கு ஊக்குவிப்புக்கள் மற்றும் பரிசுகள் பெறுவதற்கான வாய்ப்புக்கள்.
❋ உங்கள் பண வைப்புக்களுக்கு அதி உன்னத பாதுகாப்பு.
❋ மாணவர்களுக்கு கடன் வசதிகள்.
❋ நாடு முழுவதும் உள்ள சகல இலங்கை வங்கிக் கிளைகள் மூலம் சௌகரியமான வங்கி நடவடிக்கைகள்.

ஒவ்வொரு சிறுவரது எதிர் காலத்திற்கும் முக்கியமானதாகக் கருதப்படும் நன்கு திட்டமிட்டதும் உறுதிப்பட்டதுமான ரீதியில் பாதுகாப்பு. இன்றே உங்கள் அருகில் உள்ள இலங்கை வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

STACKS

ஒவ்வொரு சிறுவரும் சேமிப்புக் கணக்குடன் வளர வேண்டும் என்பதே எமது விருப்பம்.

## இலங்கை வங்கி

உலகளாவிய ரீதியின் இனைந்த தேசத்தின் வங்கியாளர்.

STACKS